உண்மையைத் தேடும் எழுத்தைவிட உயர்ந்த இலக்கியம் இல்லை.

# ஞானரதம்

— புதுமை இலக்கிய மாத இதழ் —

ஆசிரியர்: ஜெயகாந்தன்

நிர்வாக ஆசிரியர்: தேவ. சித்ரபாரதி



4
1970

## இந்த இதழில்


ஜெயகாந்தன்
ராம்மோகன்
எஸ். டி. போஸ்
நீலபத்மநாபன்
பாக்ஸர்
வல்லிக்கண்ணன்
செல்வி
வே. மாலி
வெ. சாமிநாதன்
நகுலன்
கல்யாண்ஜி
ஷண்முக சுப்பையா
பரணன்
திலகா
மணிவண்ணன்
பி. ச. குப்புசாமி
ஜேவியர் ஹீராத்



ஆசிரியர் குழு:
ந. முத்துசாமி
ஒய். ஆர். கே. சர்மா
ஜியாவுடீன்
வையவன்
ஞானக்கூத்தன்


விலை
50
பைசா


கதை கட்டுரைகளை, நிர்வாக ஆசி
சக்தி இல்லம், சென்னை-36.
முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

# காலை வரப்போகிறது

நாலுகால் முறுக்கி
நல்லகட்டில் சேர்ந்திணைந்து

நீலக்கறுப்பி என்னை
நெஞ்சோடு அணைத்திருந்தாள்

கனவில்லாத் தூக்கம்
கவிதை இல்லா வெறும் பிதற்றல்

உணர்வில்லா உடலின்பம்
ஓசை இல்லாச் சங்கீதம்

எல்லாம் கலைகிறது
இரவு மகள் போகின்ருள்!

சேவல் குரல் எழுப்பிச்
செங்கொண்டை சிலிர்த்தடித்துக்

கூவிக் கலைக்கிறது
கொடும்பொழுது விடிகிறது

காலைவரப்போகிறது
கண்ட இன்பம் பாழாச்சு

ஜெயகாந்தன்

---

அட்டைச் சித்திரம்: எஸ். வைதீஸ்வரன்.
முகப்புச் சித்திரம் (லெனின்): கே. ஆனந்த்.

# முன்னோட்டம்

முன்னால் வந்த ஞானரதம் இதழ்பற்றி முன்னோட்டத்தில் சர்வே செய்கிற காரியத்தை இந்த இதழில் நான் விட்டு வைக்கிறேன். இருந்தாலும் ஒரு விஷயத்தைச் சொல்லியே ஆகவேண்டும். அது என்னவெனில் சென்ற இதழில் ஏற்பட்டுள்ள எழுத்துப் பிழைகளும் இலக்கணத் தவறுகளுமாகும்.

சென்ற இதழ் ஞானரதம் பற்றிக் கடிதம் எழுதிய வாசகர்களில் இதைக் குறிப்பிடாதவர்கள் ஒருவர் கூடக் கிடையாது. இங்கே, தெரியாது நேர்ந்து விட்ட பிழைகளுக்கும் கூட வக்காலத்து வாங்கிச் சரி என்று சாதிக்கிற ஒரு போக்கினை நான் கடைப்பிடிக்கச் சம்மதிக்க மாட்டேன்.

இந்தப் பிழைகள் திருத்திக் கொள்ளப் பட வேண்டும். இந்த இதழிலே திருத்தப்பட்டிருக்கிறது—இயன்றவரை—என்று உங்களுக்குச் சமாதானம் செய்கிற, சொல்கிற, இந்தச் சந்தர்ப்பத்தில், அண்மையில் நடந்த ஒரு விழாவில் தமிழில்

எழுத்துப் பிழை, இலக்கணத் தவறு குறித்து எழுந்த சர்ச்சை ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

சமீப காலத்தில் ஆனந்த விகடன் மூலம் வாசகர்களுக்கு அறிமுகமான எஸ். வெங்கட்ராமனின் பிரயாணம் என்ற கதைத் தொகுதியின் வெளியீட்டு விழா ஒன்று நடந்தது.

இதில் வாழ்த்துரை வழங்குவோர்களில் ஒருவனாக நானும் சென்றிருந்தேன்.

விழாவுக்கு திரு. கே. வி. சுப்பையா தலைமை வகித்திருந்தார். பல தமிழ் எழுத்தாளர்களும், தமிழ் தெரியாத அதாவது அவர்களின் கூற்றுப்படித் தமிழ் இலக்கணம் தெரியாத எழுத்தாளர்களும் தமிழ் மட்டுமே அறிந்த, வேறொன்றுமே தெரியாத புலவர்களும் நிறையப் பேர் வந்திருந்தார்கள்.

வாழ்த்துவதற்கும் பாராட்டுவதற்கும் என்று தொடங்கிய விழாவில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

வெங்கட்ராமன் தனது கதையில் ஏதோ ஒரு இடத்தில் 'ஒருத்தி' என்று எழுதுவதற்குப் பதிலாக 'ஒருவள்' என்று எழுதியிருக்கிறார்.

இலக்கணப்படி இது தவறு என்பதைத் தமிழ் இலக்கணம் பயின்ற யாரும் மறுமொழி இல்லாமல் ஒப்புக் கொள்வர்.

இந்தத் தவறினை ஒருவர் எடுத்துச் சொல்ல, விழாவிற்குத் தலைமை வகித்த திரு. சுப்பையா அவர்கள் இப்படி எல்லாம் பார்ப்பது இலக்கியம் வளர்வதற்கு உதவாது என்று சொன்னார்.

அதற்கு மேலும் ஓரடி சென்று "ஒருவள் என்று ஏன் எழுதக் கூடாது" என்றும் அவர் கேட்டார். "எழுதலாம்" என்றும் வாதித்தார்.

அங்கு வந்திருந்த சில புலவர்கள் இந்தப் பேச்சினால் முகம் சிவந்தனர்.

தனக்கு ஆதரவாக திரு. சுப்பையா டி. கே. சியை

இதன்பின் அவர் மேலும் கூறியது கோட்பாட்டு ரீதியான கூற்ருக விளங்கியது ;

"ஆனல் நாமோ கம்யூனிஸ்டுகள். நாம் வெறுமனே சோம்பி நின்று விடவோ அராஜகம் தங்கு தடையற்று தலைவிரித்தாட இடம் கொடுக்கவோ கூடாது. இந்த வளர்ச்சிப் போக்கை நாம் திட்டமிட்ட முறையில் வழி நடத்த வேண்டும் ; அதன் விளைவுகளை உருவாக்க வேண்டும்...... எழில் மிக்கனவற்றைப் பாதுகாக்க வேண்டும். அது 'பழசாக' இருந்தாலும்கூட, அதனை ஓர் முன்மாதிரியாக, ஒரு திரும்பு முனையாக எடுத்துக்கொள்ள வேண்டும். உண்மையிலேயே எழில்மிக்கனவற்றை நாம் ஏன் பார்க்க மறுக்க வேண்டும்? அது 'பழசு' என்ற ஒரே காரணத்துக்காக மேலும் வளர்ச்சி பெறுவதற்கு அதனை ஒரு தொடக்க நிலையாகக் கொள்வதற்கு ஏன் மறுக்க வேண்டும்? புதியதை 'அது புதியது' என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் நாம் ஏன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க வேண்டும்? இது அபத்தம், சுத்த அபத்தம! இதில் இங்கு பெரும் அளவுக்கு மாய்மாலம் நிலவுகிறது; மேலை நாட்டில் ஆட்சி செலுத்தி வரும் கலை மோஸ்தர்களைத் தம்மையறியாமலே மதித்துப் போற்றும் போக்கு நிலவுகிறது..."

பின்னர் எந்த சோவியத் கலைஞரும் — உண்மையான சோஷலிசக் கலை விற்பன்னரும் அடிப்படையான வழிகாட்டியாக மேற்கொள்ள வேண்டிய விஷயம் பற்றி அவர் கூறினர் :

"ஆனல் கலையைப் பற்றிய நமது அபிப்பிராயம் முக்கியமான விஷயம் அல்ல. கோடானுகோடியாகவுள்ள மக்கட்தொகையில் ஒரு சில நூறுபேருக்கு, அல்லது சில ஆயிரம் பேருக்குக் கலை எத்தகையதாக இருக்கிறது என்பதும் அத்தனை முக்கியமானதல்ல. கலை மக்களுக்கே உரியது. அதன் வேர்கள் உழைக்கும் வெகுஜனங்களின் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருக்க வேண்டும். வெகுஜனங்கள் அதனைப் புரிந்து கொள்ள வேண்டும் ; நேசிக்க வேண்டும். அது அவர்களை ஒன்றுபடுத்த வேண்டும் ; அவர்களது உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் மனேவுறுதியையும் மேலோங்கச் செய்ய வேண்டும். அவர்களுக்குள் குடிகொண்டுள்ள கலைத் திறமையை அது இயங்குமாறு தூண்டிவிட வேண்டும் ; வளர்க்க வேண்டும். தொழிலாளி மக்களுக்கும் விவசாய மக்களுக்கும் கறுப்பு ரொட்டி தேவைப்படும்போது, நாம் ஒரு சிறுபான்மையினருக்கு அருமையான இனிப்புக் கேக்கைப் பரிமாறிக் கொண்டிருக்க முடியுமா? இதனை எழுத்துக்கு எழுத்து அப்படியே புரிந்து கொள்வதோடு மட்டுமல்லாது, உருவகமாக

வும் புரிந்து கொள்ள வேண்டும்; நாம் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் நம் கண்முன் எப்போதும் கொண்டிருக்க வேண்டும். அவர்களுக்காகவே செயல்பட, புரிந்து கொள்ள நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இது கலை கலாசாரத் துறைக்கும் பொருந்தும்.''

லெனின் தமது வாழ்நாட் காலத்தின் இறுதிவரையிலும் தமது இலக்கிய ஆர்வத்தையும், கலையார்வத்தையும் விடாது கைக் கொண்டு வந்தார்.

அவரது மரணத்துக்கு இரு நாட்களுக்கு முன்னர் குரூப்ஸ்காயா அவருக்கு ஜாக் லண்டனின் ''உயிராசை'' என்ற கதையை வாசித்துக் காட்டினார்; அவர் அதனைச் சிந்தனையில் மூழ்கியவராகக் கவனத்தோடு கேட்டார். காயமுற்றுக் களைத்துப்போய், குற்றுயிரும் குலையுயிருமாகத் தனது விமோசனத்தை, தனது குறிக்கோளை நோக்கி முன் தவழ்ந்து சென்ற அந்தக் கதையில்வரும் மனிதனை, பின்னால் ஒரு நோஞ்சான் ஓநாய் பின்தொடர, உயிரைக் காக்க ஊர்ந்து சென்ற அந்த மனிதனை லெனினும் தொடர்ந்து சென்றார். அவன் ஊர்ந்து சென்றான்; இறுதியில் வெற்றியும் பெற்றான். இத்கதையை பெரிதும் விரும்பினார்.

விளதீமிர் இலியிச் வாழ்க்கையை நேசித்தார். இலக்கியத்திலும் மனிதனுக்கு உத்வேகமூட்டிய, மனிதன் மீதுள்ள நம்பிக்கையைப் பலப்படுத்திய, வெல்லற்கரிய மனோதிடத்திலும் நன்மையின் வெற்றியிலும் உள்ள நம்பிக்கையைப் பலப்படுத்திய யாவற்றையும் அவர் நேசித்தார். சிறுவனாக இருந்தபோது அவர் மனப் பாடமாகப் படித்த லெர்மந்தோவின் மித்சிரியிலிருந்து, இளமைக் காலத்தில் அவர் படித்த செர்னிசெவ்ஸ்கியின் 'செய்ய வேண்டியது என்ன' என்ற நூல் தொடங்கி, அவரது இலக்கிய விருப்பம் வளர்ந்து வந்த திசை வழிதான், மனிதனின் வெல்லற்கரிய தன்மையில் உள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்திய அந்தச் சிறுகதையையும் ஆர்வத்தோடு கேட்கத் தூண்டியது.

(நன்றி:—சோவியத் செய்தித்துறை, சென்னை)

★

அடுத்த இதழில்

சுயதரிசனம்:—

ந. சிதம்பரசுப்ரமணியம்

## சகாப்த புருஷர்

லெனின் அவர்களுடைய அறிவு மிகவும் தெளிவு பெற்றது; அவருடைய அறிவு நன்கு சிந்தித்துத் தெளியப் பட்ட தத்துவங்களை மாறிவரும் நிலைமைகளுக்கு ஏற்ற மாற்றி அமைத்துப் பிரயோகிக்கக் கூடியதாயிருந்தது. அவருடைய சித்தமோ வச்சிரத்தை ஒத்தது; தான் வகுத்துக் கொண்ட நெறியினின்று மயிரிழை கூடப் பிறழாது. அதனால் உடனே நேரும் சில்லறை விளைவுகளையும் அது பொருட்படுத்துவதில்லை. இத்தகைய குணாதிசயங்கள் படைத்த லெனின்தான் வந்த அன்றே போல்ஷிவிக் கட்சியை உலுக்கு உலுக்கென்று உலுக்கி விட்டார். அவர் அவர்களுடைய மடமையையும் செயலின்மையையும் இடித்துரைத்ததோடு அவர்களுடைய கடமை இன்னதென்பதையும் சுடச்சுட எடுத்துக் காட்டினார். அவருடைய சொற்கள் அவர்களுடைய உள்ளத்தில் மின்சாரம் பாய்வதுபோல் பாய்ந்தன. அவர் தன்னுடைய கொள்கைகளில் அசையாது நின்றார்; விட்டுக்கொடுக்க அவர் மறுத்துவிட்டார். இதுகாறும் வழிகாட்டும் தலைவரின்றி நடந்து வந்த புரட்சிக்கு இப்போது தலைவர் கிடைத்து விட்டார் ஒவ்வொரு காலத்திலும் அந்தந்தக் காலத்துக்குரிய மனிதர்கள் தோன்றுகிறார்கள்.

— நேருஜீ

★

## லெனினைப் பற்றி காந்தியடிகள்

வன்முறையினால் நிர்மாணிக்கப்பெறும் எதுவும் நிலைத்து நிற்க முடியாது என்பது எனது திடமான கருத்து. எனது கருத்து எவ்வாறிருந்தபோதிலும், போல்ஷிவிக் லட்சியம் தனக்குப் பின்னால் அந்த லட்சியத்துக்காகத் தமது சர்வத்தையும் தியாகம் செய்த எண்ணற்ற ஆண் பெண்களின் புனிதமான தியாகத்தைக் கொண்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. லெனினைப் போன்ற மகாபுருஷர்களின் தியாகங்களால் புனிதமெய்தியுள்ள ஓர் லட்சியம் வீணாக முடியாது; அவர்களது உன்னதமான சர்வ பரித்தியாகத்தின் உதாரணம் என்றென்றும் ஒளிபரப்பிவரும்; துரிதப்படும்; காலம் செல்லச்செல்ல அந்த லட்சியத்தைப் புனிதப் படுத்தும்.

## லெனினைப் பற்றி பெர்னார்டு ஷா

லெனின் மனிதப் பிறவிதான். ஆனால் அவர் தம் மொத்த மனிதர்கள் யாவரினும் மேலாவார். ருஷ்யாவில் மட்டுமல்ல, அகில உலகத்திலுமே!

லெனின் இப்போது உயிரோடு இல்லாத காரணத்தால் அவரைப் பழைய சரித்திரத்தோடு சேர்த்துவிட வேண்டியதுதான் என்று நீங்கள் எண்ணிவிடக்கூடாது. பொதுவுடைமையினைக் கொண்டுவர அவர் மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றால், நமது தற்கால நாகரிகம் முழுவதுமே அழிந்து விடும். இதிலிருந்து அவர் எப்பேர்ப்பட்டவர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

நமது நாகரிகத்துக்கு முன்னால் பற்பல நாகரிகங்கள் இருந்தன என்று சரித்திர வாயிலாக அறிகிறோம். தற்போதைய மேலைநாட்டு முதலாளித்துவ நாகரிகம் ஏற்கெனவே எட்டிவிட்ட உயரம் வரையில் அவையும் ஓங்கி வளர்ந்து, அதன் பிறகு தாழ்ந்தழிந்து போயின என்றும் அறிவோம்.

வளர்ச்சியைத் தடுக்கும் இடையூறுகளை மனித குலத்தின் மாமணியான மனிதர்கள் பற்பல சந்தர்ப்பங்களில் அவ்வப்போது கடந்து செல்ல முயன்று வந்துள்ளனர். ஆனால் அவர்களில் யாரும் அதில் வெற்றிபெறவில்லை. லெனின் மட்டும் ஒரு புதிய முறையைப் பயன்படுத்தி அந்தத் தடையைக் கடந்து சென்று விட்டார்.

★



### "மக்களுக்காக" மட்டும் எழுதுவோர்கள் கவனத்திற்கு.

"இலக்கியம் இயந்திர ரீதியான சரிப்படுத்தலுக்கு அல்லது சமநிலைப் படுத்தலுக்கு உள்ளாகக் கூடியதல்ல... இந்தத் துறையில் தனிப்பட்ட தன்னூக்கம், சுயச்சார்பு, சுயசிந்தனை, சுயகற்பனை, சுயஉருவம், சுய உள்ளடக்கம் ஆகியவை அனுமதிக்கப்படவேண்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை"

—வி. ஐ. லெனின்.

(நன்றி : சாந்தி)

# சுயவிமர்சனம்

## ராம்மோஹன்

டைரி எழுதற பழக்கம் எனக்கு இல்லாமப் போனதுக்கு முதல் முதலா நான் வருத்தப்படறேன். மனசைப் புரட்டிப் பாக்கறச்சே கோர்வையா நினைச்சுக்க முடியாத சம்பவங்களை எல்லாம் டைரியா இருந்தா ஒரு ஆர்டரா டேட் வாரியாவே படிச்சுப் பார்த்துக்கலாமே கோர்வையாவும், சில சமயத்திலே கோர்வை இல்லாம குழம்பிக் குழம்பி வர்ர நினைவுகளையும் ஒரே சீரா கொண்டு வர ட்ரை பண்ணி, ஒரு டேட் லெஸ் ட்டைரியாவாவது எழுதிப் பாக்கலாமேன்னு நினைக்கிறேன். டேட்லெஸ் டைரின்னு ஒரு புஸ்தகம் இருக்கறதா ஞாபகம்வரது.

மிஸ்டர் தாமோதரனுக்கு இரண்டாம் தாரமா நான் வாழ்க்கைப் பட்டிருந்த இந்த நான்கு வருஷங்களையும், இப்போ அவரை விட்டுப் பிரிஞ்சு வந்திருக்கறதையும் என் லைஃப்லேநடக்காததா வச்சுண்டா இப்பவும் என் வாழ்க்கை கல்யாணமாகாத ஒரு கன்னிப் பெண்ணோட ஏக்கம் நிறைஞ்ச வாழ்க்கையாகத்தான் இருந்திருக்கும். இப்போ வாழற விசாரமான 'வாழாவெட்டி வாழ்க்கைக்கு அதுவே பெட்டர்னு தோன்றது. என்னை வாழா வெட்டின்னுதானே எல்லாரும் பேசிக்கறா? ஏனும்...? அவரா என்னைத் தள்ளி வச்சுட்டார் என்னை வாழா வெட்டின்னு சொல்றதுக்கு? நானுக்கும் அவரைத் தள்ளி வச்சுருக்கேன். அப்படின்னு அவரைத்தானே அப்பிடி சொல்லனும். வாழாவெட்டியாறது பொம்மனாட்டிகள் தானு; புருஷாளுக்கு அது பொருந்தாதோ? ஆனு இதையெல்லாம் யாரும் ஒப்புத்துக்க மாட்டா. அவர் என்னைத் தள்ளி வச்சுடலை, நான்தான் அவரைத் தள்ளி வச்சுட்டேன்னு, 'தாமோதரன் ராஜத்தைத் தள்ளி வச்சுட்டானுமே'ன்னு பேசிக்கற ஒவ்வொரு ஆத்திலேயும் போய் நான் சொல்லிக்கணுமோ? அப்படி சொல்லிக்கறதாலே என்ன பெனிபிட் வந்துடறதாம் எனக்கு? எதுவும் பெனிபிட் வர்ரதுன்னு அவரை நான் தள்ளி வச்சுட்டேன். இல்லை. நாம் செய்யற ஒவ்வொரு காரியத்துக்குமே பெனிபிட் இருக்கறதா, இல்லையான்னு ஸ்டடி பண்ணியே நாம செய்யறதில்லை. மனச்சாட்ச்சிப்படி நடந்துக்கணும்னு நினைக்கறப்போ பெனிபிட்டை நினைச்சுக்காமே நடக்கற தைரியம் எல்லாருக்குமே வரும்னும் நான் நினைக்கலை.

எனக்கு அப்படி ஒரு தைரியம் வந்தது.

மிஸ்டர் தாமோதரன்—அவருக்கு நான் சம்சாரமும் இல்லே; அவர் எனக்குப் புருஷரும் இல்லேன்னு ஒருத்தொருக்கொருத்தர் பிரிஞ்சுண்ட அப்புறம் மிஸ்டர் தாமோதன்னு பேரைச் சொல்றது ஒண்ணும் தப்பில்லே.

மிஸ்டர் தாமோதரன் என்னே ஊருக்கெல்லாம் தெரியும் படியாகவும், சம்பிரதாய சடங்குகள் படியும் தாலி கட்டித்தான் மனேவியா ஏத்துண்டார். ஆளு ஆத்மரீதியா என்னே அவரோட மனேவியா நினேச்சுக்கலேன்னு நான் தெரிஞ்சுண்ட அப்புறம்; அப்படி ஆத்மரீதியா அந்த உறவை அவர் மதிக்கலேங்கறதை பிளஷர் மட்டுமே தர்ரவளா மட்டுமாத்தான் அவர் என்னே மதிச்சிருக்கார்ங்கறதைப் புரிஞ்சுண்ட அப்புறமும் என்னுடை மனச்சாட்சிப்படி நடந்துக்கற தைரியம் எனக்கு வரலேன்னு அவர் நெனச்சிண்டதை நானும் ஒப்புக்றதான்னு ஆயிடும்.

இதைத்தான் நான் சித்தப்பா கிட்டே கேட்டேன். அவர் தான் எனக்கும் தாமோதரனுக்கும் கல்யாணப் பேச்சையே ஆரம்பிச்சு நடத்தியவர். 'நான்தான் இந்தக் கல்யாணத்தையே நடத்தி வச்சவன் என்கறதாலே அவன் செய்யறதுக்கெல்லாம் நான்தான் பொறுப்பேத்துக்கணும்னு சொல்றயா'ன்னு சித்தப்பா கோவிச்சுண்டார். அப்புறம் அவரே சொல்றூர்.

தாமோதரன் மேல நான் கேஸ்போடலாமாம். என் பக்கம்தான் லா இருக்காம். அதனலே என்பக்கம்தான் ஜெயிக்குமாம். என் பக்கம் ஜெயிக்கறதுன்னு; அவரைவிட்டு நான் விரும்பறபடியே பிரிஞ்சுக்கலாம். அப்புறமா டைவர்ஸ் பண்ணிக்கலாம், ஜீவனும்சமா கோர்ட் சொல்லற பணமும் கிடைக்கலாம். தென் வாட்...? நீ அவரோட வாழ வேண்டியதில்லே; பிரெஞ்சுக்கலாம்னு கோர்ட் பாத்து சொல்றதென்ன, அதை நானுவே செய்துடறதென்ன? நானு கப் பிரிஞ்சு வந்துட்டா ஏன் எதுக்குன்னு ஊர் உலகத்துக்குத் தெரியாமப் போயிடுமேன்னு சித்தப்பா கேட்கறூர். யாருக்கும் தெரியறதாலும், தெரியாமப் போறதாலும் எனக்கென்ன ஆயிடப்போறதுன்னு யாருக்குமே தெரிய வேண்டாம்னு சொல்லிட்டேன்.

சித்தப்பா எங்க ஆத்துக்கு தாமோதரனுக்கு என்னேப் பெண் கேட்கருங்கற ந்யூஸோட வந்தாரே, அதை இப்ப நான் நினேக்கறேன்.

ஏழ்மை தசையிலே இருக்கற அண்ணனே மறந்தே போயிருந்த சித்தப்பாதான் பெரிய இடத்திலே என்னேப் பெண் கேக்கறுன்னு தெரிஞ்சுண்டதும் ஒடிவந்து ஒட்டிண்டார்.

என் கல்யாணப் பேச்சு நடக்கறதேன்னு நான் உள்ளே ஒடிப் போயிடலே கூச்சப்பட்டுண்டு. பதினறு பதினேழு வயசிலே அவா என்

ளோட கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சப்போ நானும் ஒளிஞ்சுண்டுதான்கேட்டிண்டு இருப்பேன். அவா பேசிக்கற வரனெல்லாம் எப்படி இருப் பான்னு யோசித்துப் பார்த் துக்குவேன். கல்யாணம் ஆன தும்எங்கேல்லாம்போகணும், எப்படியெல்லாம் இருக்கணும் என்றெல்லாம் கற்பனை செய் துப்பேன். அப்படிப் பண் ணிண்ட கற்பனையெல்லாம் கற்பனையாவே போயிடு மோன்னு பயம் எனக்கு வந் துடுத்து. தனியா இருக்கறச் சே எத்தனையோ சமயம் அழுதுமிருக்கேன். பின்னே, பதினாறு வயசிலே ஆரம்பிச்ச கல்யாணப் பேச்சு இருபத் தாறு வயசாறச்சேயும் பேச் சாவே நடந்திண்டிருந்தா அழாமே என்ன பண்றதாம் ...?

இப்பல்லாம்என்கல்யாணப் பேச்சு நடக்கறச்சே நான் வெக்கப்பட்டுண்டு ஒளிஞ்சுக் கறதில்லே. இப்போஅப்பாவே, 'எனக்கொண்ணும் தெரி யாது. எல்லாம் ராஜத்தோட யே பேசிக்கோங்கோ. வாழப் போறவ அவ. அவ இஷ்டம் தான் முக்கியம்னு' என்னையே பேச வச்சுடறார்.

என்னைப் பெண் பார்த் துட்டுப் போனவா எத்தனை யோ பேரை சம்சாரத்தோடே யும், பிள்ளைகளோடும் கடை வீதியிலோ, பீச்சிலோ பாக் கறச்சே அந்த மாதிரி எப்போ நானும் இருப்பேன்னு மனம் கலங்குவேன்.

எனக்கு இன்னும் வேளை வரலேன்னு பாக்கறவா ரொம்ப ஈஸியா சொல்லிடறா. வேளை எப்ப வர்ரதாம்? வேளை வேளையோடு வந்தால்தானே. நாற்பது வயசிலே அந்த வேளை வந்தா என்ன? வராமப் போனத்தானென்ன? அம்மா வுக்கென்ன;வர்ரவா போறவா முன்னாடியெல்லாம் பொண் ணுக்குக் கல்யாணம் ஆகல்லி யேன்னு சொல்லி அழுதுடறா. பாக்கறவாளும் பரிதாபப் பட்டுண்டே 'ஒண்ணும் கவலைப் படாதே; வேளை வந்தா எல்லாம் வந்துடும்'னு சொல்றா. ஆனா நான் மத்தவா முன்னாடி அழுதுண்டா அது அசிங்கமா இருக்குமே.

இப்படியெல்லாம் இருக் கறச்சேதான்சித்தப்பா வந்து சேர்ந்தார்.

சுந்து, சித்தப்பாவோட கனத்த சப்தத்தைக் கேட்டு அப்பா பின்னாடி ஒளிஞ்சுண் டான்.

"வாடா பயலே, நான் உன் சித்தப்பன்தாண்டா"ன்னு தன்னை அவனுக்கு அறிமுகப் படுத்துகிறார்.

'எல்லாம் நம்ம ராஜத்தோட கல்யாண விஷயமாத்தான்னு' சொல்லி என்னைப் பார்த்தார் சித்தப்பா.

'நீயும் இரம்மா ராஜம், உள் ளே ஓடிப்போயிடாதே. உன் னோட சம்மதம்தான் முக் கியம்னு' சொன்னார். கல யாணப் பேச்சென்றதும் உள் ளே ஓடிப்போயிடுவேன்னு நினைச்சுண்டுட்டார் போலி

ருக்கு.

சித்தப்பா கொண்டு வந்த அந்த சம்பந்தம்தான் முடிஞ்சுது.

மிஸ்டர் தாமோதரனுக்கு ரெண்டாம்தாரமா வாழ்க்கைப் படறதுக்கு நான் மனப்பூர்வமாத்தான் சம்மதிச்சேன்.

அவருக்கு இறந்துபோன மூத்ததாரத்தோட பிள்ளைகள் நான்குபேர் இருந்தார்கள். நான்கு பேருமே சின்னக் குழந்தைகள்தான்.

அவருக்கு லட்சக்கணக்கிலே பணமிருக்கறது. லட்சம் லட்சமா வருமானமும் வர்ரது. எனக்கும் கல்யாணம் ஆயிடுத்து. ஒரே நாள்லே என்னோட நிலமை என்னமா மாறிப் போயிடுத்து. சிந்தாதிரிப்பேட்டை மார்கெட் வாடையிலே பிறந்து வளர்ந்திருக்கற நான், மனுஷா இருக்காளான்னு சந்தேகம் வர்ர மாதிரி பெரிய பெரிய பங்காளாக்களே தென்படற அடையாறுக்கு வந்துட்டேன். எங்க பங்களாவும் அங்கேதானிருக்கு. பங்களாவிற்கு முன்னே வேற 'பேர் இருந்துச்சாம். இப்போ 'பெப்பி ஹவுஸ்'னு மாத்தி வச்சுட்டாராம். பெப்பிங்கறது அவரோடமூத்த மனைவியோட பெட் நேமாம். இருக்கட்டுமே. 'இந்த பேர் இருக்கறதிலே உனக்கு ஒண்ணும் ஆட்சேபம் இல்லியே'ன்னு, கல்யாண மான மறுநாளே இவர் கேட்கரூர். என்ன அர்த்தத்திலே இப்படிக் கேட்கரூர்னு எனக்கு ஆச்சர்யமாயிருந்தது. பெப்பி அக்காவோட குழந்தைகளை நான் என் வயத்திலே ஜனிச்ச குழந்தைகளா எத்துண்டிருக்கச்சே வீட்டோட பேர் பெப்பின்னு இருக்கறதுலே என்ன ஆட்சேபணை வந்துடப்போறது எனக்கு?

பெப்பி ஹவுஸ்லே எனக்குத் தனிரூம். அவருக்குத் தனி ரூம். நாங்க ரெண்டுபேரும் படுத்துக்கறதுக்கு மட்டும் ஒரு ரூம். அதை ஏர் கண்டிஷன் செய்து வச்சுருக்கார்.

பெப்பி ஹவுஸ்லே நான் வந்து குடியேறிண்டதும் இவரைக் கல்யாணம் செய்துக்கறதுக்கு முன்னுடி இருந்த என்னோட லைஃபை; இப்போ வாழற வாழ்க்கையோட கம்பேர் பண்ணிப் பாக்கறச்சே—இருண்ட பள்ளத்தாக்கிலிருந்து வெளிச்சமான; சுகமான மலை உச்சிக்கு வந்துட்ட சந்தோஷம்தான் என் மனசிலே ஏற்பட்டது. மலை உச்சிக்கு மறுபுறமும் டார்க்கா ஒரு அதல பாதாளம் இருக்குமேங்கற ஞாபகம் அப்போ எனக்கு வரல்லியே.

அந்த அதல பாதாளத்திலே தான் இப்போ நான் விழுந்துட்டேங்கறதை நினைக்கற போதே நெஞ்செல்லா[ம்] வெடிச்சுப் போயிடற மா[திரி] ஆத்திரமும் ஆவேசமு[ம்] வர்ரது. தொண்டையெல்லா[ம்] அடைச்சிண்டு கண்ணெல்லாம் கலங்கறது... எழுத முடியாமே எனக்கு அழுகை

வர்ரது. அழுகையைவிட ஆத்திரம் அதிகமா வர்ரது

டேட்லெஸ் டயரின்னு எழுதிண்டு வந்ததையெல்லாம் கிழிச்சு எறிஞ்சுடறேன். அடையார் பணவாடையிலிருந்து பழைய மார்கெட் வாடைக்கே வந்துட்டேன்.

அடையார்லே இருக்கறப்போ சிந்தாதிரிப்பேட்டையை நினைச்சுப் பார்த்துக்கறமாதிரி இப்போ அடையாறை நினைச்சுக்கறேன். அடையாறை நினைச்சுக்கறேன் என்கறதாலே அந்த வாழ்க்கை போயிடுத்தேன்னு நான் ஏங்கறதா அர்த்தம் இல்லே.

· அந்தவாழ்க்கை வேண்டாம் தானே; நானும் அவரும் நடத்திண்டது மெட்ரிமோனியல் லைஃப் இல்லே, வெறும் கோஹாபிட்டட் லைஃப்தான் —பிளஷருக்கு மட்டுமே ஏற்படுத்திக்கற வைப்பாட்டித்தனம் தான்னு நான் புரிஞ்சுண்டு; அப்படிப் புரிஞ்சுண்ட அப்புறமும் அந்த அசிங்க வாழ்க்கை நீடிச்சிண்டு போக வேண்டாம்னுதானே எல்லாத்தையும் உதறிண்டு வந்திருக்கேன்.

அவர் செய்த காரியம்: அந்தக் காரியத்தை அவர் செய்து கொண்டதுக்கு என்னென்ன மோடிவ்ஸ் இருந்துச்சு; ரியலா எந்த இண்டென்ஷன்லே செய்தார்ங்கறதை அவர் டைரி மூலமா நான் கண்டு பிடிச்சதையும்; அப்படி கண்டு பிடிச்சதையெல்லாம் வச்சு நான் எந்த வ்யூலே அவரோட வாழ்ந்ததை வைப்பாட்டித்தனம்னு சொல்றேன் என்கறதையும் அவருக்கு மட்டுமாவது க்ளியரா சொல்லிடணும்னு நினைக்கறேன். என்னோட கட்சி என்னன்னு சொல்ற மாதிரி இல்லே. அவர் என்ன கட்சி பேசினார் என்கறதையும், என்னோட கட்சி என்னங்கறதையும் சேர்த்து 'சம்—அப்' பண்ற மாதிரி—அவரையும் என்னையும் விமரிசித்துக்கற ஒரு விமரிசனமா ஒரு லெட்டர்—கடைசியா ஒரு லெட்டர் எழுதலாமேன்னு நினைக்கறேன்.

நான் இப்போ நினைச்சுக்கறது; டேட்லெஸ் டயரியா எழுதிக் கிழிச்சு எறிஞ்சது; கடைசியா இப்போ அவருக்கு எழுதப்போற லெட்டர் எல்லாமே சுயவிமரிசனம்தான்னு நினைக்கறேன்.

இப்போ மிஸ்டர் தாமோதரன் மேல எனக்கு மதிப்பும், அன்பும் இல்லாமப் போயிடுத்து. அதனாலே லெட்டரை மதிப்பிற்குரியன்னும், அன்புள்ளன்னும் ஆரம்பிக்கறதுக்கு என் மனம் இஷ்டப்படலே.

மிஸ்டர் தாமோதரன்னு ஆரம்பிக்கலாமா? அதான் கவர்லேயே மிஸ்டர் தாமோதரன்னு அட்ரஸ் பண்றேனே. உள்ளே வேற ரிபீட் பண்ணணுமோ? விஷயத்தைச் சொல்றதிலிருந்தே ஆரம்பிக்கறேன்...

“............... கல்யாணமாகி நாலு வருஷமாயும் எனக்குக்

குழந்தை பிறக்கலேயேன்னு நான் நினைக்கலே. அம்மாவும் அப்பாவும்தான் கேட்டா, 'எப்போ எங்க கையிலே ஒரு பேரனைப் பெற்றுத்தரப் போறே'ன்னு. அவா அப்படிக் கேட்ட அப்புறம்தான் எனக்கு இன்னமும் குழந்தை பெற்றுக்கலேயேங்கற ஞாபகம் வந்ததுன்னு சொன்னா இப்போ நீங்க நம்பத்தான் மாட்டேள். சத்தியமாகவே எனக்கா அந்த ஞாபகம் வரலேன்னு சொன்னா அதுக்கு அர்த்தம், உங்களோட மூத்த தாரத்தோட குழந்தைகளை என் வயிற்றில் பிறந்ததுகளா நான் நினைச்சுண்டிருந்தேன் என்கறதுதான்.

எனக்கும் ஒரு குழந்தை பிறக்கணும்னு நான் ஆசைப்பட்டதை; உங்களண்டையும் சொல்லினப்போ உங்க முகம் என்னவோ போல ஆயிடுத்து. அது ஏன்னு அப்போ புரிஞ்சுக்க முடியலே. 'ஏன் ஒரு மாதிரி ஆயிண்டேள்'னு நான் கேட்டேன். ஒண்ணுமே பதில் சொல்லாமே என் முகத்தையே பார்த்தேள். ரெண்டு மூணு நாள் ஒரு மாதிரியாவே இருந்தேள்.

'குழந்தை பெற்றுக்கணும்னு நான் சொன்னது எதுவும் தப்பா'ன்னு கேட்டேன்.

ராஜி, மாலு, பாபு, ஸந்தியா எல்லாம் உன் பிள்ளைகள் இல்லையான்னு கேட்டுட்டேள். என்னைத்தப்பா யாரும் புரிஞ்சக்கறப்போ நான் வருத்தப்படறதில்லே. கோபப் படுவேன்: இப்படி நீங்க கேட்டதும் எனக்குக் கோபம் வந்தது. நான் பிள்ளை பெற்றுக்கணும்னு சொன்னா, ஆசைப் பட்டா, அவா மேலெல்லாம் எனக்குப் பிரியம்போயிடுத்து; அவாளையெல்லாம் நான் வெறுக்க ஆரம்பிச்சிட்டேன்னு அர்த்தமா? இப்படியெல்லாம் அர்த்தம்—இல்லே; அனர்த்தம் காண்றதுக்குத் தான் ஸைக்காலஜியிலே பி.ஏ. பட்டம் வாங்கினேளா? நீங்க நினைச்சிண்ட அர்த்தம் தப்புன்னும் உடனே நான் நிரூபிச்சேன்... இப்பவும் அதை மறந்திருக்க மாட்டேள்.

பெப்பியோட படத்தையும் என்னோடபடத்தையும்காட்டி யார் உங்க அம்மான்னு நான் கேட்டப்போ குழந்தைகள் யாரோட படத்தை அம்மான்னு சொன்னா. என்னோட படத்தைத்தானே...? இப்போ நீங்க என் புருஷன் இல்லே; நான் உங்க சம்சாரம் இல்லேன்னு புரிஞ்சுண்டாலும் பிள்ளைகளைப் பார்க்க இப்பவே எனக்கு ஓடிவரணும் போல இருக்கறது. நம்பறேளா? பிள்ளைகள் என்னையே அம்மாங்கற அளவுக்கு நாங்க ஆயிண்டோம்னும் உங்களுக்கு நான் தெரியப் படுத்திட்டேன். அப்புறம் சொன்னேன். 'நான் பிள்ளை பெற்றுக் கணும்னு சொல்றதுக்கு அர்த்தம் நானும் பெற்றுக் கணுமேங்கற ஆசைதான்னு. அப்போவும் நம்ப மறுக்கறதா முகத்தைக் காட்டிண்டேள்.

என்ன அர்த்தமாம்? அந்த ஃபெமினின் பிளஷர்ங்கறது ராஜத்துகிட்டே இருந்துதான் உங்களுக்கு வேணும். ராஜம் பெப்பயோட அழகான வளாச்சே ... அந்த அழகான ராஜம் ராத்திரி உங்க கனவிலே வந்திருக்கா. அப்படி நான் உங்க கனவிலே வந்த மறு நாளே எழுதி இருக்கேள் 'எனக்கு ராஜம்தான் வேண்டும்'னு. ராஜம்தான் ... அந்த 'தான்'ங் கறதிலேதான் அவ் வளவும் அடங்கிப் போயிடுச் சுங்கறேன்...ராஜம் அன்சொபிஸ்டி கேட்டட் கேர்ள்தான். ஆனா அவளை சொபிஸ்டி கேட் டடா மாத்திடலாம்னு நம்பிக் கையும் உங்களுக்கு வந்திருக் கறது. காலமாறுதல்லே இப்படி ஒரு சேஞ்ச் ஏற்படற மாதிரி—ராஜத்துக்கும் குழந் தைகள் பிறந்துட்டா பெப்பி யோட குழந்தைகளை வித்தியாசமா நடத்தறவளா மாறிடுவான்னு; ஒண்ணிலே மாறிடறவா இண்ணெண்ணிலும் மாறிடுவான்னு லாஜிக்கலா திங் பண்ணிண்டேளாம்...

என்னையே நினைச்சு ஏங்கி இருக்கேள். மனசைப் போட்டு ஒரே குழப்பு குழப்பி இருக்கேள். அந்த ஏக்கத்திலும் குழப்பத்திலும் கிடந்து தவிச்சிண்ட அப்புறம்; மார்ச் தர்ட்டி பஸ்ட் அன்னிக்கித்தான் அந்த யோசனை நெருப் புப் பொறியாட்டமா உங்க மனசிலே விழுந்து காட்டுத் தியாட்டம் பரவியிருக்கு.

'ரெண்டாம் தாரமா வர்ர ராஜம் குழந்தை பெத்துண் டாத்தானே மாறிப் போயிடுவா. அவ குழந்தையே பெற முடியாமசெய்துட்டா'...ன்னு கோரமா, வக்கிரமா பிளான் போட்டுட்டேள். தடதடன்னு இடிச்சு முழங்கற மேகத் திலே கண்ணைப் பறிச்சுடற மாதிரி ஏற்படற மின்னல்லே பச்சை மரம் தீஞ்சுடறமாதிரி, உங்க வெறி பிடிச்ச மனசிலே நெருப்புப் பிழம்பா ஏற்பட் டதே மின்னல்—அந்த மின் னல்லே என் கர்ப்பத்திசுவெல் லாம் சுட்டுப் பொசுங்கி, பூவா கருகிப் போயிடுச்சே ... இது கொடிய பாவம்னு உங்க மன சிலே படலியா.. ஒருத்தனோட மனைவியாறதுக்கு மட்டு மில்லே; ஒரு தாயாகறதுக்கும் காலம் காலமா மோட்டு வளை யைப் பார்த்துண்டும், தெரு வைப்பார்த்துண்டும் காத்துக் கிடந்த ஒரு ஏழைப்பொண்ணை ஏமாத்தறது நியாயம்னு உங்க மனசிலே பட்டது ... நெஞ் சிலே கை வைத்துச் சொல் லுங்கோ. என் நெஞ்சிலே வலி பொறுக்கலே....நான் அழறேன்...ரெண்டு கண்ணிலும் வழியற நீர்லே பேப்பரெல் லாம் நனைஞ்சு போயிடுத்தே. கண்ணீர் நிக்கற வரை எழுத றதை நிறுத்திண்டு; நன்னா கண்ணைத் துடைச்சிட்டு எழுத ஆரம்பிக்கறேன். உள் ளே அம்மா அழற சத்தம் கேட்கறது. அம்மா அழறான் னும் எழுதறேன். அழுகை இன்னமும் நெஞ்சுக்குள்ளே ஏற்பட்டிண்டிருக்கறதுலே

விம்மல் எழும்பி எழும்பி எழுத முடியாமே பண்றது...

ஆண் — பெண் உறவிலே புருஷா செய்துக்கற ... ஆபரேஷனை உங்களுக்குச் செய்துக்கறதா முடிவு செய்துண்டேள். யாருக்குமே இது தெரியக்கூடாதுன்னும் முடிவு செய்திருச்சேள். ஃபாமிலி டாக்டரண்டை போனா காரணம் கேட்பாரே. வய்ஃப் இறந்துட்டா. அப்புறம் எதுக்காம் ஆபரேஷன்னு கேட்பாரேன்னு பெங்களூர்லே போய் செய்துக்கறதாவும் முடிவு பண்ணிட்டேள். இத்தனையையும் கரூரா பிளான் போட்டு வச்சுண்ட அப்புறம்தான் ஏப்ரல் ஃபஸ்ட் அன்னிக்கி நேராவே எங்க ஆத்துக்கு வந்து உங்க சம்மதத்தைச் சொல்ல வந்தேளே; அப்போ, 'நீ எனக்குச் சிறந்த மனைவியா இருக்கறதைக் காட்டிலும் பெப்பியோட பிள்ளைகளுக்கு அருமையான தாயா இருக்கறதுதான் எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷத்தைத் தரும்'னு கேட்டவாள் ளாம் உருகிப் போயிடற மாதிரி பொரிஞ்சேள். நானும் கூடத்தான் உருகிப்போனேன். 'என்ன உத்தமமான மனுஷர்'னு மெய்சிலிர்த்துத் தான் போனேன்.

"கேட்டுக் கோடா ராஜம். என்ன சொல்றூர்னு பார்த்தியா...இதுலேதான் நீ நம்ப குடும்பத்துப் பெருமையை உயர்த்தணும்'னு சித்தப்பா சொன்னப்போ முருகன் மேலே சத்தியமா அப்படியே இருப்பேன்னு மனசுக்குள்ளே நினைச்சுண்டேன். ஆனா என்னை ஏப்ரல் ஃபூல் ஆக்கிட்டேள். யானை பிடிக்கற மெதட் தெரியும் எனக்கு பெரிய பள்ளம் பறிச்சி வச்சி; இலையும் கொடியுமா பரப்பி அதை மறைச்சிண்டு, பள்ளம் இருக்கறது தெரியாமே, இலையும் கொடியும்தான்னு ஏமாந்து வந்து விழற யானையைப்போல ராஜம் விழுந்துட்டா நீங்க பறிச்சுவச்ச குழியிலே. நீங்களும் நானும் ஏற்படுத்திக்கற மெட்ரிமோனியல் வாழ்க்கையிலே குழந்தை பிறக்கக் கூடாதுங்கறது நீங்க மட்டுமா தீர்மானிச்சுக்கற விஷயம் இல்லே. அப்படி நீங்களா தீர்மானிச்சுக்கறதுக்கு உரிமையும் இல்லே. இந்த விஷயத்தை —நம்மோட தாம்பத்ய வாழ்க்கையிலே குழந்தை பிறக்கக் கூடாதுங்கற கண்டிஷனை, ஏப்ரல் ஃபஸ்ட் அன்னிக்கி உங்க சம்மதத்தைத் தெரிவிக்கறதுக்கு வந்தேளே அப்பவே சொல்லி அதற்கு நான் சம்மதப்பட்டாதான் கல்யாணமேன்னும், மத்தவாகிட்டே பேசி இருக்க வேண்டாம்; என்னண்டை கண்டிப்பா நீங்க பேசித்தான் இருக்கணும். எனக்கு சம்மதமான்னு ஒபனா கேட்டிருக்கணும். ஒண்ணுமே சொல்லலை. கேக்கறவா உருகிப் போயிடற மாதிரி வேறெதையோ பொய் பேசினேள். சினிமாவிலே நடிக்கற மாதிரி நடிச்சேள். ஏன்?

சொன்னு ராஜம் ஒத்துக்க மாட்டான்னு நினைச்சிருக்கேள். வெறுமே மொட்டையா 'ராஜம் ஒப்புக் கொள்வாளா'ன்னு டைரியிலே எழுதி இருந்தேள். டைரியைக் கேட்டேளா: இல்லே; உங்க மனசாட்சியைக் கேட்டேளா?..

ஓ...மனசாட்சியைத்தான்... 'ஒத்துக்கமாட்டாள்'னு ஒரு லைன் எழுதி இருந்தேள். ஒத்துக்க மாட்டாள்னு சொன்ன மனசாட்சியை கொன்னு புதைச்சுட்டதிலே ராஜத்தோட தாய்மையும் கொலையாகிப் போயிடுத்து.

இப்போ ராஜம் உங்க விருப்பப்படியே வய்ஃப் ஆயிட்டா. பெப்பியோட குழந்தைகளை நன்னு கவனிச்சுக்கற ஒரு நர்ஸ்தான் ராஜம். தாமோதரன் என்கறவருக்குப் பிளஷர் தர்ர வேசைதான் ராஜம். வேசையண்டை பிளஷருக்காக மட்டும்தானே புருஷா போறு. பிளஷர் மட்டுமே தர்ரவதான் வேசை. அவளோட மத்த விஷயங்கள், பிரச்னைகள் யாருக்குத் தேவையாம் ...? என்னை உங்க மனைவியா நினைச்சிருந்தா; மதிச்சிருந்தா என்னோட மத்த விஷயங்களையும் ஆசைகளையும் — ஆசைகளென்னவாம்; உரிமைகளையும் நீங்க மதிச்சிருக்கணுமோன்னு? மதிச்சேளா; உங்களோட மனைவின்னு நினைச்சேளா? நினைக்கலை. அப்படி என்னை மதிக்காமலும்; தாம்பத்யம் என்கற தாத்பர்யத்தைத் தகர்த்தும் நீங்க நடந்துண்டேள்ங்கறதிலே என்னை வெறும் பிளஷர் தர்ரவளாத்தான் நடத்தி வந்திருக்கேள்னு புரிஞ்சுகாமே வேற எப்படிப் புரிஞ்சுக்கறதாம்.

இது வைப்பாட்டித்தனம்னு..? இப்படியெல்லாம் எழுதறதிலே என் உடம்பு கூசிப் போறது. இதுக்குப் பேர் மெட்ரிமோனியல் லைஃப்னு எந்த நியாயத்திலே நான் ஒத்துக் கொள்றது? இது கொஹாபிட்டட் லைஃப்...கொஹாபிட்டேஷன் இல்லாமே மெட்ரிமோனியல் லைஃப் இல்லே. ஆனு மெட்ரிமோனியல் லைஃப் இல்லாத அது அசிங்கமாச்சே ......... நாமும் மெட்ரிமோனியல்ங்கற லைஃப் தானே வாழ்ந்தோம்னு சொல்றேளா? நான் அப்படித்தான் நினைச்சுண்டிருந்தேன். அப்புறம்தான் எல்லாம் விளங்கிப் போச்சே. எனக்கென்ன மிஸ்டர் தாமோதரன் வய்ஃப்னு ஆயிடறதிலேயே ஜென்மம் சாபல்யமாயிடறதோ? என்னோட ரத்தத்துக்குள்ளேயும் உயிர் துளிர்க்க வேண்டாம்? பத்து மாசம் அந்தத் துளிர் என்னுள்ளே விளையறதிலே ஏற்படற கிறக்கம் வேண்டாம்; இன்ப சங்கடம் வேண்டாம்? பனிக்குடம் வெடிச்சு வழியற வேதனைப் பெருக்கிலே ஈரம் சொட்ட சொட்ட அந்த உயிர் இந்த மண்ணிலே விழ வேண்டாம்? இதெல்லாம் வேண்டாமான்னு திடீர்னு ஏற்பட்ட ஆங்காரத்திலேயும் ஆவேசத்திலேயும் அழுத்தி

எழுதினதிலே பேனுமுள் பேப்பரை லேசாக் கிழிச்சுடறது.

இதெல்லாம் எனக்கு வேண்டாம்னு; ஊரையும் உலகத்தையும் அழைச்சிண்டு; சாஸ்திரப்படி;சம்பிரதாயப்படி என் கழுத்திலே தாலி கட்டி சொஸைட்டியிலே வய்ஃப்னு அறிமுகப்படுத்திண்டு தம்பட்டம் அடிச்சுக்கறதுக்கு என்ன வேண்டிப் போச்சாம்? சரி, இதெல்லாம்தான்போகட்டும். நீங்க நினைச்சுண்டபடியே உங்களோட பிள்ளைகளோட நலனுக்கு 'ரிஸ்க்' என்கறதாலே நான் பிள்ளை பெற்றுக்கக் கூடாதுங்கறது என்ன நியாயம்? இது அநியாயமில்லையா; அக்ரமமில்லையான்னு நான் கேட்டுக்கக் கூடாதா? ஆத்திரப்படப்படாதா?ஒரு வேசை கேட்கமாட்டா, ஒரு வைப்பாட்டி கேட்கக்கமாட்டா ... குழந்தை பெற்றுக்கணும்னு ஒரு சம்சாரம் கேட்க மாட்டாளா?

அதைத்தான் ராஜம் கேட்டா. அந்த பாக்கியம் தனக்கு மறுக்கப்பட்டிருக்குன்னு தெரிஞ்சுண்டுதான்; பெரிய துரோகத்துக்குத் தன்னோட தாய்மை பலியாயிடுத்துன்னு புரிஞ்சுண்டுதான் அவ ஆத்திரப்பட்டா. 'இதையெல்லாம் கல்யாணத்துக்கு முன்னாடியே ஏன் சொல்லலேன்னு ஆவேசப்பட்டா ...

'மூடி மறைச்சு உன்னைக் கல்யாணம் பண்ணின்டேன்னு இப்போ குதிக்கறயே, அந்த விஷயத்தை முன்னாடியே நான் சொல்லி இருந்தாலும், என்னோட அந்த கண்டிஷனுக்கு, என்னோட மனைவியா ஆறதுக்கு நீ சம்மதிச்சே இருப்பேன்னு'' ஆங்காரம் பிடிச்சவரா பேசினேளே; உங்களை எவகேட்க வேண்டாம்னு சொன்னது. ராஜம் என்ன பதில் சொல்றான்னு கேட்டே பார்த்திருக்கறது. இப்போதான் நான் குதிக்கறதா நீங்ககுதிக்கறளே. இப்ப நான் சொல்றதைத்தான் அப்பவும் சொல்லுவேன். இப்பவும் சொல்றேன். கோடி ரூபாயைக் கொண்டு வந்து கொட்டி இருந்தாலும் அந்த கண்டிஷனுக்கு நான் ஒத்துண்டு கழுத்தை உங்களுக்கு நீட்டி இருக்க மாட்டேன். உங்களைக் கல்யாணம் பண்ணிக்கறதாலே ராணியாட்ட வாழ்க்கையை அனுபவிக்கலாம்ங்கறதுக்காக என்னோட தாய்மையைப் பலியிட்டுக்கச் சம்மதிச்சேன்னு பணத்துக்காக நான் கற்பையும் இழக்கறதுக்கு சம்மதிச்சுடுவேன்னு அர்த்தமாயிடும்.

காசுக்காகக் கற்பை இழக்கறதுக்கு எத்தனையோ பேர் இருக்கற மாதிரி உங்க கண்டிஷனுக்கு ஒத்துண்டு உங்களைக் கட்டிக்கறதுக்கும் எத்தனையோ பேர் இருக்கத்தான் செய்வா. ராஜம் அவாள்ள ஒருத்தி இல்லே. எனக்கு நீங்க தந்திருந்த ஸ்தானத்தைப் புரிஞ்சுண்ட அப்புறமும் ஆங்காரமா கேட்டேளே அந்தக் கேள்விக்கு அப்புறமும்

உங்க சம்சாரமா என்னை நினைச்சுக்கவும்; நடிச்சுக்கவும், அப்படி அவாள்ள ஒருத்தியா நான் இல்லாததாலேதான் என்னுலே முடியலே. நம்ம ரெண்டு பேருக்கிடையிலே நடந்துக்கற கடைசி லெட்டர் என்கிறதால் தானே இது நம்ம வாழ்க்கை ஒப்பந்தத்தையே முறிச்சிக்கற சாஸனம் போல நீண்டு போயிடுத்து...

இதுக்கு மேலே என்ன எழுதறதுன்னு தெரியாமே அப்படியே கையெழுத்துக் கூடப் போடாமே விட்டுட்டேன். போஸ்ட் பண்றதுக்கு சுந்துவைத் தேடினேன். அவனைக் காணும்னு அப்பாவே போஸ்ட் பண்ணிண்டு வர்ரதா நான் வேண்டாம்னு சொல்லியும் லெட்டரை எடுத்திண்டு போயிட்டார்.

என்னோட வேலையெல்லாம் முடிஞ்சுட்டாப்போல, இனிமே எனக்கு எந்த வேலையுமே இல்லாததுபோல; ஓடி ஓடிக் களைச்சு ரெஸ்ட் எடுத்துக்கற மாதிரி நாற்காலியிலே நன்னு சாஞ்சு, கால் ரெண்டையும் சுவர் மேல தூக்கிவச்சு உட்கார்ந்துண்டு அண்ணாந்து மோட்டு வளையைப் பாக்கறேன்.

பல்லி ஒண்ணு ஊர்ந்து ஊர்ந்து ஒரு பூச்சியை விழுங்கறதுக்குப் போறது. பூச்சிக்குத் தெரியலே. அந்த இடத்திலே நின்னுண்டிருக்கறது. படக்னு பூச்சியை பல்லிவிழுங்கிட்டது. இப்போ பல்லி என்னைப் பார்க்கற மாதிரி இருக்கறது. என்னையும் விழுங்கலாம்னு நினைக்கறதோ? நான் நினைக்கலே. பொத்னு பல்லி என் தோள் மேலேயே விழுந்துட்டது. அதை நான் விழுங்கிடுவேன்னு பயந்து விழுந்தடிச்சுண்டு ஓடறது. நான் கண்ணை மூடிக்கறேன். இப்போ என் மனசிலே ஆத்திரம் இல்லே; ஆபிவேசம் இல்லே; ஏக்கம் இல்லே. எதுவுமே இல்லாத சூனியமா, மயானமா ஆயிட்ட மாதிரி, நானே இல்லேங்கற மாதிரி எனக்குள்ளேயும் சப்தமில்லாமே, வெளியிலேயும் சப்தமில்லாமே இருக்கறது. கண்ணைத் திறந்து பார்த்தேன். நேரே, ஷெல்பிலே மூட்டைப் பூச்சியைக் கொல்லற பாய்ஸன் பாட்டில்லே இருக்கறது. பல்லியாலே என்னை விழுங்க முடியாது. இந்த விஷம் என்னை விழுங்கிடுமே; ஐ மீன்; இந்த விஷம் என்னைக் கொன்னுடுமே.

இப்போ அது என் கையில் இருக்கறது. என்னை அது விழுங்கறதுக்கும் அதை நான் விழுங்கறதுக்கும் இன்னும் சில நிமிஷங்களே இருக்கறது. அப்புறம் சில வினாடிங்கதானிருக்கும், அப்புறம் அதுவும் இராமப் போயிடும். நானும் இல்லாமப் போயிடுவேன். ரொம்பவும் வேகமா வந்து ஸடன் பிரேக் போட்டு கார் ஒண்ணு நிக்கற சப்தம் கேட்கறது. திரும்பி ஜன்னலைப் பாக்கரேன். ஒரேயடியா தூசி வெளியிலே இருந்து ஜன்னல்

வழியா உள்ளே வர்ரது.

யாருன்னு அம்மா கேக்கற சப்தம் கேட்கறது. நான் தயங்கி விஷத்தைக் குடிக்காம நின்னுண்டிருக்கேன்.

'என்னடா ராமா'ன்னு அம்மா கேட்கறு...ஓ...ராமன்; அவரோட டிரைவர். இப்போ இங்கே என்னத்துக்கு இவன் வந்திருக்கான்? அவன் எதுவுமே சொல்லாமே நிக்கருனு...சப்தத்தையே காணோ. மேராமன் அழற மாதிரிக் இருகறதே... நான் வேகமா கூடத்துக்கு ஓடறேன். என்னைப் பார்த்ததும் அவன் சப்தம் போட்டு அழுருன். ஏனோ என் உடம்பெல்லாம் நடுங்கிப் போய் வியர்க்கறது. வெடித்து வந்த அழுகையோடே அவன் சொல்லவந்த சேதி வெளிப் படறது: விஷபாட்டிலை தூக்கி எறிஞ்சுட்டு நான் வெளியிலே ஓடறேன். அவன் வந்து டென்ஷனையெல்லாம் சரிப்படுத்திண்டு காரை எடுக்கற வரைக்கும் தாங்கிண்டிருக்க முடியாமே நானே காரை ஸ்டார்ட் செய்துடறேன். எதிரே,லெட்டரைப் போஸ்ட் பண்ணிண்டு வர்ர அப்பாவுக்குக் கூட காரை நிறுத்தாமே பறக்கறேன். 'அம்மா'ன்னு நாலு குழந்தைகளும் என்னண்டை தாவிவந்து அணைச்சுண்டு கதறினப்போ என் உடம்பெல்லாம் சிலிர்த்துப் போச்சு. அவாளை கட்டிப் பிடிச்சுண்டு அம்மா இருக்கேன்டா ... 'அம்மா இருக்கேன்னு' நான் புலம்பறேன். என்னோட அழுகை எல்லாரும் பார்க்கறபடி வெளியிலே வரலை. உள்ளுக்குள்ளே நான் அழறேன்.

எனக்கு அட்ரஸ் பண்ணி ஒரு கடிதம் எழுதி வச்சுண்டு அவர் தன்னையே அழிச்சுண்டார். இப்போ எல்லா காரியங்களும் முடிஞ்சு போயிடுத்து. துக்கம் விசாரிக்க வந்தவா; அழுதவா; ஆறுதல் சொன்னவா எல்லாருமே போயிட்டா.

இன்னும் நான் அவர் எனக்கு எழுதிவச்சிருந்த லெட்டரைப் படிக்கலை. அவருக்கு நான் எழுதின லெட்டர்; அவர் எனக்கு எழுதின லெட்டர் ரெண்டுமே பிரிக்கப் படாமே என் கையில் இருக்கறது. ரெண்டு மனசாட்சிகளோட சுயவிமரிசனம் தான் இந்த ரெண்டு லெட்டர்களும்னு நினைக்கறேன்.

அவரோட மனசாட்சி புனர்ஜென்மம் எடுத்திருக்கறது என்கறதை, அவரோட மரணமே எனக்குத் தெரிவிக்கற போது, அவரோட லெட்டரை நான் படிச்சுத்தான் தெரிஞ்சுக்கணுமா?

# மன்னிக்கப்படாத பாவங்கள்

எஸ். டி. போஸ்

அறைக் கதவு சாத்தியிருந்தது.

மேசையின்மீது திறந்து கிடந்த ஜெபப் புத்தகத்தின் பக்கங்கள் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தன. கைகளில் ஜெபமாலையை உருட்டியவாறு பிரார்த்தனையில் மூழ்கியிருந்தார் — ஜோசப் சுவாமியார். அவரது கண்ணிமைகள் பாதி மூடியிருந்தன. உதடுகள் மௌனமாகத் துடித்துக் கொண்டிருந்தன. மண்டியிட்டுக் குனிந்திருந்த அவர், சற்றைக்கொருமுறை தலையை உயர்த்தி எதிரே பார்க்கும்போது, அங்கு எரிந்து கொண்டிருந்த மங்கலான மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அவரது கண்கள் பளபளத்தன.

எதிர்ச் சுவரில் — பதிக்கப்பட்டிருந்த மரப் பீடத்தில் —

'உலகத்தின் சகல விதமான பாவ அக்கிரமங்களும், இப்படித்தான் சிலுவையில் அறையப்பட்டு, நிஷ்டூரமாய்ச் சாகடிக்கப்பட வேண்டும்' என்பதின் பிரத்யட்சமான அடையாளம் போல — இயேசுவின் உருவச்சிலை காட்சி தந்து கொண்டிருந்தது. அருகே, இரு புறங்களிலும் மெழுகுவர்த்திகள் எரிந்து தீய்ந்து கொண்டிருந்தன.

கர்த்தரின் திருப்பணிக்காகத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துவிட்ட அவர் இந்த மண்ணுலகத்தின் சிறிய ஆசைகளையெல்லாம் உதறி எறிந்துவிட்ட அவர் — இனி தான் இழந்து தியாகம் செய்து பெருமைப்படுவதற்கு தன்னிடம் எதுவுமே மீதமில்லை என்பதை உணர்ந்தவர் போல — தன் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துப் பெருகி வரும் பக்திப் பெருக்கில் —, மனத்தைச் சுகப்படுத்தி சாந்தியளிக்கும் அந்த மோன நிலையில் — தன் நினைவுகளையே கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தார்...

திடீரென —

அறைக் கதவு 'கிறீச்'சிட்டது. அந்த சிறு அசைவுகூட அங்கு நிலவியிருந்த பேரமைதியைக் கிழித்துக் கொண்டு சீறுவதாகயிருந்தது.

ஜோசப் சுவாமியார் — மெதுவாகத் திரும்பிப் பார்த்தார். ஜெபப் புத்தகத்தை மூடி, கையில் எடுத்துக் கொண்டு எழுந்து வந்தார். அறை வாசலில் கலைந்த தலையும், கலங்கிய முகமுமாக நின்றிருந்த தாமஸைக் கண்டு திடுக்கிட்டார்.

அவன் தன் இரு கரங்களையும் கூப்பி "தோஸ்திரம் சுவாமி" என்றான்.

"கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!" — சுவாமியார் கைகளைத் தூக்கி அவனை ஆசீர்

வதித்தார். அமைதியும் சாந்தமும் நிறைந்துபொலிந்த சுவாமியாரின் முகத்தையே பார்க்கக் கூசியவனாய் தாமஸ் தயங்கித் தயங்கி அவரருகே வந்து நின்றான். அவனது உடல் லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

"சுவாமி..............."—மேற்கொண்டு சொல்ல முடியாமல் அவனது தொண்டைக்குள் ஏதோ அடைத்தது. உதடுகள் மௌனமாக அசைந்தன.

"சொல்லு, மகனே... ஏன் தயங்கிறே...?"—

"சுவாமி...... எப்படியும் அதை உங்க கிட்ட சொல்லிட னும்'னுதான் நெனைக்கிறேன். ஆனால்... அதை எப்பிடி ஆரம்பிச்சுஎப்பிடிமுடிக்கிறதுன்'னு எனக்கே தெரியலே...—உணர்ச்சிப் பெருக்கால் அவனது குரல் கரகரத்தது. நெஞ்சுக்குள் இறுகி இரும்பாய்க் கனத்துக் கிடக்கும் தன் மனோவியாகூலங்களை வார்த்தைகளால் சொல்ல முடியாமல் அவன் தவிப்பதை—அவனது முகமும் கண்களும் உணர்த்திக் கொண்டிருந்தன."

சுவாமியார் அவனை ஆதரவாகப் பார்த்தார்.

கண்களிலிருந்து பெருகி வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டே, அவன் சுவாமியாரை ஏறிட்டுப் பார்த்தான்.

"சுவாமி... நான் ஒரு கொடிய பாவத்திலே விழுந்திட்டேன்... பசாசின் பெரிய சோதனைக்கு பலியாயிட்டேன் ... தெரியாம செய்யிறதுதான் 'பாவம்'னு நீங்க அடிக்கடி சொல்லுவீங்களே சுவாமி... ஆனால் இப்ப நான் செய்திருக்கிற பாவம், நல்லா தெரிஞ்சிருந்தும்—அதன் சம்பாவனை என்னன்னு அறிஞ்சிருந்தும்—சராசரி மனுஷனுக்குரிய பல வீனத்தோடு அந்தக் கொடிய பாவத்தின் வலையிலே விழுந்திட்டேன்... இப்போ சொல்லுங்க. என்னுடைய பாவத்துக்கு மன்னிப்பு உண்டா...?"

"கலங்காதே தாமஸ்... கர்த்தர் கல்வாரி மலையிலே சிந்திய விலை மதிப்பற்ற இரத்தம் நம்மைச் சகல பாவங்களில் நின்றும் சுத்திகரிக்கும் ... இதை நீ உறுதியாக நம்பு..: குழம்பாமல் உன்னுடைய பாவத்தைச் சொல்லு... ம்..."

சுவாமியார் அவனுக்கு பாவ சங்கீர்த்தனம் கொடுப்பதற்கு ஆயத்தமானார். அவர் நாற்காலியில் போய் அமர்ந்ததும் தாமஸ் அவரருகே மண்டியிட்டுக் குனிந்தான் :

"சுவாமி...... காசுக்காக உடலை விற்கும் ஒரு வேசியிடம் நேற்றிரவு என்னையே நான் பறி கொடுத்திட்டேன். அற்ப நேர சுகத்துக்காக என்னுடைய ஆத்மாவையே கறைப் படுத்திட்டேன்.. சுவாமி, என்னை மன்னிச்சிடுங்க... மன்னிச்சிடுங்க..."

—அவனது தோள்கள் குலுங்கின. தான் புரிந்த பாவத்துக்காக உண்மையிலேயே மனஸ்தாபப்பட்டு இதயம் கசிந்து அழுது பிரலாபிக்கும் அவனுடைய மாசற்ற

உள்ளத்தை உணர்ந்து கொண்ட மகிழ்ச்சியோடு அவனை ஆதரவாகத் தூக்கி நிறுத்தினார் சுவாமியார். அவர் தன்னைத் தூக்கி நிறுத்திய அந்தக் கணமே- தன்னுடைய இதயத்தில் கப்பிக்கிடந்த சகலவிதமான பாவங்களும்— தன்னிலிருந்து விடுபட்டுக் கழன்று போய் விட்டதாக அவன் தனக்குத் தானே எண்ணிக் கொண்டபோது—அந்த எண்ணமே அவனுக்கு மிகப் பெரிய ஆறுதலாகத் தெரிந்தது.

தான் வெளியிட்ட பாவங்களுக்குப் பிராயச் சித்தமாக— சுவாமியார் ஜெபிக்கச் சொன்ன மந்திரங்களை தாமஸின் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

கடியாரத்தின் 'டிக்டிக்' ஓசை மட்டுமே அந்த ஆழ்ந்த அமைதியில் துல்லியமாக கேட்டுக் கொண்டிருந்தது... ஜன்னல் வழியே உள்ளே வந்து மோதிய காற்றில், மெழுகு வர்த்தியின் சுடர்கள் நடுங்கிக் கொண்டிருந்தன...

சுவாமியாரின் நினைவுகள் கடந்த காலத்தை நோக்கி, வெகு வேகமாக ஓட்டம் பிடித்தன.

அவர் தனக்குத் தானே சிரித்துக்கொண்டார். கன்னங்களின் இருபுறமும் அடர்ந்து வளர்ந்திருந்த வெண்ணிறத் தாடிகளுக்கு நடுவே—அவரது சிவந்த உதடுகள் நெளிந்து அடங்கின. தாடியைத் தம் விரல்களால் கோதிக் கொண்டே, புருவங்களை நெரித்தார்:

"......... ம்ம்... உலகத்திலே யார்தான் பாவம் செய்யலே ...? எங்கதான் பாவம் நடக்கலே...? பெண்ணின் பேராலே ... மண்ணின் பேராலே இடத்தின் பேராலே... இப்படி எதன் எதன் பேராலோ என்னென்னவோ பாவங்கள்...! வெளியே தெரியாம மறைக்கப்பட்ட பாவங்கள்...! வெளியே தெரிஞ்சிடுமோன்'னு பயந்து பயந்து இருட்டுக்குள்ளே இரகசியமாக செய்யப்பட்ட பாவங்கள்...! மீறி வெளியே வந்திடும்போது "இதை நான் செய்யவே இல்லை"ன்னு மனுஷனாலே மறுக்கப்பட்ட பாவங்கள்...! ஓ...! இப்படி வகைவகையான பாவங்கள்... மனுஷர்கள் பலவிதம்... அதனாலே பாவங்களும் பலவிதம் ... என்னுடைய இந்த பதினைஞ்சி வருஷ சுவாமியார் வாழ்க்கையிலே இது மாதிரி எத்தனையோ பேருடைய பாவங்களைக்கேட்டுட்டேன் ... கேட்டு கேட்டு சலிச்சிட்டேன் ... ஆனால் பாவத்தின் மேலே இன்னும் யாருக்கும் சலிப்புத் தட்டலே... அதுக்குப் பதிலா பாவங்களின் பேரிலே மனுஷனுக்கு ஒரு ஆவேசமான மோகம், அடக்க முடியாத, உக்கிரமான வெறி வளர்ந்துக்கிட்டே போகுது... ஆமா... அப்படித்தான்... சுவாமியார் மேலும் கீழுமாகத் தலையை ஆட்டிக் கொண்டார். அவரது நெற்றியிலும், கழுத்திலும் அரும்பியிருந்த வியர்வைத் துளிகள்

முத்துக்களாய் மின்னின. நெற்றியைத் தம் விரல்களால் வருடியபடியே—ஜன்னல் கம்பிகளுக்கு வெளியே கப்பிக் கிடந்த இருளுக்குள் அவர் பார்வையைப் பதித்தார்.

ஏதோ தீவிரமான யோசனையில்— தான் அருகே வந்து நிற்பதுகூட தெரியாதவராய்—அல்லது தன்னை அறவே மறந்து விட்டவராய் சுவாமியார் தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டதைப் பார்த்த தாமஸ்—அவருடைய சிந்தனையைக் கலைக்க மனமில்லாதவனாய் — அமைதியோடு அவரையே பார்த்துக் கொண்டு பவ்வியமாக நின்று கொண்டிருந்தான்.

வெண்மையும் கருப்புமாய் கலந்து, அடர்ந்து வளர்ந்திருந்த தாடியைத் தடவிக் கொண்டே, கன்னங்களையும் சொறிந்து கொண்டார் அவர்.

"சில சமயங்களிலே இந்தச் சரீரத்திலேவர்ற சிரங்குகளைச் சொறிகிறதிலே ஒருவித சொகம் கிடைக்கிறதில்லையா... அது மாதிரிதான்... இந்த மாதிரி பாவங்களைச் செய்யிறதிலேயும் ஒருவித சுகம்... ஆமா... 'அற்ப நேரத்துச் சுகம்'... எவ்வளவு சாதாரணமா சொல்லிடறோம்... ஆனால், அந்த 'அற்ப நேரத்துச் சொகம்'தானே ரொம்ப 'பெரிசா' தெரியிறது... அதிலே தானே எல்லாமே அடங்கி இருக்கிறதா எல்லா மனுஷரும் நினைக்கிறாங்க .. ஏன் .. நானே அப்பிடி நெனைக்கலையா...? அப்படி நெனைக்கும்படியான ஒரு காலம் எனக்கும் இருக்கவில்லையா... அதேதான், அப்படியேதான் மீண்டும் மீண்டும் தொடர்ந்து இன்னும் நடந்துக்கிட்டிருக்கு... உலகத்திலே எல்லா மனுஷருமே பாவம் செய்தவங்கதான்... மனுஷன் பாவம் செய்துதான் ஆகணும்... பாவம் செய்யாதவனுக்குப் பேரு மனுஷனில்ல ... பாவம் பண்ணுதவன் மனுஷனைக் காட்டிலும் உயர்ந்தவன்... 'அவனுலே அந்தப் பாமர மனுஷங்களோட வாழ முடியாது... ஒருவன், 'தான் பாவமே செய்யலே' ன்னு சொன்னு, அவன் மத்தவங்களை ஏமாத்துறுன் ... மனுஷர்களை மட்டுமில்லே... கடவுளைங்கூட ஏமாத்துறுன்... சின்னத்தனமான பாவங்களிலே சறுக்கி விழுந்து கொண்டே, கேவலமான இச்சைகளை நினைத்து மனசுக்குள்ளே ரசித்துக் கொண்டே—தன்னை மத்தவங்களுக்கு முன்னுலே புண்ணியவான்னு காட்டிப்பெருமைப்படறதிலே என்ன இருக்கு...? அந்தப் பெருமையினுலே என்ன கிடைக்கப் போகுது...? அவனவன் தன் மனசை அந்தரங்க சுத்தமா சோதனை செய்து பார்த்தா..., இந்த உலகத்திலே எத்தனைபேர் உண்மையான புண்ணியவானு இருப்பாங்க...?

—காற்றில் படபடத்த தன்னுடைய நீண்ட வெண்ணிற அங்கியை கைகளால் அடக்கிய

படி, ஒரு பக்கத்து ஜன்னல் கதவைச் சாத்திவிட்டு, கையிலிருந்து ஜெபமாலையைத் தடவியபடியே மீண்டும் எண்ணங்களினுள் மூழ்கினார் ஜோசப் சுவாமியார்...

இந்த நீண்ட அங்கியையும், சிகப்பு கச்சையையும் கட்டிக்கிட்டு இப்படி ஒரு கத்தோலிக்க மத குருவாக நான் வர்றதுக்கு முன்னாலே, ஆமா...அப்போ நான் திருச்சி செயிண்ட் ஜோசப் காலேஜிலே படிச்சிக்கிட்டிருந்தேன் ...... எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு...... அது இளமை பொங்கும் இனிய பருவம்.. நெஞ்சிலே மலைமலையாய் கனவுகள் பூக்கிற வயசு...தூங்கிற போது காணுகிற அதிசய சொப்பனங்கள் கூட உண்மையாயிடக் கூடாதோன்னு நினைக்கத் தூண்டுகிற வாலிபம்...... அப்போதான் நான் அந்தப் பாவத்தைச் செய்தேன்......... அது 'பாவம்'னு நல்லா தெரிஞ்சிதான் செய்தேன்... இப்ப கொஞ்சம் முன்னாலே தாமஸ் என்னிடம் சொன்னானே, அதை மாதிரிதான்... அதே பாவம்தான் ......'நான் ஏன் அந்தப் பாவத்தைச் செய்தேன்னு — அதைச் செய்த பின்னும்—இப்படி யாராவது இது மாதிரி பாவங்களைச் சொல்லி மன்னிப்புக் கேட்கிற போதும் நான் பல முறை நெனைச்சிப் பார்த்திட்டேன்... நான் ஏன் அப்போ அந்த பாவத்தைப் பண்ணினேன்...? எனக்குக் கிடைச்ச ஒரே பதில்; 'அன்றைக்கு அந்தப் பாவத்தைச் செய்யாம என்னாலே இருக்க முடியலே...அதனாலே செய்தேன்.........அது மாதிரிதான் எல்லோரும் ...... இந்த தாமஸூம் கூட அப்பிடித்தான்...

—அடக்கிக் கொள்ள முடியாத ஏதோ ஓர் அவசரத்தோடு— ஆவேசத்தோடு, கடந்து போன எல்லாவற்றையும் — தன்னையும் மீறிய ஒரு வித பரபரப்போடு அவர் ஞாபகத்துக்குக் கொண்டு வர முயற்சித்தார்...

"யார் சொன்னது வயசானால் மறதி அதிகம் ஆகிவிடும்னு?'... அப்படியே வயசானாலும் எல்லாமா மறந்து போயிடுது.. இப்போ நான் என்ன நெனைச்சேன்...?

—சுவாமியார் தனக்குள்ளே சிரித்துக் கொண்டே, மரப் பீடத்திலே எரிந்து கொண்டிருந்த மெழுகு வர்த்திகளை சில நிமிடங்கள் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆமா..., எத்தனையோ வருஷத்துக்கு முன்னாலே நடந்தது, நேத்து நடந்தது மாதிரி அப்பிடியே ஞாபகத்துக்கு வருது ... இப்போ கொஞ்சம் முன்னாடி நெனைச்சதை அதுக்குள்ள மறந்து போயிட்டேனே...ம்...ஆங்...அப்போ நான் திருச்சி செயிண்ட் ஜோசப் காலேஜிலே படிச்சிக்கிட்டிருந்தேன். கிறிஸ்மஸ் லீவு விட்டதும், நாங்க எல்லாம் வீட்டுக்குப் புறப்படுவதற்காகத் தயாராகிக்கிட்டிருந்தோம் ... ஆமா

...ஒரு நாள் வெளியே ரூம் எடுத்துத் தங்கிட்டு அடுத்த நாள் தான் ஊருக்குப் புறப் பட்றதுன்னு முதல்லே நான் முடிவு பண்ணிக்கிட்டேன்... காலேஜிக்கு லீவு விட்டுட் டாங்க...அன்னைக்கு ராத்திரி தான் ...... அந்த டிசம்பர் மாசத்து இரவிலே, வெளியே குளிர் காத்தோட. பனியும் பெய்துக்கிட்டிருந்தது ... என் னுடைய உணர்ச்சிகளெல் லாம் தினவெடுத்துச் துடிச் சுது ... உடம்பு முழுவதும் சூடேறிக் கொதிச்சுது... ஏனோ...அதை என்னுலே தாங் கிக் கொள்ளவே முடியலே... அந்த நேரத்துக்கு இதமா ஏதாவது ஒரு இளம் பெண் ணின் உடலைக் கெட்டியாய்ப் பிடிச்சு அணைக்கணும் போல —மறைக்கப்பட்ட சில அங் கங்களை மனசுக்குள்ள நிர் வாணமா நெனைச்சிப்பார்த்து, அவைகளைத் தழுவி, தடவி, ருசித்து அனுபவிக்கணும் போல ஒரு வித வெறி...என் நாடி வேகமாக அடித்துக் கொண்டது. அந்தக் குளிரிலே யும் என் உடம்பெல்லாம் வேர்த்து ஒழுகிச்சு...அன்னைக் குத் தான், அந்த இராத்திரி தான்—நான் முதன் முதலா அந்தப் பாவத்தைச் செய் தேன் ..... ஒரு. பெண்ணிடம் காசு கொடுத்து சொகம் அனு பவிச்சேன் ... எத்தனையோ பேரோட எப்படி எப்படியோ சீரழிஞ்சிபோன ஒரு வேசை யோட படுக்கையை நான் பங்கு போட்டுக் கொண்டது பாவமில்லையா ...? என்னு டைய மதத்து முறைப்படிப் பார்த்தா அது ஆருங்கட்ட ளைக்கு விரோதமான பாவம்... அதெல்லாம் தெரிஞ்சிருந் தும்—நான் செய்திட்ட பாவத் தைப் பற்றி கொஞ்சங்கூட கவலைப்படலே...இந்த தாமஸ் மாதிரி நான் அழுது அழுது வீங்கிப் போகல்லே...உலகத் திலே நாம அனுபவிக்கிற எல்லா சுகமும் நாம் காசு கொடுத்துத்தானே அனுப விக்கிறோம் ... எத்தனையோ வாழ்க்கைக்குத் தேவையான சௌகரியங்களைக்காசுகொடுத் துத் தானே பெற்றுக் கொள் ளுகிறோம்...அதைப் போலத் தான் இதுவும்......—இப்படி என்னையே நான் சமாதானப் படுத்திக்கிட்டேன் ... இதைப் போயி 'பாவம்'னு ஒரு பாதிரி யார் கிட்ட சொல்லி, மன்னிப் புக் கேட்கிறதா...சே...அப்படி மன்னிப்புக் கேட்கிறது, ரொம்ப அசிங்கமா — ஆமா. செய்த பாவத்தைவிடக் கேவ லமா எனக்குத் தெரிஞ்சுது .. இருட்டிலே செய்த பாவத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வர எனக்கே கூச்சமா தோணிச்சு .... அதை என் னோடே நான் மறைச்சிட் டேன்...அதிலே, அந்தப் பாவம் மன்னிக்கப்படாது என்பதும் எனக்குத் தெரி யும்......

இப்போ..... நினைக்கவே எனக்கு ஆச்சரியமாத்தான் இருக்கு...கிறிஸ்துவ சத்தியங் களையும், வேதப் பிரமாணங்

களும், முந்திரிமர முந்திரிகளும் அலுத்துப் போய்விட்ட என் கண்களில், அந்த டார்சன் விளை வேலியருகில் நின்றவாறு ஒரு ராட்சஸப் புளியமரம் இந்தக் கொல்லையின் மீது தன் மஞ்சள் நிறத் தளிர்கள் புடை சூழ்ந்திருந்த கிளைகளை நீட்டி ஆட்டிக் கொண்டிருந்தது தட்டுப்பட்டது. மூன்றடி மண் சுவரில் ஏறி நிற்பது எனக்கு ஒரு பெரிய காரியமாக இருக்கவில்லை. அதன் மீது நின்று கொண்டு கைகளை நீட்டிய போதும், அந்தத் தளிர் கொத்துக்கள் என் விரல் நுனிகளில் பட்டும் படாமலும் விளையாடிக் கொண்டிருந்தன. காற்றில் லேசாய்க் கீழிறங்கி வந்து என் கைகளுக்கு முத்தம் தந்து என்னைக் கிசுகிசு மூட்டி விளையாடிக் கொண்டிருந்தன அந்தக் கிளைகள். அந்த மண் மதிலின்மீது நெடு நீளத்தில் பரப்பியிருந்த கொல்லம் ஓட்டில், குதிகாலை உயர்த்தியவாறு எட்டி நின்று கொண்டு, என் கையை எத்தனைக்கு முடியுமோ அத்தனைக்கு நீட்டி இலைகளைப் பறிக்க, விடாமல் முயன்று கொண்டிருந்தேன். அந்தக் கணத்தில் தான், என் வாழ்க்கையில் முதன் முறையாக அந்த அழைப்பு ஒலி என் செவியருகில் அடக்கமான தொனியில் குசுகுசுத்தது.

'முரளீ...'

இப்போது நினைத்தாலும் என் உடலம் புல்லரிக்கிறது, அப்படி அன்பும் ஆசையும் குழைந்து இழையோடும் மதுரமான அழைப்பு...! அவ்வளவுதான் எனக்குத் தெரியும். பிறகு எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. நேரம் எவ்வளவு ஆனது என்றும் புரியவில்லை. மெல்ல மெல்ல உணர்வுகள் திரும்பிக் கொண்டிருந்த போது, சுற்றிலும் வாரித் தேய்க்கப்பட்டிருந்த இருளை என்னால் இனம் காண முடிகிறது. கொஞ்சம் கொஞ்சமாய் என் மூளை வேலை செய்யத் தொடங்கையில், என் உடம்பெல்லாம் எரிவதை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. நான் தண்ணீரில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஓடிக்கொண்டிருந்த நீரின் ஆழம் அதிகமில்லாததால் மட்டுமல்ல, என்னை இழுத்துக் கொண்டு செல்லும் சக்தியும் அதற்கு இல்லை போலிருக்கிறது. பலகீனமாய் ஓடிக் கொண்டிருக்கும் அந்தக் கால்வாய்த் தண்ணீர் பட்டோ, இல்லை என் வியர்வை நீர் பட்டோ, என் உடம்பில் அங்கங்கே எங்கெங்கெல்லாமோ உள்ள சிராய்ப்புகளில் விண் விண் என்று வேதனை தெறிப்பதும் தெரிகிறது. உடம்பில் வேறெங்கெல்லாமோ உள்ள ஊமைக் காயங்கள் வேறு முணு முணுத்துக் கொண்டிருந்தன. ஆனால் ...... இதையெல்லாம் மீறி என் செவியில் ஒலித்த அன்பழைப்பை என் மனமும், ஒரு சிறு புளியிலைக் கொத்தை என் கைவிரல்களும் இறுகப்பற்றிக் கொண்டிருந்தன.

"என்ன சார்......ப்ரீவியஸ் பேப்பரையா தேடுகிறீங்க? அது இதோ இருக்கிறது."

பக்க வாட்டில் நான் நீக்கி வைத்திருந்த டைப் செய்த தாள்களை எடுத்துப் புரட்டி, கடைசியிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் நீட்டினாள் மோளி.

இறுதி அழைப்பை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் நான், அயர்ந்து தூங்கையில், அடிக்கடி, இயக்கம் ஸ்தம்பித்துப்போன இதயத்துடன் நான் கீழே கீழே அதல பாதாளத்தில் போய்க்கொண்டிருப்பதாய்க் கனவு கண்டு திடுக்கிட்டு விழிப்பது உண்டு. ஆனால் அந்த அழைப்பு வரும் முன், செய்து தீர்க்க வேண்டியவைகளை எல்லாம் நான் செய்து தீர்த்து விட்டேனா? ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு விலை மதிப்பில்லாதது. அதை வீணே செலவழிப்பது பாபம் தான். கல்யாணம் முதலிய வம்பு தும்புகள், தாய் தந்தையர்கள் முதலிய லௌகிக பந்தங்கள் எதுவும் இல்லாத என் பாங்க் அக்கௌண்டின் ஐந்தெண் தொகையின் செலவென்ன? கணிசமான என் பிராவிடண்டு பண்டுக்கும், நான் இன்ஷூர் செய்திருக்கும் முப்பதாயிரத்திற்கும் 'நாமினி' யாரென்று நான் இன்னும் அறிவிக்கவில்லை.

இதோ என் முன்னால் ரத்த நிறச் சாயத்தால் நகங்கள் பளபளக்கும் மோளியின் இளம் வெண்டைக்காய் விரல்கள்... மொழு மொழு வென்று கைகளில் தெரியும் பூனை ரோமங்கள்.. ஜாக்கெட்டின் கையிடுக்கில் ஈரம்...இவள் நெஞ்சுக்குள் சுவாசம் முட்டி நிற்கும் பருவ வாளிப்பு வெளியே தலை நீட்டி என்மீது பாய்ந்துவிட தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறதா?

தோமஸிடமிருந்து இவளை எனக்கு விலைக்கு வாங்க முடியுமா?

எதுக்கு?

"என்ன சார்...உடம்புக்கு சுகமில்லையா?"

கையொப்பமிட்ட டைப் செய்த கடிதங்களையும், ஃபைலையும் அவசரம் அவசரமாய் கையில் எடுத்துக் கொண்டு, என்னை ஒருவிதமாகப் பார்த்தவாறு அவள் திரும்பியதும், நான் கையை நீட்டினேன். அவளுக்காக நீட்டிய என் கையில், அவள் கையிலிருந்த ஃபைல்களும், கடிதங்களும் மறுபடியும் இடம் மாறின.

இப்போது வாசிக்கும் போதுதான், அந்தக் கடிதத்தின் வரிகளின் பொருள் எனக்குப் புரிகிறது. ஒரு லட்சம் ரூபாய்க்கான ஒரு பர்ச்சேஸ் ஆர்டர் இன்னாருக்குக்கொடுக்கலாமா என்று என் மேலதிகாரியின் அனுமதி கோரி நான் எழுதும் கடிதம் அது.

டைப் செய்திருக்கும் ஊதா நிற வரிகளின் மீது என் பேனா விளையாடிவிட்டு நீங்கிய போது, குண்டு குண்டாய்ப் பச்சை வர்ணத்தில் ஆங்கில எழுத்துக்கள் கண் சிமிட்டு

கின்றன.

'ஐ லவ் யூ...'

மேலே இருந்த அந்தக் கடிதத்துடன் ஃபைலை அவளிடம் நீட்டும்போது குரூரமாய் அவள் விழிகளைச் சந்திக்க என் விழிகளை ஏவுகிறேன்.

அவள் முகத்தில் கலவரம் தெரிகிறது. முகத்தில் வியர்வை அரும்புகிறது. அந்த ஃபைலையோ, கடிதத்தையோ எடுக்கக்கூட நிற்காமல், அவசரம் அவசரமாய் அறையை விட்டு வெளியேறத்திரும்பிய அவளிடம், 'ப்ளீஸ் டேக் இட் ஆல்ஸோ...' என்று அந்தக் கடிதத்தை மட்டும் எடுத்துக் கொடுக்கிறேன். ஒருவித அச்சத்துடன், விலகி நின்று அக்கடிதத்தை என் கையிலிருந்து பெற்றுக்கொண்டு அவள் அறையைவிட்டு வெளியேறினாள்.

நான் காலேஜில் வாசித்துக் கொண்டிருக்கையில், மெயின் ரோடு வழி ஸ்கூட்டரில் விரைந்து கொண்டிருந்தேன். என் முன்னால் சென்றுகொண்டிருந்த மீன்லோடு ஏற்றியிருந்த ஒரு லாரியை நான் ஓவர்டேக் செய்யும்போது, மின்னல்போல் ஒரு டாக்ஸி என் முன்னே வருவது தெரிகிறது. சடக்கென்று என் செவியருகில் அந்தப் போதையேற்றும் அழைப்பு, என் பெயர் சொல்லித்தான்...

'முரளீ.'

பிறகு நான் கண்விழிக்கும் போது, கட்டித் தொங்கவிடப் பட்டிருந்த கைகால்களுடன் நான் ஆஸ்பத்திரியில் கிடப்பதைப் புரிந்துகொள்கிறேன்.

இப்போது என் அறைக்குள் பத்துப் பதினைந்து பேர்கள் நுழைகிறார்கள். எல்லோருடைய முகங்களிலும் எள்ளும் கொள்ளும் வெடிக்கின்றன. ஒரு ஈன ஜன்மத்தைப் பார்ப்பதுபோல் என்னை அவர்கள் எல்லோரும் பார்க்கிறார்கள். முன்னால் நின்ற டெஸ்பாட்ச் குமாஸ்தா தோமஸின் கையில் ஒரு காகிதம் படபடக்கிறது.

"சார்... இதென்ன...?"

அவன் முகம் சிவப்பது தெரிகிறது.

"என்ன தோமஸ்...?"

"என்னவா?" என்று கத்தியவாறு என் முகத்தின் நேராக அந்தக் காகிதத்தை அவன் நீட்டினான்.

அதில் பச்சையெழுத்துக்கள் பளபளக்கின்றன. என் கையெழுத்துக்குத்தான் இவ்வளவு கவர்ச்சியா? "இந்த லெட்டர் யாருக்கு அட்ரஸ் செய்யப்பட்டிருக்கிறதென்று நீ பார்க்கவில்லையா? ரொம்ப அர்ஜண்டாச்சே... இதை இன்னும் நீ டெஸ்பாட்ச் பண்ணலையா...?"

அவன் நறநறவென்று பற்களைக் கடிப்பது எனக்குக் கேட்கிறது. கூடவந்திருந்த ஏனைய காரியாலய ஊழியர்களும் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அவர்கள் எல்லோரும் அவரவர் அறிவுக்கு எட்டியவாறு உரத்தகுரலில் வசைமாரி

பொழிந்தவாறு கொதித்துக் கொண்டிருந்தார்கள். அடிக்கடி காரசாரமாய் எதையோ கேட்டுவிட்டு, மேஜை மீது கை முஷ்டியால் ஓங்கி ஓங்கிக் குத்துவதும் தெரிகிறது.

பூத கணங்கள்போல் நெடு நீளத்தில் டிரான்ஸ்பார்மர்கள் நின்று கொண்டிருக்கும் சப் ஸ்டேஷனில் ஆப்பரேட்டராக நான் வேலையில் பிரவேசித்த மூன்றும் நாள் இரவு......, டிரான்ஸ்பார்மர்களின் இடைவழி நான் நடந்து கொண்டிருந்தேன்... திடீரென்று என் காதருகில் அந்த அன்பழைப்பு ......

'முரளீ...'

அதோடு ஒரு இடி முழக்கத்துடன் கண்ணைக் குருடாக்கி விடும் பிளாஷ் ஓவர்... எல்லா இடமும் இருளில் முழுகி விட்டது... ஆனால் நான் எரிந்து கொண்டிருந்தேன்... அந்த வெளிச்சத்தில், சடசட வென்று யார் யாரெல்லாமோ என்னருகில் ஓடிவரும் அரவம் கேட்டது.

ஹைடென்ஷன் மின்சார மின்வெட்டில், என் தலைமயிர்கள் யாவும் கரிந்து சாம்பலாகிய பின்னும், அங்கங்கே தீக்காயங்களுடன் பிழைத்துக் கொண்ட என் ஆயுள்பலத்தில் எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள்.

மின் விசிறிக்காற்றில் அந்த அறைக்குள் ஆர்ப்பாட்டமாய் பறந்து கும்மாளம் போட்டுக் கொண்டிருந்த சுக்கல் நூறாய் கிழிபட்டு எனக்கு அபிஷேகம் செய்யப்பட்ட கடிதத்தின் துண்டுகளில், அந்தப் பச்சை நிற எழுத்துக்களை என் கண்கள் தேடிக்கொண்டிருக்கையிலும், 'முரளீ...' என்று என் பெயர் சொல்லிக் கடைசித் தடவையாக என்னை அழைக்க விருக்கும் அந்த அழைப்பிற்காக நான் காத்திருப்பதை என்னால் மறக்க முடியவில்லை.

*



அனுபவம்
EXPERIENCE

வெளிப்பாடு
EXPRESSION

நவீன ஓவியம்
MODERN ART

# 4

அனுபவம் காட்சி ரூபமாக ஓவியம் தீட்டப்படுவதற்குப் பின்னர் வருகிறேன். இப்போது மொழி ரூபத்தைப் பற்றிப் பேசுவோம். ஜானகிராமனின் மலர் மஞ்சம் என்ற நாவலில் இரண்டு காட்சிகள். ஜானகிராமன் உங்களுக்கு எல்லாம் புரிகிறவர்தான். தமிழ் உங்களுக்கெல்லாம் தெரிந்த பாஷை தான். அப்படித்தானா? எனக்குச் சந்தேகம் தான். உங்களில் பலர் புரிந்து கொண்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பார்க்கலாம்.

வெ. சாமிநாதன்

தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் ஆலயப் பிரகாரத்தில் பாலி, ராமையா, செல்லம், தங்கராஜு எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். பாலி, பிறந்த க்ஷணமே, தங்கராஜுவுக்கு வாக்களிக்கப்பட்டவள். அந்தவாக்கின் ஞாபகத்திலேயே வளர்க்கப்பட்டவள். அந்த வாக்கின் நிறைவேற்றத்தைக் காணும் நாளை எதிர்பார்த்தே கிழவனாகி விட்ட ராமையா. பாலி என்று தனக்குக் கிடைக்கப் போகிறாள் என்று நாட்களை எண்ணும் தங்கராஜு. ஆனால் பாலிக்கு ராஜாவிடம் ஈடுபாடு. தனக்கு என்று ஒரு வாழ்க்கை. ஒரு இச்சை. மனம் உண்டு என்று எண்ணிப் பார்க்காதவாறு ஏதோ மாடு விற்பது போல, ஒரு கரண்டி கடுகு அடுத்த வீட்டுக்காரிக்குக் கொடுப்பது போல, தான் பிறந்த க்ஷணம் தன்னை தங்கராஜுவுக்கு அர்ப்பணித்து விட்ட தந்தை ராமையாவிடம் பாலிக்கு ஒரு ஆற்றாமை. லட்சியத்திற்கும், வாக்கைக் காப்

பாற்றும் நிர்ப்பந்தத்திற்கும் தன் ஒரே மகள் இஷ்டத்திற்கு மாருக நடந்துவிட்ட சந்தர்ப்பங்களின் சதிக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கும் ராமையா. தன்னைத் தாறுமாருகப் பேசினுன் என்பதற்காகவே வையன்னுவைக் கொலை செய்துவிட்டு வந்து நிற்கும் தங்கராஜு. அவனையா பாலி ஏமாற்றப் போகிருள்? எட்டி அண்ணுந்து பார்த்த பாலியின் கண்களில் தஞ்சை கோபுரத்தின் உச்சியில் காக்கைகள் இரண்டு உட்கார்ந்திருப்பது படுகிறது. பாலி நினைக்கிருள்; இரண்டு காக்கைகள் உட்காரத்தாஞ இவ்வளவு பெரிய வானளாவிய கோபுரத்தை நிர்மாணித்தான் ஒருவன்?" இவ்வளவு தான். "அப்பா நீங்கள் சொல்றது சரின்னு தோன்றதுப்பா" என்கிருள் பாலி. இது எத்தனை பேருக்குப் புரியும்? புரிகிறது?

வார்த்தைகள் தான். தெரிந்த மொழிதான். ஆனுல் இந்த இடத்தில் ஒரு Quantum jump நிகழ்ந்திருப்பது தெரியாமலேயே, உணராமலேயே, (Prof Heisenberg-ன் quantum mechanic-ல் அவருடைய Principle of indeterminacy படி, ஒரு Electron தன் Orbit லிருந்து இன்னெரு Orbit-க்குத் தாவுவது பொது)—இங்கு ஒரு பாய்ச்சல் நடந்திருப்பதைப் புரிந்து கொள்ளாமலேயே, Language has abdicated its reign hue, at this point, என்பதை உணராமலேயே, கதையாகப் படித்து புரிந்து விட்டதாக எண்ணி கதைச் சுருக்கத்தை அடுத்தவருக்கு ஒரு கர்வத்துடன், பெருமிதப் புன்னகையுடன் சொல்லும் வாசகர்கள் அநேகர் உங்களில் உண்டு. காக்கைகளின் இருப்பிடமாக கோபுரம் மாறிவிட்ட இழி நிலை வரை உங்களை அழைத்துச் செல்வது மொழி, சப்த ரூபம். பின் ஒரு இடைவெளி. அந்த இடைவெளியை சப்த ரூபம் நிரப்பவில்லை. பின் "சரிப்பா. நீங்கள் சொல்றது தான் சரின்னு படறது" என்று தொடரும் இடம் சப்த ரூபம் பெறுகிறது. இடைப்பட்ட, இட்டு நிரப்பப்படாத இடைவெளி, எந்த ரூபமும் பெருத ஒரு Flash. மொழி இங்கு தன் சிம்மாசனத்தை விட்டு இறங்கி விடுகிறது. ஏனெனில், அநுபவத்தில், அதன் மூலஸ்தானத்தில், ஜானகிராமன் பெற்ற அநுபவத்தில், பாலியின் மனத்தில் நிகழ்ந்தது சப்த ரூபத்தில் அல்ல. ரூப இனம் காண முடிகிற சிந்தனு ரூபத்திலும் அல்ல. இன்ன ரூபம் என்ற வரையறை செய்ய முடியாத ஒரு ரூபமற்ற ரூபத்தில், Intuition என்று வைத்துக் கொள்ளுங்கள். Flash என்று வைத்துக் கொள்ளுங்கள், ஏதோ ஒன்று. உற்பத்தி ஸ்தானத்திலேயே அதற்குத் திட்ட வட்டமான ரூபம் கிடையாது. அது ஒரு இடைவெளி. மொழியிலும் அதற்கு குறி

யீட்டு உருவம் கிடையாது. இங்கும், எனவே, ஒரு இடைவெளி. இந்த ரூபமற்ற ரூபம், Intuition அல்லது Flash, உங்கள் பாஷையாக, உங்கள் அநுபவமாக, உங்கள் உலகமாக இல்லாவிட்டால், பாஷா ரூபத்தில் இட்டு நிரப்பப்படாது. ரூபமற்ற ரூப பாஷையால் நிரப்பப்பட்டிருக்கும் இவ்வெளியீட்டையும் நீங்கள் புரிந்து கொண்டிருக்க முடியாது.

இன்னும் ஒன்று. பாலி தன் வீட்டுக் கூடத்தின் தூணின் மேல் சாய்ந்து கொண்டு, ராமையா ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருப்பதைப் பார்க்கிருள். அவளுக்குத் தோன்றுகிறது! "இந்தத் தூணுக்கு என்ன அர்த்தம்? ராமையா ஆடிக்கொண்டிருக்கும் இந்த ஊஞ்சலுக்கு ஏன், ராமையாவுக்குத்தான் என்ன அர்த்தம்? இந்த தாழ்வாரத்திற்கு, அகப்பைக்கு, புழுக்கும் வெயிலுக்கு நின்று கொண்டிருக்கும் எனக்கு, இதெற்கெல்லாம் என்ன அர்த்தம்?" என்று நினைக்கிருள்.

ஜானகிராமனின் ஒரு சிறு கதையில், தன்மனம் ஈடுபட்டிருக்கும் ஒருத்தி வீட்டிற்குப் போகிருன் ஒருவன், அவன் போன பொழுது அவள் வீணை வாசித்துக் கொண்டிக்ருகிருள். அவள் வீணை வாசிப்பைக் கேட்டுக் கொண்டே, அங்கேயே, அவள் வாசிப்பைத் தடுக்காமல் உட்கார்ந்து விடுகிருன். சிறிது நேரத்தில் அவள் வீணை வாசிப்பில் லயித்த அவனுக்கு, அந்த சங்கீதத்தின் முன் தான், அவள் வாசிக்கும் வீணை, அவள், அந்த அறை, அங்கிருக்கும் நாற்காலி, சாமான்கள், உத்திரம் எதற்குமே அர்த்தமில்லாது போய் விட்டதாக வியர்த்தமாக, வீணுக இவையெல்லாம் எதற்கோ இங்கு நின்று கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

இதெல்லாம் சரி. அப்படித் தோன்றுவதாக நீங்கள் படித்து விட்டீர்கள். எழுதப்பட்ட வார்த்தைகளுக்கு அகராதி அர்த்தம் உங்களுக்குத் தெரியும். ஆனல் அந்த உலகத்தின் அர்த்தம், அந்த அநுபவத்தின் அர்த்தம், அந்த அர்த்தமற்று விட்டதன் அர்த்தம் உங்களுக்குத் தெரியுமா? புரிந்ததா? எப்படி? இந்த அர்த்தம் எங்கு மொழி ரூபம் பெற்றிருக்கிறது? இல்லையே. உங்களுக்குப் புரிந்ததென்ருல், அதற்குக் காரணம் ஒரு அநுபவம் இங்கு சப்த ரூபக்குறியீடாக அளிக்கப்பட்டதால் அல்ல. ஏனெனில் அந்த அர்த்தமற்ற அர்த்தம் அதன் மூலஸ்தானத்தில் எந்த ரூபமும் பெருதது. இந்த அர்த்தமற்ற அர்த்தம் உங்கள் அநுபவத்தில், சங்கீத ரூபக் குறியீட்டில் நீங்கள் பெற்றிருந்தால்தான், அந்த ரூபமற்ற ரூபத்தின் பாஷை தன் ரூபத்தில், தன் குறியீட்டு பாஷையில் வெளியிட முடியாது தோல்வியுற்று அடுத்த படிக்

குத் தாண்டிப் பாய்ந்து விட்ட இடை வெளியையும் நீங்கள் புரிந்து கொண்டிருக்கமுடியும். நீங்கள் புரிந்து கொண்டது பாஷையால் அல்ல. ஏனெனில் மூலஸ்தானத்தில் அதன் ரூபம் ஒரு ரூபமற்ற ரூபம்.—Intuition, a meditative flash.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக இருக்கும். நான் படித்த ஒரு கவிதையின் ஞாபகம். Goethe என்று நினைக்கிறேன். எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை. இங்கு தெரிந்தவர்கள் சொல்லக்கூடும். நிர்மலமான ஆகாயத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான் கவிஞன். ஆங்காங்கு சில மேகங்கள். தன்னை மறந்து அவ்வெளியின் வெறுமையில் ஆழ்ந்திருந்த கவிஞனின் பார்வையில், சற்று நேரத்திற்கு முன் அடிவானத்தில் ஒரு சிறு கூட்டம் குறுக்காகப் பறந்து வருவது தெரிகிறது. சில விநாடிகளில் அப்பறவைகள் வெண்புள்ளிகளாக பார்வையிலிருந்து மறைந்து விடுகின்றன. கவிஞனின் கண்களில் நீர் வழிகிறது. அழுத்தி வதைக்கும் ஒரு சோக உணர்வு அவன் மனத்தைப் பிழிகிறது. அவ்வெற்று வெளியில் சிறிது நேரம் கண்ட ஜீவத்தோற்றத்தில், சலனத்தில், மறைவில்—கணங்களின், நாட்களின், மாதங்களின், யுகங்களின், தன்னின், தன் குழந்தைகளின், சுற்றத்தின், உலகத்தின், பிரபஞ்சத்தின்,—தோற்றம், சலனம், மறைவு இவற்றைக் கண்டு விட்டான். அவன் சோகம், சோகத்தின் குறியீட்டை, உபமானத்தைக் கண்ட சோகமல்ல. அவன் அறிந்த, சுற்றியிருந்த எல்லாவற்றின் தோற்றம், சலனம், மறைவு இவற்றின் Actualityயை உணர்ந்து அநுபவித்த சோகம்.

உங்கள் ஓய்வு நேரப் படிப்பிற்காக, உங்கள் Aesthetic pleasure-க்காக, M.A. Literature பட்டம் வாங்குவதற்காக, சாஹித்ய அகாடமி பரிசு வாங்குவதற்காக, நான் இங்கு உங்களிடம் கட்டுரை படிப்பதற்காக எழுதப்பட்டதல்ல. அநுபவித்ததல்ல. இவையெல்லாம் எழுதப்பட்டபின், அநுபவித்தபின் சம்பந்தமே இல்லாது, உறவே இல்லாது பின்னர் நிகழும் நிகழ்ச்சிகள். உங்களைப் பற்றி அவனுக்குக் கவலை இல்லை. எந்தப் பறவை பறப்பதைக் கண்டு, உலகம் மறைவதாக உணர்ந்து, என்று நீங்கள் கண்ணீர் விட்டீர்கள்? படிப்பதற்குப் பிரமாதமாக இருப்பதாகச் சொல்லாதீர்கள். அது கவிஞனின் உலகத்திற்கும், கவிஞனுக்கும் செய்யும் துரோகம்.

உங்களுக்குப் புரிகிறதா? புரிகிறதா, என்றால் கவிஞனின் உலகத்தை நீங்கள் உணர்கிறீர்களா (Experience)? அவன் சோகத்தை நீங்கள் பகிர்ந்து கொள்கிறீர்களா? இல்லையெனில், வார்த்தைகளால், மொழியால் எதையும் செய்து விடமுடியும், சொல்லி

விடமுடியும் என்று சொல்லாதீர்கள். உங்களுக்கு மொழி என்ற சாதனம் புரியும், கைவரப் பெற்றது என்று சொல்லாதீர்கள். வேஷம் வேண்டாம். பகட்டு வேண்டாம். அசட்டு கௌரவங்கள் வேண்டாம்.

இதுதான் அடிப்படை, அநுபவங்கள் ஒத்திசைய வேண்டும். மொழியால், எந்தப் பழக்கமான குறியீட்டாலும் கூட, அநுபவங்கள் ஒத்திசையா விட்டால் எதையும் நீங்கள் புரிந்து கொள்ள முடியாது. உணர முடியாது. இந்த அநுபவ ஒத்திசைவு இருக்குமேயானல் அடுத்து நான் சொல்லப் போவதை புருவம் சுளிக்காமல் உணர்வீர்கள்.

ஜப்பானிய யுகியோயி கலைஞர்களைப் பற்றி ஒரு விமர்சனம்: "அவன் ஒரு புல்லிதழைத்தான் ஆராய்கிறுன். அப்புல்லிதழின் ஆராய்விலேயே, மரங்களையும், செடிகளையும், எண்ணிறந்த பூக்களையும், மிருகங்களையும், மனிதர்களையும், உலகத்தையும் அவனுல் வரைந்துவிட முடிகிறது. வாழ்நாள் முழுதும் அப்புல்லிதழை ஆராய்வதிலேயே செலவழிந்துவிடுகிறது. ஏனெனில் வாழ்க்கை மிகக் குறுகிபது."

இதை நீங்கள் உணர முடிகிறதா? இதன் அர்த்தம் உங்கள் நரம்பு நாடிகளில் துடிக்கிறதா? இதை நான் சொல்லவில்லை. யுகியோயி கலைஞன் எவனுமோ, டாக்டர் Swzwki-யோ சொல்லவில்லை. சொன்னது 1890-ல் தன் 37 வயதில் தன்னிலேயே தான் சுருண்டு ஆத்மீக தீவாந்திர சிக்ஷையில் வாழ்ந்து மறைந்த டச்சு சைத்ரீகன் வான்கோ (Von Gogh) சொன்னது தன் சகோதரன் தியோவுக்கு எழுதிய கடிதத்தில் இக்குறிப்பு காணப்படுகிறது.

அணுவில் அண்டத்தைக் காண்பது பற்றி நம் தத்துவங்கள், தத்துவாச்சாரியர்கள் உங்களுக்குச் சொல்லும் போது தலையாட்டி விட்டுவந்தீர்கள். இத்தத்துவத்தைக் கேளாத, தலையை ஆட்டாத ஜெர்மானிய கவிஞனும் ஜப்பானிய யுகியோயி கலைஞனும், டச்சு சைத்ரிகனும் அணுவில் அண்டத்தைக் கண்டார்கள். கேட்ட, தலையாட்டிய ஆனல் நீங்கள் காணுத ஒன்றை. சிவாஜி என்றதும் Regal theatre முன் ஞாயிறு காலை எட்டு மணிக்கு நிற்கிறீர்களே நடுக்கும் குளிரைப் பொருட் படுத்தாது, சிவாஜி என்ற வார்த்தை அர்த்தப்படும் அளவிற்கு தெளிவிற்கு, புல்லியின் காட்சி, யுகியோயிகலைஞனுக்கும் வான்கோவுக்கும் உலக ஜீவனின் காட்சியாயிற்று. அர்த்தம் அநுபவம் முன் நின்றது. பறக்கும் நாரைகள் பிரபஞ்ச சலனத்தை ஜெர்மன் கவிக்கு அர்த்தப் படுத்தியது. உங்களுக்குப் புரியவில்லை என்று சொல்லாதீர்கள்.

(தொடரும்)

# ஞானரதம்

சந்தாதாரராக நீங்கள்

ஆகிவிட்டீர்களா?

★

ஆண்டுச் சந்தா ரூ. 5

ஆயுள் நன்கொடைச் சந்தா ரூ. 50

★

உங்கள் சந்தாக்களை அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாக ஆசிரியர் :

**ஞானரதம்**

**சக்தி இல்லம், சென்னை-36.**

# சிந்தனைச் சிதறல்

வல்லிக்கண்ணன்

இலக்கியக் கூட்டம் ஒன்றில் என்னிடம் பலரகமான கேள்விகள் கேட்கப்பட்டன. சுவையான பதில்களுக்கு இடம் தந்த சுவாரஸ்யமான கேள்விகள் அவை. அவற்றில் பலவற்றை அடிப்படையாகக் கொண்டு அநேகம் சிறப்புக் கட்டுரைகளும், விரிவான புத்தகங்களும் எழுதலாம். ஆனால் அப்படிச் செய்யும் எண்ணம் எனக்கு இல்லை. சிந்தனைக்கு விருந்தாகக் கூடிய சிலவற்றை வைத்து எண்ணங்களை வளர்க்க விரும்புகிறேன்.

"நம் நாட்டின் மரபுகளுக்கு விரோதமான முறையில் சில எழுத்தாளர்கள் எழுதி வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறதே, அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று ஒருவர் கேட்டார்.

இந்த நாட்டின்—நாட்டு மக்களின்—வாழ்க்கையே மரபுகளை ஒட்டி அமைந்திருக்கவில்லை. எல்லா நாடுகளின், எல்லா இனங்களின், வளர்ச்சியும் பழைய மரபுகளை மீறியும், சிதைத்தும், ஒதுக்கியும், தாண்டியுமே முன்னேறி வந்திருக்கிறது. அப்படித்தான் வளர்ச்சி அமைய முடியும். சோழ, பாண்டிய மன்னர்கள் சட்டை அணிந்தது கிடையாது; அக்காலத் தமிழர்கள் தரையிலேயே அமர்வது வழக்கம்; எங்கும் நடந்தே போனார்கள். 'உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்' என்பதை மரபாகக் கொண்டிருந்தார்கள். வெகுகாலம் வரை 'நீத்தண்ணி' (நீராகாரம்) குடித்து எளிமையைக் கடைப்பிடித்து வந்த இந்நாட்டினர் காப்பியும் டீயும் குடிப்பது போதாது என்று, கோக்கா-கோலாவும், ஃபாண்டாவும் தேவை என விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பருத்தி நூல் ஆடைகளை அலட்சியப்படுத்திவிட்டு, டெரிலின், நைலான், நைலக்ஸ் தினுசுகளை ஆர்வத்தோடு ஆதரிக்கிறார்கள். இவை எல்லாம் மரபுகளை மீறிய விஷயங்கள் இல்லையா? வாழ்க்கையை, சமூக நிலைமைகளை, பிரதிபலிக்கிற எழுத்தாளர்கள் இந்நாட்டு மரபுகளுக்குப் புறம்பான விதத்தில் எழுதுகிறார்கள் என்று குறை கூறுவது அர்த்தமற்ற பேச்சு.

'பழமையான தமிழர் பண்பாட்டை சீரழிக்கும் விதத்தில் இவர்கள் எழுதுகிறார்கள்

என்று சொல்லப்படுகிறதே?'

அதுவும் அறியாமையின் ஒலி பரப்பே ஆகும். பழம் தமிழர் பண்பாடு என்பது உண்மையில் எப்படி இருந்தது? கள் குடிப்பது, நண்டுப் பொறியல் உண்பது, களியாட்டயர்தல், களவுமணம் புரிதல், ஓயாது சண்டையிடுதல், சண்டையில் செத்தவர்களுக்கு நடுகல் நடுதல்—இவைதான் பழம் தமிழர் பண்பாடாக இருந்தன என்பதை சங்க நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இப்படி ஒரு ஆய்வாளர் உறுதி கூறுகிருர். அப்புறம் என்ன! திருக்குறளை ஆதாரம் காட்டி வேறு விதமாக வாதிடலாம். இருந்தாலும், முந்தியதும் தமிழர் பண்பாடாக விளங்கியதுதான். இந்த நாட்டினருக்கு, முக்கியமாக தமிழருக்கு, மட்டும்தான் பண்பாடு என்று ஒன்று இருப்பது போலவும், மற்றவர்கள் எல்லாம் பண்பாடு குறைந்தவர்கள் போலவும் ஒரு போலியான சித்திரம் தீட்டி, நாட்டினரை மயக்கத்தில் ஆழ்த்தி வைப்பது வீணத்தனம். எழுத்தாளர்கள் வாழ்க்கையைத்தான் சித்திரிக்கிருர்கள். இலக்கியங்கள் சமூக சித்திரங்களே. எந்த எழுத்தாளனும் எவருடைய பண்பாட்டையும் கெடுப்பதுமில்லை; எந்த சமூகப் பண்பாட்டையும் சிரழிய வைப்பதுமில்லை. மனித வாழ்க்கையே அடிப்படையில் சீர்கெட்டுப்போய்த்தான் இருக்கிறது.

'செக்ஸ் விஷயங்களை எழுத்தில் எழுதுவது பற்றி..?' என்று இழுத்தார் ஒரு ரசிகர்.

செக்ஸ் என்பது புதிய விஷயம் அல்ல. ஆதாம் ஏவாள் காலத்திலிருந்தே — அல்லது, 'ஆதிபகவன் முதற்றே'— இருந்து வருகிற ஒரு விவகாரம். பேசச் தெரிந்த நாள் முதல், மனிதர்கள் எங்கும், பெரும்பாலும், செக்ஸ் விஷயங்களையே பேசிக் களிக்கிருர்கள். பேசாதவர்கள், அவை பற்றியே அதிகம் எண்ணுகிருர்கள். பின்னே, எழுத்தாளர்கள் அவற்றை எழுத்திலே எழுதுவதனுல் மட்டும் என்ன கெட்டுப் போகிறதாம்?

'அதற்கில்லை. ஹோமோசெக்ஷுவல் விஷயம் பற்றி கதைகள் எழுதுகிற சிலரை வன்மையாகக் கண்டிக்கிருர்களே?...'

ஹோமோசெக்ஷுவல் விவகாரமும் எழுத்தில் புதுசாக இடம் பெறவில்லை. பைபிளிலேயே அது இடம் பெற்றுள்ளது. இந்த நாட்டுப் புராணங்களும் அது பற்றிப் பேசுகின்றன. ஹோமோசெக்ஷுவல் உறவு மூலம் பிள்ளை பிறந்தது என்றுகூட ஒருவன் எழுதி வைக்க, அந்தப்பிள்ளையையும் கடவுளாக ஏற்றுக்கொண்டு கும்பிட்டு வாழ்கிற நாடுதான் இது. ஹரிஹரபுத்திரன் (ஐயப்பன், சாஸ்தா) என்ற சாமியைத்தான் குறிப்பிடுகிறேன். பார்க்கப்போனுல், பாரதம் எழுதிய வியாசர் செய்யாத குற்றத்தை இன்றைய எழுத்

தாளர்கள் செய்யவில்லை. செக்ஸ் உறவில் உள்ள கோளாறுகள், கோணல்கள் எல்லாவற்றையும் வியாசர் கதைகளில் கையாண்டிருக்கிறார். எழுத்தாளர்கள் எதையும் எழுதலாம்; எல்லாவற்றையும் எழுத வேண்டியதுதான்; ஆனால் எழுதுவதை கலைநயத்தோடும் இலக்கியத் தரத்தோடும் எழுத வேண்டும். இதுதான் என் கருத்து.

'சீப் பப்ளிஸிட்டி' பெறுவதற்காகவும், பரபரப்பான விற்பனை உண்டாக்கவும் சில எழுத்தாளர்கள் செக்ஸ் விவகாரங்களைக்கையாள்கிறார்கள். அவற்றில் உள இயலும் காணப்படுவதில்லை; வாழ்க்கை உண்மைகளும்சித்தரிக்கப்படுவதில்லை. செக்ஸ் விஷயங்களைக் கதைகளாக்கும் பெயரில், 'சரோஜாதேவி' 'ஜெயலலிதா' என்று கவர்ச்சிப்பெயர்களை சூடிக்கொண்டு, யார்யாரோ எழுதும் சிறு புத்தகங்கள் வாசகர்களால் மறைத்துவைத்து வாசிக்கப்படுகின்றன. இவை நகரங்களிலும் கிராமங்களிலும் பரவியிருப்பதை நான் அறிய முடிந்தது. 'பொதுஜன வசதி'க்காக ஏற்பட்ட லெட்ரீன்களிலும், கண்ட கண்ட சுவர்களிலும் கரி எழுத்து எழுதுகிறவர்களின் தரத்திலிருந்த, சற்றே உயர்ந்துவிட்ட சிலரால்தான் இவை உற்பத்தி செய்யப்படுகின்றன என்றே எனக்குத் தோன்றுகிறது. நடைமுறையில் இவைதான் இளம் உள்ளங்களில் நச்சைப் புகுத்தும் எழுத்துக்கள் ஆகும். கலை உணர்வோடும் இலக்கியப் பிரக்ஞையோடும் எழுதுகிற படைப்பாளியின் எழுத்துக்கள் சமூக ஒழுக்கத்தையோ தனிமனிதப் பண்புகளையோ கெடுத்துவிட மாட்டா.

பிரஞ்சு எழுத்தாளன் ஒருவன் இதுபற்றி சுவையாகவும் சூடாகவும் எழுதியிருக்கிறான். அது நினைவு கூரப்பட வேண்டிய சிந்தனை—

'நீர் என்ன தான் சொல்லும்' இந்த யுகமே ஒழுக்கக்கேடானதுதான். (ஒழுக்கம், ஒழுக்கக் கேடு என்பவற்றில் ஏதேனும் அர்த்தம் உண்டா என்பதே சந்தேகத்துக்கு உரியது.) இக்காலத்தில் வெளிவந்துகொண்டிருக்கிற ஒழுக்கக்கேடுகள் சம்பந்தமான புத்தகங்கள், கதைகளின் எண்ணிக்கையும், அவை பெறுகிற வரவேற்பும் மட்டுமே போதும் இதை நிரூபிப்பதற்கு. சமூக ஒழுக்க முறைகளைப் பின்பற்றித்தான் புத்தகங்கள் பிறக்கின்றன. புத்தகங்களின் பயனாக ஒழுக்கங்கள் விளையவில்லை. ஓவியக்காரர்கள் படங்களில் பெண்களின் முகத்தில் சாயம்பூசி, மார்புகளை வெளிச்சமிட வைப்பதில் ஆர்வம்காட்டியது ஏன்? நவயுவதிகள் அப்படிச் செய்து திரிந்ததனால் தான். ஆட்களைப் பார்த்துத்தான் படங்கள் தீட்டப்படுகின்றனவே தவிர, படங்களைப் பார்த்து ஆட்கள் உருவாக்கப்படவில்லை. இலக்

இயலும் கலைகளும் சமூக ஒழுக்கங்களைப் பெரிதும் பாதிப்பதாக யாரோ எங்கோ சொல்லியிருப்பதாகக் கேள்வி. அப்படிச் சொன்னது யாராக இருந்தாலும் சரி, அவன் மகா மடையன் என்பதில் சந்தேகம் கிடையாது. அவ்வாறு சொல்வது, பச்சைப் பட்டாணிகளின் தோற்றமே வசந்தத்தைத் தோற்றுவிக்கிறது என்று கூறுகிற கணக்குத்தான். உண்மையில், வசந்த காலம் வந்திருப்பதனால்தான் பச்சைப் பட்டாணிகள் விளைகின்றன. கோடையின் வரவினால்தான் செர்ரி புஷ்பித்துக் காய்க்கிறது. மரங்கள்தான் பழங்களை உண்டாக்குகின்றனவே தவிர, பழங்கள் மரங்களை விளைவிப்பதில்லை. இவ்விதி நிரந்தரமானது. அதனதன் தரத்தில் அது மாறுபாடு அற்றது. நூற்றாண்டுகள் ஒன்றை அடுத்து ஒன்றாக வருகின்றன. அந்தந்தக் காலத்தில் அதததற்கு உரிய வாழ்க்கை முறைகள் அமைகின்றன. அவை முந்திய நூற்றாண்டுகளில் இருந்தனவற்றிலிருந்து மாறுபடக் கூடும். அவ் ஒழுக்க முறைகளின் விளைவுகளே எழுத்தும் கலையும்.'

★

# என்றோ விடுதலை?

**திலகா**

மழலைக்குப் பாலூட்டி மக்கட்குப் பகிர்ந்தளித்து
பருக்கைக்கும் வழியின்றித் தழல் வயிறு எரிமூழ்க
நிழல்தேடி நீள்புவியின் நிலமனைத்தும் அல்லலுறும்
அன்னையிவள் ஏழ்மைக்கு என்றோ விடுதலை?
வழியெல்லாம் வயிற்றுக்காய் எச்சலிலைப் பொதுவுடைமை;
கால்தொட்டுக் கைநீட்டிக் காசுபெறும் அவலம்
அழியாத நரகமெனச் சூழுமிப் பஞ்சையரின்
பரிதாபக் காட்சிகட் கென்றோ விடுதலை?

ஜெயகாந்தனின்
8
கவிதைகள்

காலைவரப் போகிறது
கனவெல்லாம் பாழாச்சு...

ஆல மரம்வெட்டி
அருகு நின்ற அரசு வெட்டி
வேல மரம் வெட்டி
விலகி நின்ற வேம்பும் வெட்டி
நாலு கால் கடைந்து
நான் செய்தேன் நல்ல கட்டில்!
மேலே மெத்தையிட்டேன்
மேல் விதானம் முத்துமிட்டேன்!
பாலும் பழவகையும்
பக்கத்தில் எடுத்து வைத்தேன்!
நீல விளக்கேற்றி
நெடுநேரம் காத்திருந்தேன்!

காலைவரப் போகிறது
கனவெல்லாம் பாழாச்சு...

★

# சிரிப்பு

நானொரு மூடன்—எனை
நம்பிவந் தானொரு சீடன்
என்னை வணங்கி எழுந்தான்—எனக்குத்
தன்னை வழங்கிடும் தன்மையைத் தந்தான்
வந்தது ஞானம் என்று
வந்தவன் தன்வழி சென்றிடச்
சிந்தையில் ஞானச் சிறுபொறி கனன்றது
சிரித்தேன்!



!!!

# விடுவீரோ ?

அட்சய வயிறு படைத்தீரே !— ஓர்
அட்சய பாத்திரம் பார்த்தீரோ ?
பிச்சை கிடைத்துப் புசித்தீரே !— அந்தப்
பிச்சையிட் டவனைப் பார்த்தீரோ ?
லச்சையை விட்டுச் சுகித்தீரே !—என்
லாகிரிப் பொருளைப் பழிப்பீரோ ?
பத்தினிக் கதைகள் படிப்பீரே !—உம்
மச்சினி கிடைத்தால் விடுவீரோ ?

# ?

மாட்டிக் கொண்டேனா ?—இல்லே
மனசறிஞ்சு என்னை வைத்துப்
பூட்டிக் கொண்டேனா ?
கூட்டிக் கொண்டேனா ?—சும்மா
கூடி வாழ்ந் திருப்பது போல்
காட்டிக் கொண்டேனா ?

# பாதை

பாதை நல்ல பாதை—இது
பயமி லாத பாதை!
பள்ளம் மேடு இல்லை—மிகப்
பக்குவ மான பாதை!
கள்ளர் பயமும் இல்லை—மரம்
கனிகள் தரும் பாதை!
சுங்கச் சாவடி இல்லை—பரி
சோத னைகள் இல்லை!
தங்கும் மடங்க ளுண்டு—பல
தரும துரைக ளுண்டு!
இடையில் நல்ல விருந்து—நீ
கிடைக்கும் போது அருந்து
நடையைப் போடு தொடர்ந்து—
(.............................................)
சுமையி லாத பாதை—மிகச்
சுகங்கொ டுக்கும் பாதை!
.............................................
.............................................



# உண்மை சுடும்

விடமனம் வரவில்லையே—உனைத்
தொட ஒரு உறவில்லையே—சுகம்
பட ஒரு விதியில்லையோ?—பிற
சுற்றமும் பந்தமும்
சுடவில்லையோ?

## காதல்



பித்தம் தலைக்கேறும்
பேச்சுக்கள் மாறி வரும்
நித்தம் ஒரு கவிதை
நெஞ்சினில் ஊறி வரும்!

நித்திரையி லாமலே
நேசக் கனவு வரும்
சித்திரமி லாமலே
சிரிப்பு எதிரில் வரும்!

கைத்திறனி லாமலே
கவின்மிகு கலைகள் வரும்
வைத்தியமி லாமலே
வந்தநோய் தீர்ந்துவிடும்!

## சிரித்த பாவம்

பூத்த மலரே பூத்த மலரே
பூத்தபின் ஏனோ சிரிக்கின்றாய்?—நீ
பூத்துச் சிரித்த பாவத்தி னால்தான்
பொழுதுக் குள்ளே மரிக்கின்றாய்!

[redacted]

[redacted]

# ஒரு கெரில்லாவின் வார்த்தை

ஜேவியர் ஹீராத்

என்னுடைய தேசம் அழகிய தேசம்
காற்றிடை மின்னிடும் வாளினைப் போலே
முன்னிலும் பெரியது ; அழகிலும் கூட
இன்னமும் உயர்ந்தது.
அதன் பொருட்டு
பேச முற்பட்டேன் ;
என்னுயிர் கொடுத்து
காக்கவும் செய்வேன்.
துரோகிகள் சொல்வது துச்சம்.
வலுத்த எஃகின்
வயிரம் கொண்டே
வழியினை அடைத்தோம்.
வானம் நமது.
நிலத்தில் விதைத்து
அறுத்த கோதுமை நமது.
ரொட்டியும் நமதே.
நம்முடையதாகும்
என்றும் நமதே
கடலும்
காடும்
பறவைக் கூட்டமும்.

குறிப்பு: இதை எழுதிய ஜேவியர் ஹீராத் (Javier Heraud) தென்னமெரிக்காவில் பெரு தேசத்தைச் சேர்ந்தவர். 1942–ல் பிறந்தார். சினிமா பற்றி படிக்க க்யூபா போனவர் பெருவுக்குக் கெரில்லாவாகத் திரும்பினார். காட்டு எல்லை வழியாக சட்டத்தை மீறி நுழைந்தபோது போலீஸாரால் நட்டாற்றில் சுட்டுத் தள்ளப்பட்டார். இறந்த போது இவர் வயது இருபத்தொன்று. அதற்கு அடுத்த வருடம் 1964–ல் இவர் கவிதைகள் தொகுத்து வெளியிடப் பட்டன.

தமிழில்: R. சாமிநாதன்




"நண்பர் சாமிநாதன் அறிவின் பக்க பலத்தில் தன் மணியான கருத்துக்களை, தெளிவாக, வீரியமும், இலக்கிய நாதமும் பேசும் அற்புதமான நடையில் சொல்லும் வல்லமை படைத்தவர். அவரது "துணை", "ஞானரதத்திற்கு இன்றியமையாத ஒன்று. அவர் ரதத்தின் அச்சாணியாக உதவும் தகுதி படைத்தவர் என்பதை அவரது பல விமர்சனக் கட்டுரைகள் (இலக்கிய வட்டம், எழுத்து, தீபம், கணையாழி, நடை ஆகியவைகளில்) தெளிவாகக்காட்டுகின்றன."

பி. சின்னச்சாமி, பி ஏ,
திருப்பூர்-4.

★ ★

"வழக்கம் போல் மூன்றாம் இதழ் ஞானரதத்திலும் தங்களது முன்னோட்டம், உரத்த சிந்தனை ஆகிய பகுதிகள் மிகச்சிறப்பாக இருந்தன. 'செத்த பாம்பை'க் கண்டு துள்ளிக் குதிக்கும் இலக்கிய ஒழுக்க வீரர்களுக்கு மிகச் சரியான முறையில், பொறுப்புடன் முன்னோட்டத்தில் பதில் அளித்துள்ளீர்கள். இதைப் படித்த பின்னராவது இலக்கியத்தின் விஸ்தாரத்தை அவர்கள் உணர்வார்களென எண்ணுகின்றேன்.

.. ஞானரதத்தைப் பற்றி முக்கிய இரண்டு குறைகளை நான் சொல்லியாக வேண்டியவனாக உள்ளேன். ஒன்று அச்சுப்பிழை. இரண்டு இதழ் குறிப்பிட்ட நாளுக்குள் கிடைக்காமல் மிகத் தாமதமாகக் கிடைப்பது.'

—கி. வீரமணி, திருப்பத்தூர்-2

"ஞானரதம் மற்ற எந்த இதழ் போலன்றி—'ஞானரதம்' போலவே சுயத்தன்மையில் (Originality) உள்ளது பாராட்டிற்குரியது. அட்டைப்படச் சித்திரமும், அதற்குரிய கவிதையும் மிகச் சிறப்பாக இருந்தது. இதழில் எனக்கு மிகவும் பிடித்தவைகள் முன்னோட்டம், உரத்த சிந்தனை, ஆகியவைகளாகும்."

—மு. சு. தியாகராஜன்,
சென்னை-61

★ ★

"ஞானரதம் மூன்றாம் இதழ் கண்டேன். அட்டைப் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஏதோ சொல்ல வேண்டும் என்று தோன்றிற்று. யாரிடம் சொல்ல? எப்படிச்சொல்ல?"

இராமலிங்கம்—
பாளையங்கோட்டை.

★ ★

"இந்த இதழ் ஞானரதம் தந்த மௌனியின் கட்டுரைக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக்

கொள்கிறேன். "தமிழில் நினைக்கிறதை முழுதாகச்சொல்ல எனக்கு முடியவில்லை" என்று அவர் எழுதவே எத்தனை பக்குவமும் பாகமும் வேண்டும்! என்று நினைக்கும் போது மௌனியின் எழுத்தே உண்மை பூண்டு உண்மையாய் நிற்பது ஞானரதத்தை உயர்த்துகிறது. 'வஸந்தமே உன் நினைவாக' ஒரு சின்னஞ் சிறு கவிதை போல இருக்கிறது. வெ. சாமிநாதனின் கட்டுரை வழக்கம் போல அருமையாக இருக்கிறது. ஏனோ அதில் ஒரு தொய்வும் தெரிகிறது. ஞானக்கூத்தனின் பாதிநாள் ஒரு முத்து. நல்ல அனுபவம் இந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை மட்டும் — ஒரு அகடமிக் ஸ்டோரி. சிறுகதை இலக்கணத்தை தொட்டுக்கொண்டு நிற்கிற மாதிரி—பாட புத்தகங்களில் போடலாம் இந்தக் கதையை. நடையில் உள்ள எளிமை ஒரு வெற்றி அ. மி. க்கு. பிக்காஸோ கட்டுரை ஒரு ஃப்பெயிலியர். சொல்லும்படியாக இல்லை. ஆங்கிலத்தில் எழுதியிருந்தால் நன்றாக வந்திருக்குமோ இவருக்கு? விடாய்—ஒரு விடாய் தான். சாகிற வேளைக் கதைகள் பலவந்திருக்கின்றன. இதுவும் ஒரு தினுசு. தாகம் என்ற பாவம் கதை முழுவதையும் வியாபிக்க வைத்தது நன்றாய் இருக்கிறது. ஒரு பெண்மை கதையில் கவனிக்கிறது. உரத்த சிந்தனையில் சில கேள்விகள் தமிழ் வாசகர்களுடைய 'ஏபிஸி' ஞானத்தை அகண்டு வைக்கிறது. தலையங்கமும் ரஸ்ஸலும் ஆசிரியரை, தனித்துவத்தைக் காண உதவுகிறது. இதழுக்கு இதழ் முன்னேறுகிறது என்றே வாழ்த்துகிறேன்.

ஆம்! எழுத்துப் பிழைகளின்மீது ஏன் உங்களுக்கு இந்த அபாரக் காதல்!? இந்த அளவுக்கு எழுத்துப் பிழைகள் இருப்பது ஞானரதத்தைக் கெடுக்கின்றன. அச்சுப் பேயை சரியாக நிர்வகியுங்கள்.

—ஜி. எம். எல். பிரகாஷ்,
தஞ்சை

★ ★

"தங்களிடம் காணப்படும் இலக்கிய நேர்மையை ஞானரதத்திலும் காண முடிகிறது. "இப்படியான ஒரு இலக்கிய மாத இதழ் கண்டிப்பாகத் தேவை" யென ஈழத்துச் சிறு கதை உலகின் முன்னோடிகளில் ஒருவரான சி. வைத்தியலிங்கம் அவர்கள் என்னிடம் கூறினார்கள். தவிர—

ஈழத்திலுள்ள 'இஸ' எழுத்தாளர்களிற் சிலர் ஞானரதத்தை மூலைக்கு மூலை ஓட்டி அதன் வேகத்தைக் கணிக்க முயல்கிறார்கள். உண்மையில் இது ஞானரதத்தின் முன் — ஓட்டத்திற்காகக் காட்டப்படும் 'சிக்னல்' என்றே உணர்கின்றேன். ஞானரதம் இன்னும் பல மாற்றங்களுடன் இன்னும் வேகமாக ஓட வேண்டுமென்று விரும்புகின்றேன்.

—அருண்மொழி, கொழும்பு-6.

★ ★

"தங்கள் ஞானரதத்தின் முதல் இதழில் வெளியான "வலை" என்ற என்னுடைய சிறுகதை குறித்து, மூன்றாவது இதழில் கல்கத்தா — நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தியவர்கள் எழுதியிருப்பதைத் தொடர்ந்து ஒரு சிறு விளக்கம்:

நான் காஃப்காவின் Burrow என்ற கதையை இதுவரை படித்த

தில்லை. அக்கதை பற்றியும் யாரும் சொல்லியும் கேட்டதில்லை. ஆகவே "வலை" என்னுடைய சுய படைப் புத்தான் என்பதை உறுதிப்படுத்து கிறேன்."

—சார்வாகன், செங்கற்பட்டு.

★ ★

"மௌனியின் சுயதரிசனமும், ஆசிரியரின் ரஸ்ஸலைப் பற்றிய கருத் துக்களும் பயனுள்ளதாக இருந் தன. "ரிங்" உண்மையிலேயே மிகத் துணிச்சலான தொரு கட்டுரை. இதைவிடத் தெளிவாக வும், மற்றவர்கள் மனதில் உறுத்து கிற மாதிரியும், எழுத்தாளர்களை 'இதை எழுது அதை எழுது' என்று நச்சரித்துக் கொண்டிருப்பவர்களை விமர்சிக்க முடியும் என்று நினைக்க வில்லை."

—செ. மா. பாண்டுரங்கன்,
சென்னை-

★ ★

"இதழுக்கு இதழ் தரமான வளர்ச்சி காட்டி வெளிவருவது மனசுக்கு நிறைவு தருகிறது. பாராட்டுதல்கள். மூன்றுவது இத ழில் ஜோ. கிரிஜாவின் கதைதான் 'போர்' ஆக இருக்கிறது.

—வ. க., ராஜவல்லிபுரம்.

* * *

"மூன்றும் இதழ் முழுமையுற்றி ருக்கிறது எனலாம். இதில் இடம் பெற்றுள்ள அனைத்தும் குறை சொல்ல இயலா வண்ணம் அமைந் துவிட்டன. ஞானரதம் மூன்றும் இதழோடு இலக்கியத்தரம் என்ற சாலையில் மூன்று மைல் கற்களைத் தாண்டியுள்ளது. அட்டைப்படம் மிக அழகான கலையம்சத்தோடு இருந்தது. 'வசந்தமே உன் நினை வாக' என்ற மொழி பெயர்ப்புக் கதை மிகச் சிறப்பானதாக இருந் தது. நிர்வாக ஆசிரியரின் மொழி பெயர்ப்புத் திறமைக்கு என் உளங் கனிந்த பாராட்டுக்கள். அசோக மித்திரன், ஜோதிர்லதா கிரிஜா ஆகியோரின் கதைகள் நன்றாகவே இருந்தன. கவிதைகளில் எழுதாத கவிதை, மறு வாழ்வு, கங்கையின் குளிர், வணக்கங்கள் வீணாவதில்லை. நிழல், வைராக்யம் ஆகியவைகள் வரிசைப்படி சிறந்திருக்கின்றன."

—ஆர். சீனிவாசன்,
உத்தமபாளையம்

?

ஆதாம் கடித்த
அழுகல் ஆப்பிள்
இன்னும் எந்த
ஏவாள் கடிப்பாள்?

'கல்யாண்ஜி'

# மயக்கம்

நினைவின் தூக்கம்
உணர்வின் மதமதப்பு
பசியெனும் கொடிய
பசிய கொடியில்
புசித்திடக் கனிந்த
போதைத் திராட்சை.
மூளைச் சந்தையில்
மௌன நெரிசல்
உயிரைச் சுற்றிய
சூனிய முற்றுகை.
உள்ளக் கோப்பையில்
மறதி மதுரசம்.
நினைவின் பார்வையை
வற்றச் செய்யும்
கனவுப் பொழுதின்
கருப்பிருள் ஆட்சி.
மறதித் தோப்பின்
நிழற் பஞ்சணையில்
நினைவு உழவனின்
நித்திரை இளைப்பாறல்.
நினைவுகள் அலைகளாய்த்
தள்ளாடித் தவழ
உணர்வுக் கடலைப்
புணரும் காற்று
சூனியக் குயிலின்
சுருதி இன்னிசை
தண்ணீர் மழைமுன்
அணையும் இசைச் சுடர்.



—பரணன்

# ஒரு தனிக் கலைஞன்

கவிதை எழுதினேன் ; படிக்கத்தான் யாருமில்லை ;
நாவல் எழுதி நானே பிரசுரித்தேன் ;
வாங்கத்தான் யாருமில்லை ;
எனக்கே ஐயம் அரும்ப
பேனாவைத் தலைகீழாகக் கவிழ்த்து
உள்ள மசியைக் களைந்து
வேறு மையூற்றி
புதுக் கவிதைக்குச் சீர் காட்டித் தளை வகுத்து
பா வகை காட்டிப் பழைய ஆதர்சத்தை
நன்றாகப் பாடையில் கட்டி
நால்வர் தோள் கொடுக்க
வீதி தோறும் வீதி தோறும்
" கவிதை ! கவிதை வாங்கலையோ ! கவிதை ! "
என்று தொண்டை வறளக் கத்தினேன்.
நேற்றுவரை இலக்கியத்தின் எதிரி
என்று
அற்ப மூளையும் அகன்ற மார்பும்
திரண்ட சிகையும் தாள் வரை
நீண்ட கையும் கொண்டவரை
" ஆ ! இவரன்றோ இலக்கிய மேதை "
என ஒரு முறையன்று ஓராயிரம் முறை
நின்று முழங்கினேன் ;
தம்பட்டம் அடித்தேன் ;
சண்டமாருதம் எனக் கொட்டி முழக்கினேன்
அவரும் " சபாஷ் ! தம்பீ ! " என்று
தோள் கொட்டினார்
என்றாலும் அவர் அவர்தான் ;
நான் நான் தான் !
இப்படித்தான் இன்னும் இருக்கிறது
எங்கேயோ ஒரு பிசகு ;
உள்ளதையும் இழந்த பிறகு ?
ஏனோ இந்த ஐயம் ?
அவரும் விட்டு விட்டால் ?
அதுதான் புரியவில்லை.

—நகுலன்

# பாவிகள்

சாகாப் பழமையை
சாகடிக்கும்
பாவிகளே!
பிறவாப் புதுமையின்
பிறப்பறுக்கும்
பாவிகளே!
உங்கள்
இருதரப்பார்க்கும்
இடையே அகப்பட்ட
அப்பாவிகள்
நாங்கள்
எத்தனை காலம்
ஒப்பாரி வைத்து
அழுது தொலைப்போம்



—ஷண்முக. சுப்பையா


## ஞானரதம்

| விளம்பர விகிதம்: | ரூ. |
|---|---|
| பின் அட்டை (இருகலர்) | 300/- |
| உள் அட்டைகள் ( ,, ) | 250/- |
| ,, ,, (ஒருகலர்) | 200/- |
| முழுபக்கம் | 100/- |
| அரைப்பக்கம் | 60/- |
| கால்பக்கம் | 30/- |

ஒப்பந்த விளம்பரங்களுக்கு
தள்ளுபடி உண்டு
புத்தக விளம்பரங்களுக்கு
தனிச் சலுகை

விவரங்களுக்கு:
நிர்வாகி: ஞானரதம்,
சக்தி இல்லம், சென்னை-36

மதுரையிலிருந்து
வாரந்தோறும்
மலர்கிறது

## குறிஞ்சி

(தேசிய முற்போக்கு
வார இதழ்)

ஆசிரியர்:
ப. நெடுமாறன்

ஆண்டுச் சந்தா ரூ. 12/-
ஆறுமாதச் சந்தா ரூ. 6-50
தனிப்பிரதி 25 காசுகள்

48, மேலமாசி வீதி,
மதுரை-1.

# பெண் துயில்

வேரோ டிருக்கும்
பிணைப்பு விடாமல்
விலகி விழுந்த கொடி
சித்திரக் காரனின்
செய்—கைப் பட்டுச்
சிந்தி நீண்ட வர்ணம்
இரை விழுங்காமல்
இனிதே மயங்கி
நெளிந்த உடல் அசையாப் பாம்பு
சொற்கள் சுருண்டு
ஒலிக்காமல் பொருள் சொல்லும்
உன்னத விந்தை
விலகாமல் என்
நினைவு சென்று
தொடத் தயங்கித்
துய்க்கும் இன்பம்

★

# ஒன்றுதான்

மௌனக் கண்ணாடி
மதிலுக்கு இருபுறமும்
பார்வைக் ஏதோ
பாசாங்கு பூசி
நிற்கின்ற நமக்குப்
பார்வை ஒன்றுதான் !
நினைப்பின் வெளிச்சேட்டை
நடிப்புக் குரையாடல்
நீயேதோ நானேதோ
நாலுபொருள் பேசிடினும்
பேச்சுக்கடியில் பேசாது நின்ற
பொருள் நமக்கு ஒன்றுதான் !

—பி. ச. குப்புசாமி



# விவேகானந்தாவின் 'சாதனைஸ்'

# செல்வி

மனதை உடையவன் மனிதன்;

அகத்தே உள்ள பொறிகளையும் புறத்தே உள்ள புலன்களையும் இணைப்பது மனது. புலன்களிடத்து பொறிகள் ஒன்றி செயல்கள் நடப்பது மனித வாழ்க்கை. புலன்களும் பொறிகளும் மனிதசக்திக்கு அடையாளமாகக்கூட இருக்கலாம். ஆனால் மனித உருவினுள் விளங்கும் ஆத்ம சக்தி என்பது புலன்களுக்கு இன்று எது பரிச்சயம் ஆனதோ, சாத்தியமானதோ அது மட்டும் அல்ல.

புறப் புலன்கள் நல்ல நிலையிலிருந்தும் உள்ளே அமைந்த பொறிகள், பழுதுற்றால் அதற்குரிய செயல்கள் நிகழ்வதில்லை. அதேபோல பொறிகள் நலமாயிருந்து புலன்கள் பழுதுபட்டாலும் செயல்கள் இல்லை. மூன்றாவதாக, இரண்டுமே நல்ல நிலையில் இருந்தும், நோக்கமும் தேவையும் மேற்கொண்டு மனம் இயங்கினால் தான் பொறிகள் புலன்களில் பொருந்தி செயல்கள் உண்டாகின்றன. கண்முன் நடக்கும் காட்சி மனம் வேறெங்கோ லயித்தபோது புலனாவதில்லை என்பது இதற்குச் சான்று. பொறிகளையும் புலன்களையும் இணைக்கும் இம்மனது இடையீடின்றி வேறுபட்டு ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இம்மனம், ஒரு இந்திரியத்தை மட்டும் பற்றி நிற்கலாம்; எல்லா இந்திரியங்களையும் ஒருங்கே பற்றி நிற்கலாம். எதையுமே சாராமல் தன்னிலேயும் லயிக்கலாம்.

புலன் வழிச் செல்வதான வாழ்க்கை என்பது, வெறுமே புலன்களும் பொறிகளும் ஒன்றிணைவாய் அமைவது. எல்லாப் புலன்களும் அதனதன் இயல்பான பழக்கங்களில் நிற்கவே செல்கின்றன. புலன்கள், பொறிகள் மனது என்ற மூன்றின் ஒன்றான தோற்றத்தை மட்டுமேகாண்போனுக்கு இவைகளைத் தனித்து இயக்கத் தெரிவதில்லை.

சிலர், இம்மூன்றின் தனித்தனி இயக்கங்களையும் உணர்ந்து, புத்தி பூர்வமாய் ஆராய்ந்து தேவைக்கும் நோக்கத்திற்கும் ஏற்ப மனதை தேவையான பொறிப்புலன்

களுடன் இணைத்துச் செயல்படுகின்றனர்.

மனம் சுகத்தை இதத்தையே நாடுகிறது, இம்மனதையும் தனித்தெடுத்து இயக்கலாம் என்று அறியாதவன், அறிந்தும்முயலாதவனின் வாழ்க்கையிலிருந்து சாதனையாளனின் வாழ்க்கை வேறுபடுகிறது. இருப்பதை இயல்பானதை தொடர்வது வாழ்க்கை. இருக்கும் புலன்களைக் கொண்டு எங்கே எப்படி இன்னும் என்னென்ன செய்யலாம் என்று பார்ப்பது சாதனை, வாழ்க்கை வேறு; சாதனை வேறு. இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக வரையறுப்பதே விவேகானந்தாவின் "சாதனைஸ்".

தேவைதான் இந்த உடம்பை உருவாக்கி இருக்கிறது. கண்கள் உண்டாவதற்குக்காரணம் பிரபஞ்சத்தில் உள்ள ஒளி; செவிப்புலன் தோன்றக் காரணம் ஒலி. தேவையும் விருப்பமும் இருப்பின் புதியன சிருஷ்டிக்கப்படுகின்றன.

"நமக்கு அமைதியான சலனமற்ற மனம் என்பது சாத்தியமானதல்ல என்று இன்றுதோன்றுகிறது. ஆனால் அது உண்மையல்ல. நமக்கு அப்படி ஒன்று தேவை என்ற விருப்பமும், துடிப்பும் தவிப்பும் இல்லை என்பதே உண்மை. விருப்பம் என்பது, நிறைவிக்கும் புறப்பொருள் ஒன்றிருந்தால் ஒழிய நமக்கு வருவதுமில்லை. வெளியே உள்ள ஏதோ ஒன்று தான் இந்த உடம்பில் துவாரங்களை ஏற்படுத்தி அவற்றை மனம் கிரகித்துக் கொள்ள வழி செய்தது. எனவே அமைதியான மனம் வேண்டும் என்ற விருப்பம் எழுமேயானால், அமைதிக்கும் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும், சாதனைகளுக்கும், ஆதாரமான, அடிப்படையான, அமைதியான மனம்வேண்டும் என்ற விருப்பம் முதலில் உருப்பெறுமேயானால் அது நிச்சயமாகக் கைவரும். இதை எனது அனுபவமாகவே நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். அது ஆயிரம் ஆயிரம் பேர்களுக்கும் சாத்தியமானதொன்றே; அதனால் அந்த விருப்பத்தை முதலில் பற்றி நில்லுங்கள். அந்தப் பொருள் உனக்குப் புறத்தே இல்லாமல் போய் விட்டால் உனக்கு அதன்மீது விருப்பமும் ஏற்பட மாட்டேனென்கிறது. சாதாரண விருப்பத்திற்கும் இங்கு நான் குறிப்பிடும் விருப்பம் என்ற சொல்லுக்கும் இடையே உள்ள வித்யாசத்தை முதலில் நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

"மகனே, நீ விரும்பினால் கடவுள் உன்னிடம் வருவார் என்றார் ஒரு குருநாதர். சிடனுக்கு அது புரியவில்லை, ஒரு நாள் சிடனை ஆற்றங்கரைக்கு அழைத்துப் போய் நீருள் முழுகும்படிச் சொன்னார், மூழ்கியவனை அப்படியே நீருள் அழுத்திப்பிடித்துக் கொண்டார். சிடன் காற்றுக்காகத் திண்டாடித்தவித்துத்திணறி நின்ற

நிலையில் தான் அவனை விட்டார். பின் 'மகனே, ஒரு மூச்சுச் காற்றுக்காக நீ என்ன மாதிரி தவித்தாய் என்று கேட்டார். "ஓ! ஒரே ஒரு மூச்சுக் காற்றுக்காக நான் என்னமாய்த் தவித்துப்போனேன்" என்றான் சீடன். உனக்குக் கடவுளைக்காண வேண்டும் என்பதில் இப்படிப்பட்ட தவிப்பு இருக்கிறதா என்று கேட்டார் குருநாதர். 'இல்லை' என்றான் சீடன். முதலில் அப்படி ஒரு தவிப்பைப் பெறு. கடவுளை நிச்சயமாக அடைவாய்" என்று விளக்கினார் குரு.

எது இல்லாவிட்டால் நமக்கு உயிர் வாழ முடியாதோ அப்படிப்பட்ட ஒன்றாக நமக்கு அது ஆகவேண்டும். அது நமக்குக் கிட்டவில்லை என்றால் இந்த வாழ்க்கை ஒரு விநாடி கூட நீடிக்காது என்ற நிலைக்கு நாம் முதலில் வரவேண்டும்.

நீ ஒரு யோகியாக வேண்டுமானால் எல்லாவற்றிலிருந்தும் உன்னையே தனிமைப் படுத்திக் கொண்டு எல்லா வகையான சங்கற்பங்களிலிருந்தும் கூட நீ விடுபட்டு நிற்கவேண்டும். வசதியும் சுகானுபவமுமான ஒரு வாழ்க்கையை விரும்புபவன் தன்னைத் தானே அறியவும் முயல்கிறேன் என்று கூறுவதை விட மூடத்தனம் வேறில்லை. அது மரக்கட்டை என்று நினைத்து முதலையின் மீது ஏறிக்கொண்டு ஆற்றைக் கடக்க நினைக்கும் அறிவீனமாகும். தவிப்பை முதலில் பெறு. மற்றவைகள் தானே உடன் சேரும். வேண்டாம் என்று உதறியவனுக்கே எல்லாம் பின் தொடர்கின்றன. அதிருஷ்டம் என்பது ஒரு சரச விளையாட்டுக் காரியைப் போன்றதே. அது தேடித் திரிபவனைக் கண்டெடுத்தும் பார்ப்பதில்லை. துச்சமெனத் தூக்கி எறிந்து விட்டவனிடம் அது மழையாகப் பொழிகிறது. அதுபோலவே பேரும் புகழும். அதுவே ஒரு சுமையும் பிரச்சனையுமாகி விடும் அளவுக்கு அது அவனைப் படுத்திவைக்கிறது. அவைகள் தம் எசமானர்களிடம் மட்டும் செல்கின்றன. அடிமைகள் எதையும் பெறுவதில்லை. எசமானன் என்பவன் அவைகள் இல்லாவிட்டாலும் வாழ முடிந்தவன்……… …"

**கு க் ஞா ங் வ**

இவ்வரிகளில் விவேகா உணர்த்துவது, தெளிவானது. சாதனை என்ற எதற்கும் தவிப்பே மூலாதாரமானது என்பதே அவர் வலியுறுத்த விரும்பும் விஷயம். அப்படி ஒரு தவிப்புக் கைவரப் பெற்றால், விருப்பம் கைவரப்பெற்றால் அதற்குரிய சாதனையும் பின் தொடர்ந்துதான் ஆகவேண்டும். ஒளியைப் பின்பற்றி கண்களும் ஒலியைத் தொடர்ந்து செவிகளும் தோன்றியது எத்தனை உறுதி

யானதோ அவ்வளவு உறுதியான உரிய முறையிலானது தவிப்பையும் விருப்பத்தையும் பின்பற்றி சாதனைகள் பின் தொடர்வதும் என்கிருர் நரேந்திரன்.

அவர் மேலும் விளக்குகிருர். "இந்திய மனம் என்பது உண்மையை அறிவதற்காக எந்த எல்லைக்கும் செல்லத் தயாராக இருக்கும் ஒன்று. ஆனல் மேற்கத்திய மனமோ வளர்ச்சி என்பதற்காக எந்த எல்லைக்கும் செல்லக் கூடிய ஒன்ருக இருப்பதுதான் விபரீதம். போராட்டம் தான் படிப்பினை. நினைவில் வையுங்கள். இந்த வாழ்க்கையின் மிகப் பெரிய பயனே போராட்டம்தான். அதன்வழியாகவே நாம் நடந்து வந்திருக்கிருேம். ஸ்வர்க்கத்திற்கு என்று ஒரு சாலை இருக்குமானுல் அது நரகத்தின் வழியாகவே செல்கிறது. நரகத்தின் வழியாக மட்டுமே சொர்க்கத்துக்கு எப்போதும் செல்ல முடியும். ஒன்றுக்குப் பல ஆயிரம் தடங்கல்களை எதிர்த்துப் போராடிப் போராடிக் கடந்து வந்த ஒரு ஆத்மா இறுதியில் மரணத்தின் படியில் மோதி நிற்க நேரும் போதும் இமயமென நிமிர்ந்து நின்று சிரிக்க முடியும். ஏனென்ருல் அந்த முடிவுக்கும் அப்பால் தான் எவ்வளவு நிரந்தரமானவன் என்பதை அவன் உணர்ந்து கொண்டு விட்டதால்!

நான்தான் எனக்கு முடிவு. என்னில் நானுகி நிற்கும் நான் தான் எனக்கு முடிவு. வேருென்றும் இல்லை. என்னேடு இணை சொல்ல வேறு என்ன உண்டு? ஒரு பை நிறையத் தங்கம் என் ஆத்ம இலட்சியத்துக்கு இணையாகி விட முடியுமா? நிச்சயமாக இல்லை. என் ஆத்மா தான் பெற்றுள்ளவைகளில் மிக உயர்வான குறி. என்னை நான் அறிந்து கொள்வதே என் வாழ்க்கையின் ஒரு இலட்சியம்.

இந்த உலகில் முழுக்கக் கெட்டது என்று ஒன்றும் இல்லை. கடவுளுக்குப் போலவே இங்கு சைத்தானுக்கும் ஒரு இடம் உண்டு. ஏற்கனவே கூறியபடி நரகத்தின் வழியாகவே தான் சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டும். நமது தவறுகளுக்கும் கூட இந்த வாழ்க்கையில் இடம் உண்டு. மேலே செல்! ஏதாவது தவருகச் செய்து விட்டதாக நீ உணர்ந்தாலும் பின்னேக்கிப் பார்க்காதே. அந்தத் தவற்றை செய்யாதிருந்தால் நீ இன்றுள்ளபடி ஆகியிருக்க மாட்டாய் என்பதை உனக்குப் புரிந்து கொள்ள முடியவில்லையா? உன் தவறுகளை ஆசீர்வதித்துவிடு. அவைகள் உஷார்ப்படுத்தும் தேவதூதர்களாகி விடட்டும், சுயமாக வதைத்துக் கொள்ளாதே. மகிழ்ச்சியாக இரு. உன் அதிருஷ்டம் எதுவாக இருக்கும் என்பது குறித்து கவலையும் படாதே. உன் இலட்சியத்தை மட்டும் உயர்த்

திப்பிடி. முன்னேக்கிச் செல். சின்னச் சின்னத் தவறுகளை யும் குற்றங்களையும் திரும்பப் பார்த்துக் கொண்டிராதே. இந்த நமது போர்க்களத்தில் தவறுகள் என்ற புழுதிப் படலம் கிளம்பத்தான் செய்யும். இந்தப் புழுதிகளைத் தாங்கிக் கொள்ள மாட்டாத பலகீனர்கள் இந்தப் படை வரிசையிலிருந்து விலகிச் செல்லட்டும்.'

எனவே சாதனைக்கு முதற்படி விருப்பம்தான்; தவிப்பில் தான். இந்த வாழ்க்கையில் நாம் எதையும் பெறுவதற்காகக் காட்டும் விருப்பங்களையும் தவிப்புக்களையும்விட நூறுமடங்கு தவிப்புடன் இருந்தாக வேண்டும்—உயர்வான சாதனை என்பது நமக்குக் கைகூட வேண்டுமானல் ஒரு சாதனையாளனுக்கு, முமுசாதனைவுக்கு இதுவே ஒரு முதல் தேவையாகிறது என்கிருர் விவேகா.

இரண்டாம் தேவையாகிறது தியானம். இதுபற்றி அவரே பேசுகிருர் கேளுங்கள். 'ஆத்மார்த்த வாழ்க்கைக்கு நம்மை மிக அருகாமையில் கொண்டு போவது தியானம், தியானத்தின் மூலம்அடையும் அந்த ஒரு விநாடிதான் நாம் ஒரு ஜடப்பொருள் இல்லை என்பதை உணரத்தக்க நேரமாகும். ஆத்மா தன்னையே தரிசிக்கிறது.' எல்லாவித ஜடப்பிரக்ஞையிலிருந்தும் விடுபட்டு நிற்கிறது. இந்த ஆத்மாவின் பிரகாசமான ஒளிதான் என்னே!

இந்த உடம்புதான் நமது விரோதியாகவும் கூடவே நண்பனாகவும் இருக்கிறது. அதைக் குறித்து நாம் அதிகமாக விசனப்படுகிறோம். ஆனால் ஒரு வரைபடத்தைப் பார்த்து நாம் அப்படி விசனப்படுவதில்லை. அதை ஒரு படம் என்று மட்டுமே பார்க்கிறோம். ஏனென்றால் அது உண்மையில்லை என்பதால்; அதை நம்மோடு இணைத்துப்பார்க்க முடியாததால்; அது ஒரு வரைபடம் தான் என்று நமக்குத் தெரியும். அது நம்மை ஆசீர்வதிக்க முடியாது; அது நம்மைத் துன்புறுத்தவும் முடியாது. எவ்வளவு கொடுமையான துயரத்தை திரைச் சீலையில் வரைந்திருந்தாலும்அதை நாம் ரசிப்போம். அதை வரைந்த கலைஞனின் திறமைக்காக அதைப் பாராட்டுவோம். அவனுடைய மகத்தான சாதனைக்காக ஆச்சர்யப்படுவோம்—அந்தச் சித்திரம் எவ்வளவு தான் கொடூரமாய், துயரம் மிக்கதாய் இருந்தபோதிலும்! அதுதான் ரகசியம். அதுதான் பற்றற்ற நிலை. சாட்சியாக மட்டும் இரு. மூக்கைப்பிடித்துக் கொண்டு சுவாசிப்பதாலும், யோகாசனப்பயிற்சிகளாலும் ஒரு பயனும் இருக்கப் போவதில்லை—நான் ஒரு சாட்சியேஎன்ற தத்துவ ரகசியத்தை அறிந்து கொள்ளாத வரை! கொடுங்கோலனின் இரும்புக் கரங்கள் உன் கழுத்தை நெறிக்கும் நிலையிலும்கூட "நான் ஒரு சாட்சியே, நான்

ஒரு சாட்சியே! நான் என்பது எனது இறுதி இலக்கே. வெளியில் உள்ள எதுவும் என்னைத் தொட முடியாது" என்று சொல். கெட்ட நினைவுகள் தொடரும்போதும் இதையே நினைவுபடுத்திக்கொள். நான் ஒரு சாட்சியே. நான் ஆத்மஸ்வரூபம் என்ற சம்மட்டி அடியை மீண்டும் மீண்டும் அதன்மீது கொடுக்கத் தயங்காதே. நான் செய்வதற்கோ, வருத்தப்படுவதற்கோ காரணமேதுமில்லை. நான் எல்லாம் கடந்தவன். நான் சாட்சி! நான் எனது சித்திரச் சாலையில் இருக்கிறேன். இந்தப் பிரபஞ்சமே எனது மியூசியம். நான் வெற்றிபெற்ற சித்திரங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அவைகள்தாம் எத்தனை அழகு! நல்லவையானாலும் கெட்டவைகளேயானாலும்! நான் இவற்றைப் படைத்தவனின் கைத்திறனைக் கண்டுதான் வியக்கிறேன். இவைகள் எல்லாம் அந்தப் பெரிய ஓவியனின் புனித வண்ணங்களே.

பிரச்சனைகளோடு ஒன்றிணைந்து நிற்பவன் பிரச்சனையின் உண்மை நிலையை உணர முடியாது. விலகி நின்று அதைப்பார்க்க முடிபவனாலேயே சரியாக அதன் தாரதம்யத்தை மதிப்பிட முடியும் ஒரு வழக்கில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தம் கொண்டுள்ள, அல்லது அக்கறை கொண்டுள்ள ஒருவரை நீதிபதியாக இருக்க இந்த நாகரீக மனித சமுதாயம் அனுமதிப்பதில்லை. அதன் ரகசியம் இதுதான். அந்தப் பிரச்சனையுடன் தன்னைச் சாதகமாகவோ பாதகமாகவோ பிணைத்துக்கொண்டுள்ள ஒருவனால் அந்தப் பிரச்னையை நியாயபூர்வமாகத் தீர்த்து வைக்க இயலாது. அதனாலேயே அத்துடன் உணர்வு பூர்மாய் ஒன்றாத மூன்றாவது மனிதனே தீர்ப்பளிக்கத் தகுந்தவன் என்று கருதப் படுகிறான்.

நமது பிரச்சனைகளை நாமே மூன்றாவது மனிதனாக நின்று பார்க்கும் தகுதி தியானத்தின் மூலமாக நமக்குக் கிட்டுகிறது: நான் என்பது இந்த சரீரம் இல்லை. உயிர் இல்லை; இபக்கம் இல்லை: நினைப்பு இல்லை என்று தன்னை விலக்கி நிறுத்தி ஒரு சாட்சியாக மட்டும் ஆக்கிக்கொள்ள முடிந்தவர்களுக்கு இந்த உலகின் பிரச்சனைகள் எதுவும் ஒன்றுமில்லாதவைகள் ஆகிவிடுகின்றன. அணுகுண்டுக்குங்கூட அஞ்சாத ஆத்மபலம் என்று காந்திஜீ குறிப்பிடுவது இதையே. இந்த ஆத்மபலத்தை எல்லாரும் அடையமுடியும்-பற்றற்ற நிலை (unattachment) என்றால் என்ன என்ற இந்த ரகசியம் மட்டும் புரிந்து விட்டால்-என்கிறார் நரேன்பாபு.

மேற்சொன்ன இரண்டும் உயர்நிலையை, குறிக்கோளை எட்டுவதற்கான பூர்வாங்கத் தேவைகள். ஒரு சாதனையாளனுக்கு, சாதனைக்கு

அடிப்படையான இரு கேட யங்கள்.

இனி, இந்த இரு கேடயங் களையும் பயன்படுத்தி அடை யப்போகும் அந்தச் சாதனை என்னவாக இருக்க முடியும் என்பதை ஆராய்கிறார் விவே கானந்தர். ஓர் உயர் சாதனை யின் குறிக்கோள் எதுவாக இருக்கும்—இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார் பாரதத்தின் தவச் செல்வர்.

"எல்லா மனிதகுலத்திற்கும் இலட்சியமாகவும் எல்லா மதங்களின் இறுதி இலக்காக வும் இருப்பது ஒவ்வொரு மனிதனும் அவனது இயல் பான பூர்வத்துடன் மீண்டும் ஐக்கியமாதல் என்பதுதான். ஆனால் குறிக்கோள் ஒன்றே என்ற போதிலும், அடையும் வழிமுறைகள் பலவகைப்பட லாம். மனிதர்களில் பல்வேறு மனநிலைகளுக்கு ஏற்ப இம் முறைகளில்வேறுபாடு இருக்க லாம்.

"குறியும் அதை அடை வதற்கான நெறியும்தான் யோகம் என்று அறிக. யோகம் என்றசொல் இணைத்தல் என் னும் பொருளுடைய Yoke என்ற ஆங்கிலச் சொல் லுடன் சம்பந்த முடையதே. ஏனென்றால் இரண்டும் ஒரே ஸம்ஸ்கிருத மூலத்தின் வழி வந்தவைகளாகும். ஏராள மான யோக முறைகள்— ஐக்கியமாகும் வழிகள் — உள் ளன. ஆனால் எல்லாவற்றிலும் முதன்மை பெறுபவை; கர்ம யோகம், பக்தியோகம், ராஜ யோகம், ஞானயோகம் என்ற நான்குமட்டும்.

ஒவ்வொரு மனிதனும் அவனவன் இயல்புக்கு ஏற்ப உயரவேண்டும். ஒவ்வொரு விஞ்ஞானத்துக்கும் ஒரு முறை இருப்பதுபோல ஒவ் வொருமதத்துக்கும்ஒரு முறை உண்டு. சமயத்தின் இறுதிக் குறிக்கோளை அடையும் வழி முறைகளை நாம் யோகம் என் கிறோம். ஒவ்வொரு யோகமும் வெவ்வேறு வகையான மனி தனின் இயல்புக் கேற்ப பயன் படக்கூடியது. அவைகளை நாம் பின் கண்டபடி பிரித்துக் காட்டலாம்.

1. கர்ம யோகம்: உழைப்பு, பணி, வேலை, சேவை ஆகிய வற்றின் மூலமே தன் நிறை வைப்பெறும் மனிதர்களின் இயல்புக்கானது.

2 பக்தி யோகம் :—பிரார்த் தனை, அன்பான நேசிப்பு ஆகியவற்றின் மூலம் ஒரு உருவாகத் தனது நிறைவை ஆக்கிவைத்துக் கொள்ளும் இயல்புக்கானது.

3. ராஜயோகம்:—மனதைக் கட்டுப்படுத்தும்பேராற்றலைப் பெறுவதின் மூலமாக தன் நிறைவை அடையும் இயல்புக் கானது.

4. ஞானயோகம்:—அறிவின் மூலமாகவும் விவேகத்தின் மூலமாகவும் தன்னைத்தான் அறிந்து நிறையும் இயல்புக் கானது.

இவைகள் பல்வேறு சாலை கள். கடவுள் என்று கூறப் படும் ஒரே இலக்கை நோக்கிச்

செல்லும் பல்வேறு சாலைகள். பல்வேறு மதங்களின் பல்வேறுவிதமான நம்பிக்கைகள் நல்லவைதான். ஆனால் அவை மனிதனை இந்தச் சமய வாழ்க்கைக்கு வழி நடத்துபவைகளாக இருக்கும்வரைதான்.

"இறைவனின் சாம்ராஜ்யத்தை முதலில் அடையுங்கள். மற்றவை எல்லாம் தானாகப் பின் தொடரும்."

"இதுதான் முதல் பெரும் கடமை. ஒரு குறிக்கோளுக்காக வாழ். மனதில் மற்ற எதற்கும் இடம் கொடாதே. நமது எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டி என்றும் தோல்வி அறியாத ஆத்ம தர்சனத்தை அடைவோம். நம்மை நாம் அறிவதற்கான கேடயங்களைப் பெற்றால், போராடிப் போராடியே நம்மை நாம் அறிந்தே விடலாம். நாம் இதில் தவறுகள் செய்யலாம். ஆனால் அவைகள் நம்மை உஷார்ப்படுத்தும் தேவ தூதர்களாக ஆகிவிடும்."

"நம்மைப்பிடித்து அழுத்திக் கொண்டிருப்பது நான் என்ற தன்னகங்காரமே. நாம் ஒவ்வொன்றையும் குறிப்பிடும் போது நான் இதைச் செய்தேன் என்றுதான் குறிப்பிடுகிறோம். இந்த பலகீனமான 'நான்' லிருந்து விடுபடுங்கள். இந்தப் பலகீனத்தை நம்மிடமிருந்து கொன்று விடுங்கள். "நான் இல்லை, அவன்" என்று சொல்லுங்கள், உணருங்கள். அப்படியேவாழுங்கள் இந்தக் தன்னகங்காரத்தால் உருவான உலகத்திலிருந்து விடுபடும்வரை நம்மால் இறைவனது சாம்ராஜ்யத்தை எட்டிக்கூடப் பார்க்கமுடியாது. யாரும் எதையும் செய்ததில்லை. இந்த உலகைத் துறக்க வேண்டும் என்றாலே இந்த நான் என்ற அகங்காரத்தைத் துறக்க வேண்டும் என்றே பொருள்படும். மனிதத்துக்குச் சம்பந்தமில்லாத, ஆனால் மனிதர்களிடத்து இணைந்துள்ள இந்த நான் என்ற அகங்காரத்தை மறக்கப் பழகிக் கொள்ளுங்கள். தன்னகங்காரத்திலிருந்து விடுதலை பெற்றவர்களே ஆசீர்வதிக்கப்பெற்றவர்கள். அவைகள் விலகியபின் அதனால் எத்தனை நன்மைகள் என்று மதிப்பிட்டுப் பாருங்கள். அவைகள் இருக்குமட்டும் தனக்குத்தாமே தீங்கை ஏற்படுத்துபவை. உன்னை வெறுக்கும் மக்களிடம் போய் நில். உன்னிடமிருக்கும் தன்னகங்காரத்தை நீ இழந்து விட்டதை அவர்களுக்கு உணரச் செய். நீ கடவுளுக்கு மிக அருகில் நிற்பாய்."

"எல்லாகெட்ட பழக்கங்களையும் நட்புகளையும் விட்டுவிடு. அதுவும் துவக்க காலத்தில். இவற்றை விட்டு அதூரத்துக்குச் சென்று விலகி நில். உலகம் தழுவிய நட்பைத் தவிர். அது உன் மனதை அலைக்கழிக்கும். உன்னிடம் உள்ள "நான்" "எனது"க்களை எல்லாம் கை கழுவிவிடு. இந்தப் பிரபஞ்சத்தில் எவனக்கு

ஒன்றுமே இல்லையோ, அவனிடம் இறைவன் வருகிறான்.

இந்த உலகின் பந்தபாசங்களையெல்லாம் வெட்டி எறி. சோம்பலைத் தூக்கி எறிந்து விட்டுச்செல். நீ என்ன செய்திருக்கிறாய் என்று பார்க்கக் கூடத் திரும்பாதே. எல்லாவற்றையும் இறைவனிடம் விட்டுவிடு எதுபற்றியும் நீ சிந்திக்காதே. ஆத்மா முழுக்க முழுக்க இறைவனிடம் இரண்டறக் கலந்துவிடும். பணத்தைத் தேடவோ, பேரைத் தேடவோ, புகழைத் தேடவோ, நேரம் இல்லை. இறைவனை மட்டுமே நாடி நில். எப்போது இறைவனிடம் அந்த நேசம் வந்துறுகிறதோ அப்போது அந்த இதயம் தெய்வ சந்நதியில் நிற்பதை உணரும்."

★

# துடிப்பு!

மணிவண்ணன்

ஆயிரம் எண்ணங்கள் மோதி ஒளிந்தன
ஆசைக் கடல் நெஞ்சினில்

ஆயிரம் வண்ணங்கள் ஆடி மறைந்தன
வீசும் ஒளிக் கண்களில்

ஆயிரம் காலங்கள் ஓடிக் கரைந்தன
வாழ்க்கைப் பெரும் நதியில்

ஆயினும் நானிங்கு பாடத்துடிக்கிறேன்
பாடு எனும் தூண்டலில்!

ஆயிரம் தத்துவம் பாடிவைத்தார் இங்கு
நான் எதைப் பாடுவது

ஆயிரம் சித்திரம் தீட்டி வைத்தார் இங்கு
நான் எதைத் தேடுவது

ஆயிரம் சத்திரம் ஆக்கி வைத்தார் அதில்
நான் எதை நாடுவது.

ஆயினும் நானிங்கு பாடத்துடிக்கிறேன்
ஆசைப் பெருந் தூண்டலில்.

# சக்தி சிந்தனை

[கேள்விகள் சிந்தனையைத் தூண்டக் கூடியதாக, எது பற்றியும் இருக்கலாம். கேள்விக்கு ஏற்ற தொனியிலேயே பதிலும் இருக்கும்.]

—ஆசிரியர்



கே: ஞானரதத்தின் 'இண்டலக்ட்ஸ்' பகுதியின் தோல்விக்கு தமிழ் எழுத்தாளர்களில் 'இண்டலக்சுவல்ஸ் இல்லாதது காரணமா?

ஜெயகோபால், சென்னை-5

ப: அப்படிச் சொல்வதற்கு இல்லை. அவர்கள் இதில் 'இண்டலக்ச்சுவலாக'க் கலந்து கொள்ளவில்லை என்பதே காரணம்.

கே: திரைப்படங்களில் முத்தக் காட்சியை அனுமதித்தால் இதுவரை கெட்டுப் போகாத எந்தக் கலாச்சாரம் கெட்டுப்போகும்?

இரா. பச்சையப்பன், மாயூரம்

ப: முத்தக் காட்சிகள் இல்லாத இன்றைய திரைப்படங்களில் எதுவும் இந்தியக்கலாச்சாரத்தையோ, வேறு எந்தக் கலாச்சாரத்தையுமோ வாழ வைக்கவில்லை. திரைப்படக் கலாச்சாரம் என்றொரு கலாச்சாரம் எல்லாக் கலாச்சாரத்திற்கும் எதிரியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதில் எதை அனுமதித்தால் என்ன? அனுமதிக்காவிட்டால்என்ன? விடுங்கள்!

கே: உங்களுக்கு யாப்பிலக்கணம் தெரியும் என்றால் யாப்பில் கவிதை எழுதவேண்டும்." "புதுக்கவிதை," "போதைக் கவிதை"—இது என்ன பித்தலாட்டம்?

—கி. கிருஷ்ணமூர்த்தி,
புதுக்கோட்டை

ப: கவிதையே ஒரு பித்த லாட்டம்தான் என்று சொல்கிறவர்களும் உண்டு. அவர்கள் பேசாமல் யாப்பருங் கலக்காரிகையையே படித்துக் கொண்டிருக்கலாம். அது இலக்கணச் சுத்தமாக இருக்கும்

எனது கவிதைகளைப் படிக்கிறவர்களுக்கு யாப்பிலக்கணம் தெரிந்திருந்தால் — எனக்கு அதற்கு உட்பட்டும் எழுத வரும் என்று அவர்களுக்குப் புரியும். யாப்பு அமைதியோடு கூடிய கவிதைகளும் சுவற்றில் உண்டு. 'யாப்பு' எனக்குப் பகை அல்ல.

கே: மது, மங்கை, மாமிசத்தின் சுவைகளை இலக்கியமாக்கியவர்களுள் நீங்கள் நிகரற்ற வெற்றி பெற்றிருக்கிறீர்கள். இம்மூன்றையும் விலக்கியவர்களும், இந்த உலகில் உண்டு. உங்கள் படைப்புக்களில் இவர்கள் அதிகம் இடம் பெறாததற்கு என்ன காரணம்?

செ. மனோகரன், சென்னை-3

ப: நான் சாமியார்களை வைத்தும் கதை எழுதியிருக்கிறேன். சாமியார்த்தனம் உடைய சம்சாரிகளை வைத்தும் கதை எழுதியிருக்கிறேன். நான் பார்க்கிற மனிதர்களை நான் அனுபவிக்கிற உணர்ச்சிகளை, நான் எண்ணுகிற சிந்தனைகளை விடுத்து வேறு எதைப்பற்றி நான் எழுதுவேன் என்று நினைக்கிறீர்கள்? என்னுடைய வெற்றி பற்றிய உங்களுடைய முடிவை நான் ஏற்கவில்லை. இப்படியெல்லாம் பார்ப்பது இலக்கியத்துக்கு உதவாது என்பதை உங்களுக்கு மிகவும் பணிவாகச் சொல்லிக் கொள்கிறேன். உங்களுக்கு உதவட்டும் என்பதற்காகத்தான் இவ்வளவும் சொல்கிறேன்.

கே: உங்களுக்கு சோஷியலிசத்தின் மீது இன்னும் நம்பிக்கை இருக்கிறதா?

உவ் மான் ஷரிப், நாகப்பட்டணம்.

ப: ஏதோ ஒரு சோஷியலிசத்தில் எனக்கு எப்போதும் நம்பிக்கை இருக்கிறது.

கே: கலை என்றால் என்ன?

செல்வி ராதிகா, திருச்சி

ப: உண்மை மாதிரி இருக்கிற பொய் என்று சொல்லி இருக்கிறார்கள்.

கே: மொழிச் சுத்தம் அவ்வளவு முக்கியமில்லை என்கிறீர்களே. அது தமிழையே அடையாளம் தெரியாமலாக்கிவிடாதா?

சா. அன்பரசன், உறையூர்.

ப: ஆக்கட்டுமே! ரொம்பச் சுத்தமாக இருக்கிற பழைய தமிழ்ப் பாடல்கள் தமிழ் மாதிரியே நமக்கு இல்லையே. சுத்தமாக அதனைக் காப்பாற்றமுடியாததால் தானே இன்றையத் தமிழ் இப்படி இருக்கிறது! மொழிச் சுத்தம் படைக்கிறவனுடைய நோக்கமல்ல. இதற்காக மொழிச் சுத்தமே படைப்புக்குப் பகை என்று நான் சொல்வதாக நினைக்கலாகாது.

புறச் சுத்தத்தைப்பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கும் ஆஷாடபூதிகளின் மனச் சுத்தத்தைப்பற்றி நாம் கேள்வி கேட்கும்போது, புறச்

சத்தத்தை நாம் மறுக்கிறோம் என்றாகாது. படைப்பின் வீரியம் செயல்பட மொழியின் மரபுகள் மீறப்படுவது தவறாகாது என்று சொல்கிறேன்.

கே: கணையாழி பத்திரிகை பாதி இலக்கியமும் பாதி அரசியலுமாக இருப்பது போல ஞானரதமும் இருந்தால் என்ன?

எஸ். கோபிநாத், கல்கத்தா-11

ப: கணையாழி அப்படி இருக்கிறதே. அதனால் ஞானரதம் அப்படி இருக்க வேண்டாம் என்று நினைக்கிறேன்.

கே: 'சோ'வின் துக்ளக் பத்திரிகை பற்றி தங்கள் கருத்தென்ன?

கலாவேந்தன், மதுரை-1

ப: அதை நான் துக்ளக் பத்திரிகையிலேயே எழுதப் போகிறேன். படித்துக் கொள்ளவும்.

கே: இலங்கை கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களும் தமிழகத்து கம்யூனிஸ்டு எழுத்தாளர்களைப் போலத்தான் எழுதுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். எமது இலங்கை கம்யூனிஸ்டு எழுத்தாளர்களில் பலரும் நல்ல படைப்பாளிகள். இந்த பேதத்தையும் நீங்கள் குறிப்பிட்டிருக்க வேண்டாமா?

மா. கருணாகரன், யாழ்ப்பாணம்.

ப: அதாவது இங்கே உள்ள கம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் Creative ஆக இல்லை என்று நீங்கள் கருதுகிறீர்களா? நல்லது. ஆனால் இங்கு இருப்பவர்களிலும் சிலர் நல்ல படைப்பாற்றல் உடையவர்களாகவும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைக் கெடுப்பதெல்லாம் கட்சி உறவு மட்டும்தான்.

கே: செத்தபாம்பைப்பற்றி உங்களுக்கும் விமர்சனம் உண்டு என்று கூறியிருக்கிறீர்கள். உங்கள் விமர்சனத்தை சுருக்கமாகவாவது தருவீர்களா?

ஜே. சுந்தரராஜன், கடையம்.

ப: சுருக்கமாகவே சொல்கிறேன். சிற்சில இடங்களில் பக்குவமில்லாமலும், ஒரு சிம்பாலிசத்திற்கு வேண்டிய கலை அமைதி இல்லாமலும் இருக்கிறது செத்த பாம்பு. மிகவும் யதார்த்தமாக விவரிக் கப்பட்ட கதையின் முக்கியமான பாத்திரமான அந்த விபச்சாரி யதார்த்தத்திற்குப் புறம்பாகப்படைக்கப் பட்டிருக்கிறாள். கதாசிரியரின் அசட்டுத்தனமான அனுதாபம் அவள்மீது பூசப்பட்டிருக்கிறது. எந்த விபச்சாரியும் தன்னிடம் வருகிறவனிடம் எனக்குத் தொழில் நேரம் என்று சொல்லிக் கொள்வதில்லை — கதைகளில் வருகிறவர்களைத் தவிர! அதுவும் இந்தக் கதையில் விவரிக்கப்பட்ட Rare அல்லாத சாமானியமான 'மலிந்த கிராக்கி'கள் அப்படியெல்லாம் பேசுவதில்லை.

இதுமாதிரி சில விவரங்களிலிருந்து—ஆசிரியரின் அனுபவமாக இது இருந்தாலும்கூட—எழுதும்போது இவர் எழுத்தாளர் ஆகிவிடுவதால் கதையின் ஆன்மா சிதைவுபடுகிறது. அழகான பெண் பொய்யாகச் சிரிப்பது மாதிரி ஆகிவிடுகிறது.

யதார்த்த பூர்வமான கதை எழுதும்போது இப்படிப் பட்ட சிறிய தோல்விகள் ஒரு முழுமையில் ஏற்பட்ட மூளி

மாதிரி ஆகிவிடும். இந்த மாதிரிக் குறைகள் புதுமைப் பித்தனிடம்கூட உண்டு அதற்காக அவற்றைத் தூக்கி எறிந்து விடமுடியாது.

என்னுடைய 'இலக்கணம் மீறிய கவிதை'யில் இதுமாதிரியும் இதைவிட அதிகமாகவும் கூட அவள் பேசுவாள். இது ஒரு குறையா என்று நான் யோசித்துப் பார்க்கிறேன். ஆனால் அதில் அவள் ஒரு Rare case என்று முன்னாலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் செத்தபாம்பில் வருகிற விபச்சாரியின் தலையில் எழுத்தாளன் ஏறி உட்கார்ந்து கொண்டு பேசுவது ரொம்ப அபசுரமாக இருக்கிறது. 'இலக்கணம் மீறிய கவிதை' யில் அவளே ஒரு எழுத்தாளராகக் கூடிய Sophistication உடையவள் அதனால் அங்கு படைப்பாளியின்மீது குறையில்லை. ஆனால் செத்த பாம்பில் அந்தக் குறை இருக்கிறது. என்றாலும் சொல்லுவேன்: செத்தபாம்பு பிரசுரத்திற்குரிய ஒரு கதைதான்.

கே: நவீன ஓவியங்களை நானும் ரசிக்க முயல்கிறேன். ஆனால் ஒரே குழப்பமாக இருக்கிறது. ஒன்றும் புரியவில்லை. ஏன்?

—ஏ. இப்ராகிம், சென்னை-36.

ப: நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற நவீன வாழ்க்கையை விடவா?

கே: இளைஞர் உலகில் (Teen-agers) ஒரு அமைதியின்மை இருப்பதற்கு என்னென்ன அடிப்படைக் காரணங்கள் என்பது பற்றி தாங்கள் யோசித்துப் பார்த்ததுண்டா?

ப: எல்லாக் காலத்திலும், எல்லா தேசத்திலும் இது ஒரு இயல்பு. ஒரு Transition Periodல் (மாறுபாட்டுக் காலத்தில்) இந்த அமைதியின்மை ஏற்படாமல் இருக்க முடியாது. இந்த வயதில் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் புதிய அனுபவங்கள் ஏற்படுகின்றன. தன்னைப்பற்றியும், தானல்லாத பிறவற்றைப் பற்றியும் புதிய அறிவு பிறக்கிறது. அந்த அறிவும் அனுபவமும் புதுமையாக இருப்பதனால், மிகவும் கூர்மைபெற்று உணர்ச்சிக் குருத்தாகவும் இருக்கிறது, பின் விளைவுகளைப் பற்றிய ஞானங்கள் ஏற்படுகிற முன் அனுபவம் இல்லாமையினால் அந்த வயதில் எதிலும் ஒரு முனைப்பும், துடிப்பும் ஏற்படுகிறது. இதனை நல்ல முறையில் ஆக்க பூர்வமாகத் திருப்பி, அவர்களைப் பாதுகாக்க வேண்டியது வளர்ந்தவர்களின் பொறுப்பு. துடிப்பாகவும், அமைதியின்மையாகவும் இருப்பது அவர்களின் குற்றமாகாது. அதைக் கண்டு அஞ்சுகிற அளவுக்கு, அந்தத் துடிப்பையும் முனைப்பையும் அழிவுப் பாதையில் திருப்பிவிடுகிற அளவுக்கு, வளர்ந்த உலகம், பழைய உலகம் பிடிவாதமாகத் தவறுகளையே செய்து கொண்டிருப்பதனால் இந்தத் துடிப்பும் வேகமும் அத்துக்களையும் கட்டுக்களையும் மீறவேண்டிய அவசியம் ஏற்பட்டுவருகிறது. இதை

வளர்ந்த உலகம், பழைய உலகம், தன் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்வதும் ஒரு பகுதியில் நடக்கிறது.

கே: கலப்புத் திருமணங்களும், நாடு, மொழி, இனபேதங்களின் கலப்பில் நிகழும் திருமணங்களும் எந்த அளவுக்கு வெற்றிகரமாக இருக்க முடியும? ஏராளமான சமூக, பழக்க வழக்க முரண்பாடுகளுக்கிடையே, ஒன்றிணைந்த இல்லற வாழ்க்கை என்பது சாத்தியம் தானா?

மகேஷ், சென்னை - 24

ப: இது சம்பந்தப்பட்ட தனி நபர்களைப் பொறுத்த விஷயம். பொதுவாக என்று பார்க்கும பொழுது, நமது சமுதாயத்தில் திருமணம் என்பது ஒரு சமூகபந்தமாகவே இருக்கிறது. எனவே அதிலே ஒரு ரகசியமான தோல்வி தான் ரொம்பப் பேருக்கு எஞ்சுகிறது. எனினும் சமூகக் கௌரவம் கருதி இந்தத் தோல்வியைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல்தான் இங்கே இல்லற வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட அந்த இருவரிடையே முரண்பாடுகள் இல்லாதிருப்பின் வேறு முரண்பாடுகள் அவர்களைப் பாதிக்காது.

எனக்குத் தெரிந்த பல இந்தியர்கள் வெளிநாடுகளுக்குப் படிக்கவோ, அல்லது தொழில் சம்பந்தமாகவோ போய், அங்கே மணம் கலந்து, மேற்கத்தியப் பெண்களை மணந்து இந்தியா திரும்பி, கொஞ்ச காலத்திற்குப் பிறகு அந்தத் திருமணங்கள் தோல்வியில் முடிந்த சம்பவங்களும் நிறைய உண்டு. நமது சீதோஷ்ண நிலையைத் தாங்க முடியாத ஒரே காரணத்திற்காக, விவாகரத்துக் கோரிப் பெற்று, தம் தாய் நாட்டிற்குப் போனவர்களையும் எனக்குத் தெரியும். இதற்காக அவர்களைக் குறை கூறமாட்டேன். ஏனெனில் திருமணம் என்பது ஆனந்தத்துக்குத் தானே தவிர தியாகத்துக்காக அல்ல. தியாகம்கூட ஆனந்தத்துக்குத்தானே தவிர தியாகத்துக்காக அல்ல. வெறித்தனமான பக்தியை (Fanaticism) அடிப்படையாகக் கொண்டவர்கள்தான் தியாகத்துக்காகத் தியாகம் செய்ய முடியும் கலப்பு மணமும், சர்வதேச மணஉறவுகளும் வெற்றிகரமாகஅமைவதற்குப் புறச் சூழ்நிலைகளும், பொருளாதார வசதியும் திருப்திகரமாக இல்லாவிடில் இவை தோல்வியில் முடிவது தவிர்க்க முடியாததே.

கே: ரொம்பப் பழைய கேள்விதான், மன்னிக்கவும். சரியான பதில் கிடைக்காததால் கேட்கிறேன். காதல் என்றால் என்ன?

மணிவண்ணன், சென்னை-4

ப: கேள்வியைரொம்பஅழகாகக் கேட்டிருக்கிறீர்கள். பதிலை அவ்வளவு அழகாகச் சொல்ல முடியாததற்கு நான் முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் காதல் என்று கூறுவது ஆண் பெண் இடையே ஏற்படும் காதல் பற்றித்தானே கேட்கிறீர்கள்? 'செக்ஸ்' தான் அடிப்படை.

இதற்கு அர்த்தம் அதுவே தான். காதல் என்பதல்ல.அது இல்லாமல் காதல் என்பது இல்லை என்பது பொருள். செக்ஸ் இல்லாமல் காதல் என்று யாராவது பேசினால் அதெல்லாம் பரிசிலனைக்குரிய ஒரு Case என்று பொருள். லௌகிகமாக, ஏன் விஞ்ஞான பூர்வமாகப் பேசுவதென்றால் காதல் என்ற வார்த்தைக்கு அவ்வளவு அர்த்தமில்லை. Love is not a scientific term.

மனிதாபிமானம் கூடிய, விட்டுக்கொடுத்து இன்பம் காண்கிற, மன்னித்து மகிழ்கிற, செக்ஸ் அடிப்படையில் ஏற்படுகிற ஆண்-பெண் உறவு தான் காதல்.

இந்தஅடிப்படையில்எழுந்த உறவு, சில Caseகளில், செக்ஸ் என்ற அந்த அடிப்படையையே முற்றாக இழந்துகூடப் போய்விடலாம். ஆனால் அந்த அடிப்படையில் அது எழும்பியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதற்குக் காதல் என்று பெயரல்ல. அதாவது செக்ஸ் என்கிற மூலத்தின் நாகரீகமான வார்ப்பும் அல்லது அதன் By-Product டுமே தான்காதல்.

கே: ஒருவனுக்குச் சொந்தமுள்ள மலரை மற்றவன் அடைய நினைப்பது சரியா?

நேருதர்சன், பேராவூரணி,

ப: மலரைப்பற்றிக் கேட்கிறீர்களா? அது எடுத்தவனுக்குத்தான் சொந்தம். அது உங்கள் வீட்டுச்செடியில் பூத்தது என்கிறீர்களா? பெருந்தன்மையோடு அனுமதித்துவிடுங்கள். செடி உங்களிடம் தானே இருக்கிறது. மறுபடியும் பூக்கும்.

கே: நான் தமிழ் கற்க விரும்புகிறேன். உங்களுடைய அட்வைஸ் வேண்டும். நீங்கள் யாருக்கும் யோசனை சொல்ல விரும்பாவிட்டாலும், உங்களுடைய யோசனை எனக்கு வேண்டும். தயவு செய்து சொல்லுங்கள்.

—க. மனோரஞ்சிதம், மதுரை.

ப: நீங்கள் கேட்பதற்காகச் சொல்கிறேன். நீங்கள் தமிழ் கற்றால் என்ன செய்வீர்கள்? தமிழ் கற்றுத்தருவீர்கள். உங்களிடம் தமிழ் கற்றவர்கள் என்ன செய்வார்கள்? புலவர் ஆவார்கள். அவர்கள் என்ன செய்வார்கள்? தமிழ் கற்றுத்தருவார்கள். தமிழ்ப் புலவர்கள் வாழையடி வாழையாக வளர்ந்து வருவார்கள். அதுதான் உங்கள் லட்சியம் என்றால் உசிதப்படி செய்யவும்.

கே: தவறுகள் குற்றங்கள் அல்ல என்றொரு பரம்பரையே வளர்ந்து வருவதாக ஒரு கட்டுரையில் தீபம் ஆசிரியர் குறைப்பட்டுக் கொள்கிறார். இந்தப் பதப் பிரயோகமே உங்களுடையது என்பதனால் விளக்கம் வேண்டும்.

—மா. மாசிலாமணி, செங்கற்பட்டு.

ப: நண்பர் பார்த்தசாரதி எழுதிய அந்தக் கட்டுரையை நான் படிக்கவில்லை. எனினும் அதுபற்றி விசாரித்த பொழுது இலக்கணப் பிழையோடு எழுதுகிறவர்களைக் குறித்து விமர்சனம் தெரிவிக்க வந்த இடத்தில் நண்பர் பார்த்தசாரதி அவருக்கே உரிய நகைச்சுவைக்காக இதைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பது

எனக்குப் புரிகிறது. பள்ளிக்கூடத்தில்கூட, பிழைகளைக்குற்றங்களாகக் கருதித் தண்டிக்கிற பழக்கம் இப்போது குறைந்து வருகிறது. பிழைகளும்கூட, திருத்தப்படத்தக்கனவே தவிர — தண்டிக்கப் படத் தக்கன அல்ல. தவறுகள் இயல்பு. குற்றங்கள் இயல்பாகிவிடக் கூடாது என்பதற்காகத் தண்டிக்கப்படுவன.

வளர்ந்து வருகிற நாகரிகம் ஒரு காலத்தில் குற்றங்கள் என்று கருதப்பட்டவற்றைகளை யெல்லாம்கூட, தவறுகள் என்று கண்டு அவற்றை திருத்தவே முயல்கிறது. நோய் என்று கண்டு சிகிச்சை தருகிறது. தண்டித்தவர்கள் எல்லாம் அப்படிப்பட்ட நோயாளிகள் என்பதையும் நாகரிக உலகம் கண்டு படித்திருக்கிறது. கசையால் அடித்தல், கழுவில் ஏற்றுதல், குறும்பி அளவாக் காதைக் குடைந்து தோண்டுதல், சிரமறுத்தல் இவற்றையெல்லாம் செய்தவர்கள் காலத்தாலும் நாகரிகத்தாலும் நகைக்கத் தகுந்த நோயாளிகளாவர்.

அவைதாம் குற்றங்கள். அவர்கள் செய்தவைதாம் குற்றங்கள். தவறுகள் வேறு, குற்றங்கள் வேறு.

இப்போது குற்றங்கள் என்று நாம் ஏற்று, தண்டிப்பது நியாயம் என்று தண்டிக்கும் காரியங்களைக்கூடத்தவறுகள் என்று மன்னித்துத் திருத்தக் கூடிய பண்பு வளர்வதே நாகரிக வளர்ச்சி.

குற்றங்களல்ல, தவறுகள் தான் என்று நாம் தீர்மானித்து விட்ட வளர்ச்சியையும குற்றம் என்று கருதி தண்டிக்கிற போக்கு வரவேற்கத்தக்கதல்ல. அப்படி ஒரு போக்குத் திரும்பிவராது. தவறுகள் குற்றங்கள் அல்லதான். நண்பர் பார்த்தசாரதிக்கு இதெல்லாம் தெரியும். விளக்கம் கேட்டதனால் உங்களுக்காக இவ்வளவும் சொல்கிறேன்.

கே: ஞானரதத்தின் அளவை (Size) மாற்றினால் என்ன?

—அ. செல்வராஜ், சேலம்.

ப: பன்னிரண்டு இதழ்கள் இதே அளவில்தான் வரும். ஞானரதத்தை 'வால்யூம்' களாகப் பைண்டு செய்து கொள்ளும் வாசகர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஒரு வால்யூம் முடியும் முன் அளவை மாற்றினால் பைண்டு செய்ய வசதியாக இருக்காது. அதனால் பன்னிரண்டு இதழ்கள் வரை இப்படியே தான் வரும். இதில் யாருடைய யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கே: வள்ளுவர் இங்கே பிறந்தவர் என்பதற்காகப் பெருமைப்படுகிறீர்களா?

நா. நாகலிங்கம், கரூர்.

ப: நான் இங்கு பிறந்தது தான் எனக்குப் பெருமை. நான் எங்கு பிறந்தாலும் அங்கே எனக்கொரு பெருமை காத்துக் கொண்டிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

கே: அப்பல்லோ 13ல் ஏற்பட்ட கோளாறு காரணமாக, அப்பல்லோ வீரர்கள் மண்ணுக்குத் திரும்பி வராமலிருந்திருந்தால்

அந்த வருத்தம் கொடுமையான தாக இருந்திருக்கு மல்லவா?

—காசிராஜன், சென்னை-11

ப: அந்தப் பாக்கியத்தைத் தான் அவர்கள் இழந்து விட்டார்கள். பூமியில் தோன்றிய எல்லா உயிர்களுமே பூமியிலேயே தான் கரைந்திருக்கின்றன. அப்படியில்லாமல், பிரபஞ்ச வெளியில் கரைந்து போகிற பாக்கியம் இதற்கு முன்பு 'லைகா' என்ற நாய்க்குக் கிடைத்திருக்கிறது. சில குரங்குகளுக்குக் கிட்டியிருக்கிறது. இந்த மனிதர்களுக்கு இந்த பாக்கியம் கிட்டவில்லையே என்று இவர்கள் திரும்பிவந்த பிறகு எனக்கு ஒருவிதத்தில் குறையாகவும் இருக்கிறது.

இன்று பல ஊர்களில்
இலக்கிய விவாதக்
கூட்டங்கள் நடக்கின்றன ..

விமர்சனக் கண்ணோட்டம்
பரவலாகப் பெருகியிருக்கிறது...

ந. முத்துசாமியைப் பாராட்டுகிறார்கள்...
வைத்திஸ்வரனைப் படிக்கிறார்கள்
அசோகமித்திரனைப் புரிந்து கொள்கிறார்கள்...
யார் இந்த ஞானக் கூத்தன் என்கிறார்கள்...
வாரப் பத்திரிகைகளில் விட மாதப் பத்திரிகையில் இந்திரா பார்த்த சாரதியும் சுஜாதாவும் நன்றாக எழுதுகிறார்கள் என்கிறார்கள்...

என்ன காரணம்?

கணையாழி தானே?

விலை 40 காசு ஏப்ரல் 1970 இதழ் இப்போது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

KANAIAZHI A-134, Defence Colony, New Delhi-3.

# அறிவிப்பு

ஞானரதத்திற்கு அச்சகம் ஏற்பாடு செய்வதில் சில சிரமங்கள் இருந்த காரணத்தால் இதுவரை குறிப்பிட்ட தேதியில் பத்திரிகையைக் கொண்டுவர இயலவில்லை. இது விஷயத்தில் வாசகர்களின் உணர்ச்சிகளை நாங்களும் பங்கிட்டுக் கொள்கிறோம். அடுத்த இதழிலிருந்து ஆங்கில மாதம் முதல் தேதியன்றே ஞானரதம் கிடைக்கும். ஞானரதம் மாதப் பெயரிடப்படாமல், வரிசை எண்ணிட்டே வெளிவரும்.

—நிர்வாக ஆசிரியர்

# எங்கோ—யாரோ—யாருக்காகவோ...

## 3

அந்தக் கள்ளுக் கடை ஒரு தென்னந்தோப்பின் நடுவே, மணற்பாங்கான பிரதேசத்தில் மிகவும் குளுமையான சூழ்நிலையில் இருந்தது. வெய்யிலே தெரியவில்லை. சுகமாகக் காற்று வீசிக்கொண்டிருந்தது.

சாலையிலிருந்து கடைக்குப் போகப் பிரிகிற பாதையில் ஒரு மரத்தடியில் ஒரு இளம் விதவை சிறிய கடை மாதிரி தென்னங்கீற்றுப் பந்தலுக்குக் கீழே வைத்திருந்தவள் நண்பரை விளித்துக் கேட்டாள்; "சிகரட்டா ஸார் வோணும்?"

"என்ன சிகரட் வெச்சிருக்கே?" என்று நண்பர் அவளிடம் பேச்சுக் கொடுத்தார்.

"கத்திரி—ஆனை—இஷ்டார்—சார்மன்" என்று வரிசையாக அவள் சொன்னாள். இருந்த சிகரட்டுகளில் விலை அதிகமாயுள்ள கத்திரியில் ஒரு பாக்கட்டும் நெருப்புப் பெட்டியும் வாங்கிக் கொண்டார். அவளுக்குக் காசு கொடுக்கப் பர்ஸை எடுத்த போது அவர் கையிலிருந்த 'வாட்டர் ஜக்'கை நான் வாங்கிக்கொண்டேன்.

பிறகு இருவரும் கள்ளுக் கடையின் உள்ளே நுழைகிற வரைக்கும் நண்பர் அந்தச் சூழலையே ஓர் அதிசயமாகச் சுற்றிச் சுற்றிப் பார்த்த வண்ணம் என்னோடு நடந்து வந்தார்.

நான் அவரிடம் ஆங்கிலத்தில் கேட்டேன்: "இதற்கு முன் எப்போதாவது இந்த மாதிரியான கள்ளுக்கடைக்குள்ளே நீங்கள் வந்ததுண்டா?"

"நெவர்!". என்று சுருக்கமாக எனக்குப் பதில் சொன்ன

நண்பர். மொந்தையில் ஒருவன் கள் குடிக்கிற காட்சியில் லயித்து நின்றார்.

அவன் ஒரு தென்னை மரத்தடியில் குத்துக்காலிட்டு அமர்ந்து ஒருகையில் கலயமும் இன்னொரு கையில் இலையில் வைத்த 'பக்கத் துணை'யுமாக நண்பரையும் என்னையும் பார்த்தான். பார்த்து இணக்கமாகச் சிரித்துக் கொண்டே இலையைத் தரையில் வைத்துவிட்டு எங்களுக்குச் சலாம் வைத்தான்.

அவன் இடுப்பில் சாய வேட்டியும் மேலே ஒரு முண்டா பனியனும் அணிந்திருந்தான். சாய வேட்டியின்மேல் பை வைத்த பெல்ட் கட்டியிருந்தான். பெரிய மீசையில் சிறிது நரை.

நண்பர் அவனுக்குச் சலாம் வைத்தார். அங்கே மரத்தடியில் இவனை மாதிரி பல பேர் குடித்துவிட்டும் குடித்துக் கொண்டும் கும்பலாகவும், ஒற்றையாகவும் உட்கார்ந்திருந்தனர். எல்லாருமே சற்று உரத்தஸ்தாயியில் பேசினர். ரொம்ப இரைச்சலாக இருந்தது. பரஸ்பரம் ஒருவனை ஒருவன் செவிடன் என்று நினைத்துக் கொண்டு பேசுவது மாதிரி 'ஓ'வென்று இரைந்து பேசிக் கொண்டனர்.

கள்ளுக்கடையில் உள்ளே நுழைந்ததும் சாக்னுக் கடையின் மசாலா நெடியும், கள்ளின் மணமும் கலந்து வீசின. தரையில் திட்டுத் திட்டாக ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

பெஞ்சுகளின்மீது சிலர் உட்கார்ந்து நாகரிகமாகக் குடித்த வண்ணம் இலையில் என்னவோ வைத்துத் தொட்டு நக்கிச் சுவைத்துக் கொண்டிருந்தார்கள். எல்லாரும் எங்களை — அதாவது எங்கள் உடையைக்காணச் சற்றே ஆச்சரியம் கொண்டாலும் இதுமாதிரி ஆசாமிகள் இங்கு அடிக்கடி வரக்கண்டவர்கள் மாதிரித் தங்கள் காரியத்தில் முனைந்திருந்தனர்.

ஒரு பக்கத்தில் வரிசையாகச் சாக்னுக்கடை சரக்குகளை வைத்துக்கொண்டு ஒரு அலி உட்கார்ந்திருந்தான்.

பெரிய சட்டியொன்றில் மீன் வறுவல் எண்ணெய் மினுமினுக்க நான்கைந்து கிடந்தன. தீர்ந்துபோய் விட்டதுபோலிருக்கிறது. ஒரு அலுமனியத் தட்டில் பெரிய பெரிய வாத்து முட்டைகள் மசாலா தடவி நிறப்பி இருந்தது. அலுமனியம் கரண்டி இடப்பட்ட வாயகலமான தட்டில் ஏதோ குழம்பும் கறியுமாக இருந்தது. பூவரசன் இலைகளில் வறுத்த ரத்தம் வரிசையாகக் கூறுகட்டி வைத்திருந்தது.

அவற்றின்மீது ஈக்கள் வந்து மொய்க்காதபடி அந்த அலி கையில் ஒரு சவுக்குக் குச்சி வைத்து வீசிக் கொண்டே எங்களைப் பார்த்து நாணத்துடன் சிரித்து முகம்திருப்பிக் கொண்டான். முகம் திரும்பியவன் தனக்குப் பின்னுள்ள

தட்டி ஓரமாய் வாயிலிருந்த புகையிலையைத் துப்பிவிட்டு, நண்பரிடம் கூறினன்: "ரத்தம் ஜாடா வறுத்து வெச்சிருக்கு... தின்னு பாருங்க ஸார்..."

"ரத்தத்தை வறுக்கறதா?" என்று நண்பர் என்னிடம் கேட்டார்.

ஆட்டை வெட்டுகிறபோது அந்த ரத்தத்தைக் கிண்ணத்தில் பிடித்து, அது உறைந்த பின் அந்தக் கட்டியை வேக வைத்து உதிர்த்து...

அந்த அலி நண்பருக்கு ஆட்டின் ரத்தத்தை எப்படி வறுப்பது என்பதை ரொம்ப விஸ்தாரமாக விளக்கிச் சொன்னன்.

'முதலில் கள்ளை வாங்கிக் கொண்டு, போகிறபோது இதில் நுழையலாம்' என்றேன நான்.

கள்ளுக்கடையின் மூலஸ்தானம் மாதிரி அந்த மேடையின்மேல் பெரிய பீப்பாயும், பீப்பாய் மாதிரி ஒரு மனுஷனும் அவனுக்குப் பின்னல் சுவரில் அவனை மாதிரியே உருவம் கொண்ட பாவாடைராயன் எனும் அவதார புருஷன் குதிரையின்மீது ஆரோகணித்திருக்கும் ஒரு படமும்—இந்தக் கள்ளுக்கடைக் கலாச்சாரம் எவ்வளவு புராதனமானது என்று உணர்த்திற்று.

அந்த ஆள் எங்களை மரியாதையான புன்னகையோடு வரவேற்றான். நெற்றியில் விபூதியும் சந்தனப் பொட்டு மிட்டுக் கொண்டிருக்கும் அவன் இதை மிகவும் புனிதமான காரியமாயும், உயர்வான தொழிலாகவும் கருதிச் செய்கிற பெரிய மனிதனுகவே தோன்றினன்.

"யோவ் — வானூராரே —" என்று யாரையோ அழைத்து "அந்த நாக்கலிங்களெ கொண்ணாந்து போடுய்யா" என்று எங்களை உபசரித்தான்.

உட்கார்ந்தால் எங்கள் உடை மேலும் அழுக்காகிற மாதிரி இரண்டு மரநாற்காலிகளை—அதில் ஒன்றுக்குக் கை உடைந்திருந்தது - இன்னென்றுக்கு சாய்கிற சாய்வே இல்லாமல் இரண்டு பக்கமும் 'U' மாதிரி சட்டங்கள் மட்டும் தூக்கிக் கொண்டு நின்றன — கொண்டுவந்து போட்டான் வானூரான் என்கிற அந்தக் கிழவன். அவன் எங்கள் அருகே வந்து குனிந்து நிமிர்கிறபோது விட்ட ஸ்வாசத்தில் கள்ளின் நாற்றம் புளித்துக்கொண்டு அடித்தது.

"டேய் — கிளாசை நல்லா கழுவிக் கொண்டா" என்று யாரிடமோ கூறினன் கள்ளுக்கடைக்காரன்.

"வேணும் ஐயா... இதிலே வாங்கிக்கிட்டுப் போகத்தான் வந்திருக்கோம். இந்த ஜக்லே எவ்வளவு புடிக்குமோ அவ்வளவு ஊத்துங்க" என்று வாட்டர் ஜக்கை அவர் முன்னல் அந்த மேஜையின்மீது வைத்துத் திறந்தேன்.

"இருக்கட்டும் ஸார். வாங்கிக்கினு போங்க. நான்

வாணும்ணு சொல்றேன். நான் பிரியமா என் கையாலே ரெண்டு கிளாஸ் தரேன். எப்பிடி இருக்குதுனு சாப்பிட்டுப் பாத்தீங்கன்ணு எனக்கு அதலே ஒரு சந்தேகம்—டேய் நீ கொக்காளா...'' சீக்கிரம் கொண்டாடா'' என்று அந்தப் பயனைச் செல்லமாக அதட்டிக் கூவினான்.

இரண்டு கண்ணாடி தம்ளர்களிலும் தெளிந்த கள்ளை வார்த்து,

''எடுத்துக் குடுடா—மச்சான்'' என்றதும் அந்தக் கோவணாண்டிச் சிறுவன் பய பக்தியுடன் வலது கையில் கிளாசையும், இடது கையால் வலது முழங்கையையும் ஏந்தி ஒவ்வொன்றாக எடுத்து முதலில் நண்பருக்கும் பிறகு எனக்கும் கொடுத்தான்.

நண்பர் மூக்கருகே வைத்து மோந்துப் பார்த்தார்.

சாக்கணக்கடை அலி நண்பரைப் பார்த்துச் சிரித்து ஒரு பெண்போன்ற கனிவுடன் கேட்டான்: ''என்ன ஸார்... ரத்தம் கொண்டாரட்டா? பிரியமாக் கேட்டீங்களே... சாப்பிட்டுப் பாருங்க... ஜோடா இருக்குது'' என்று பூவரசன் இலைகளில் அதைக் கொஞ்சம் தாராளமாகவே அள்ளிக் கொண்டுவந்து எங்கள் கைகளில் வைத்தான். அவன் கை அப்போது என் கைகளில் பட்டபோது அருவருப்பால் என் உடம்பு கூசியதை அவன் அறியாமல் நான் மறைத்துக் கொண்டேன்.

நண்பர் ஒரே மூச்சில் கிளாசில் இருந்த கள்ளைக் குடித்து விட்டுக் கிளாசை நாற்காலியின் ஓர் ஓரமாக வைத்து விட்டு அந்த ரத்தம் வறுவலை ரசித்துச் சாப்பிட்டார்.

''இது நெறையான்னு நாலு பாட்டில் புடிக்கும்'' என்று அளந்து ஜக்கை நிறைத்தான் கள்ளுக்கடைக்காரன்.

எங்கள் நாற்காலியைச் சுற்றிலும் இரண்டு நாய்கள் வந்து காவல் காக்கிறமாதிரி நின்று கொண்டன.

பாண்ட்டும் ஷர்ட்டும் அணிந்த ஒரு—படித்துக் கெட்டமாதிரி தோற்றம் கொண்ட—இளைஞன் குடித்துச் சிவந்த கண்களும் பரட்டைத் தலையுமாய் எங்கள் எதிரில் வந்து மிலிட்டிரிக்காரன்மாதிரி சல்யூட் அடித்து ஏற்கனவே அறிமுகம் உள்ளவன் போலச் சிரித்துக் கொண்டு நின்றான்.

''இந்தாப்பா—உன்னை உள்ளே வரக்கூடாதுன்னு சொன்னேன் இல்லே...போ...போ... நாளைக்கி வா...'' என்று அவனை அதட்டி விரட்டினான் கள்ளுக் கடைக்காரன்.

அவன் சிரிப்பும் சல்யூட்டும் நண்பரைக் கவர்ந்துவிட்டன. என்னிடம் அவர் ஆங்கிலத்தில் சொன்னார்: ''ஓ! அவன் முகத்தைப் பாருங்களேன்... எவ்வளவு ஆனந்தம் கொப்பளிக்கிறது! ஹி இஸ் ஃபுல்! ஆனால் இன்னும் வேணும் போல் இருக்கிறது அவனுக்கு. ... ஆனந்தமே அப்படித்தான்

...நாம அவனுக்குக் கொஞ்சம் 'டாடி' வாங்கிக் கொடுக்கலாமா ?"

"எனக்கு ஆட்சேபணை இல்லை" என்றேன் நான்.

"வேணும் சார். அந்த ஆளுக்கு இதே தொழில்... இன்னக்கி நெறையவே குடிச்சிருக்கான்..." என்று நாங்கள் பேசிக்கொள்ளுகிற விஷயத்தை யூகித்த கடைக்காரன் தடுத்துக் கூறினன்.

"பரவாயில்லே குடிக்கட்டுமே...இந்தாப்பா போய் வாங்கிக்க..." என்ருர் நண்பர். அவன் மறுபடியும் எங்களுக்கு ஒரு சல்யூட் வைத்துவிட்டு ஓடி ஒரு மொந்தையைத் தூக்கிக்கொண்டு வந்து கடைக்காரனிடம் மிகக் குதூகலமான சிரிப்புடன் கள்ளை வாங்கிக்கொண்டான்.

அவன் போட்டிருந்த கால் சட்டையின் பின்புறத்தில் குறுக்கே ஒரு நீளக் கிழிசலின் வழியே தெரியும் பிருஷ்டத்தைக்கூட மறைக்க வேண்டும் என்ற உணர்வில்லாமல் அவன் இருப்பதைப் பார்த்து அப்போதுதான் நான் உணர்ந்தேன். நான் அறிந்ததை நண்பரிடமும் சொன்னேன்: "இவன் புத்தி ஸ்வாதீனம் இல்லாதவன் போலிருக்கிறது."

நண்பர் மிகவும் அர்த்தத்தோடு சிரித்துக்கொண்டே சொன்னர்: "புத்தியுள்ள எவன்தான் ஸ்வாதீனத்தோடு இருக்கிருன் ?"

அவன் குதுகலமாக மொந்தையிலிருந்த கள்ளைக் குடித்துக்கொண்டே ஒவ்வொரு மிடறுக்கும் எங்களை ஒரு முறை பார்த்து நன்றியோடு சிரித்துக்கொண்டான்.

நண்பர் ஏனே அவனைப் பார்த்து மிகவும் மனம் இளகிப்போனுர்.

சாக்னக்கடை அலியைப் பார்த்து அவனுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்கும்படிக் கூறினுர்.

ஓர் இலையில் இரண்டு தோசைகளும் அதன்மீது மீன் குழம்பும் ஊற்றி அவனுக்குக் கொடுத்தான் அலி.

இத்தனைக்கும் அடிக்கடி சிரிக்கின்ற புன்முறுவல் மூலமல்லாது வேறு எந்தவிதமாகவும் அவன் பதில் சொல்லவில்லை.

அவன் சிரிப்பில் ஒரு சோகமும், அவன் தோற்றத்தில் ஒரு பெரிய 'டிராஜிக் லவ் எப்பிஸோடும்' இருப்பதாகத் தோன்றியது. நண்பர் அப்படி நம்பினுர்.

நான் 'ஜக்'கில் நிறைத்த நாலு பாட்டில் கள்ளுக்கும், நாங்கள் குடித்த இரண்டு கிளாஸுக்கும், இப்போது இவனுக்குக் கொடுத்த ஒரு மொந்தைக்குமாகக் கணக்குப் பார்த்துக் காசு கொடுக்கும் போது கள்ளுக்கடைக்காரன் எங்களுக்குத் தந்த இரண்டு கிளாஸுக்குப் பணம் வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டான். ரொம்பக் கண்டிப்பாக உரி

மையுடன் ஒரு சொந்தத் தோடு அவன் காசு வாங்கிக் கொள்ள மறுத்தது நண்பருக்கு மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்கிற்று.

சாக்குக்கடை அலியிடம் சென்று தோசைகளும், வறுத்த ரத்தமும், மீன் வறுவலும் — என்று வகைக்குக் கொஞ்சம் வாங்கிக் மூட்டை கட்டிக்கொண்டு புறப்படும் போது நான் மணியைப் பார்த்தேன்.

இங்கே வந்து அரைமணி நேரத்தை வீணுக்கிவிட்டதையும், அங்கே மரத்தடியில் 'சிவப்புச்சேலை' காத்துக்கொண்டு, தரையில் சித்திரம் கீறியவாறு எங்கள் வருகையை எதிர் நோக்கி இருப்பதையும் எண்ணி நான் நிதானமிழந்து நண்பரை உடனே புறப்படுமாறு அவசரப்படுத்தினேன்.

நண்பர் இந்தக் கள்ளுக் கடைச் சூழ்நிலையின் வாழ்க்கை நெடியில், மனிதப் பண்புகளில் தன்னை மறந்து கிறங்கிய நிலையில் ஆங்கிலத்தில் பிதற்றுகிறமாதிரி, என் தோளில் பதிந்து அழுத்திப் பிடித்துக் கொண்டு சொன்னார்.

எனது பெயரின் இரண்டு வார்த்தைகளின் முதல் எழுத்துக்களைத் தொண்டை கர கரக்க அவர் உச்சரித்து என்னை அழைத்தார்.

"எஸ்!" என்றேன்.

"இதுதான் வாழ்க்கை! இவர்கள் தான் மனிதர்கள்! நாம் நகரத்தில் பார்க்கிற வாழ்க்கை இந்த நாட்டின் வாழ்க்கை அல்ல. அந்த மனிதர்களும் இந்த நாட்டின் பிரதிநிதிகள் அல்ல. நான் எனது நாட்டின் வாழ்க்கையை இங்கே தான் சுவாசிக்கிறேன். ...ஸ்டேட்ஸில் நீக்ரோக்கள் மாதிரி — இங்கே இவர்கள் இருக்கிறார்கள்! இவர்கள் தான் இந்த தேசத்தின் ஆத்மா!"

"பகலெல்லாம் குடித்த பீரோடு கள்ளும் சேர்ந்து ரொம்பவும் தூக்குகிறதா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டேன் நான்.

நண்பர் வாய் விட்டுச் சிரித்தார். பிறகு தான் தான் அந்த 'ஜக்'கைத் தூக்கிக் கொண்டு வருவேன் என்று பிடிவாதம் பிடித்தார். எனக்கும் சௌகரியமாய்ப் போயிற்று.

பாதி வழியில் 'ஜக்'கை ஒரு மரத்தடியில் வைத்துவிட்டு, இடுப்பிலிருந்து நழுவி இறங்கிப் போன 'பாண்ட்'டைத் தூக்குப் பெல்டை இறுக்கிப் போட்டுக் கொண்டு ஜக்கைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்தார். நானும் உதவிக்கு ஒரு கை பிடித்துக் கொண்டு நடந்தேன்.

தூரத்தில் காரும், அதனருகே பளீரென்று சிவப்புப் புடவையும் தெரிந்தன.

ஆங்கிலத்தில் பேசிக் கொண்டே வந்தோம்.

"இந்த 'ஸன்கோட்' எப்படி?" என்றார்.

"குட்! வெரிகுட்" என்றேன்.

"உங்களுக்குப் பிடிக்

கிறதா?" என்றார்.

"ஏன் பிடிக்காமல்..."

"நீங்கள் முதலில் ......ஐ வோன்ட் மைன்ட்" என்று சொல்லிச் சிரித்தார்.

நான் ஒன்றும் சொல்லவில்லை.

"நான் முதலில் போனால்— உங்களுக்கு வேண்டாம் என்று நீங்கள் ஒதுக்கிக் கொள்ளுவீர்கள். எனக்கு அந்த மாதிரி 'இன்ஹிபிஷன்ஸ்' கெடையாது. ஆனால் உங்களுக்கு உண்டு — எனக்குத் தெரியும். என்ன சரிதானே?..."

நான் ஒன்றும் சொல்லவில்லை. சற்று யோசித்தேன்.

எனக்குப் பிராஸ்டிட்யூஸ் என்றாலே இன்ஹிபிஷன்ஸ் உண்டு என்கிற விஷயத்தைச் சொல்ல வெட்கமாக இருந்தது. இவர் என்னையே தப்பாக நினைத்துக் கொள்ளுவாரோ என்று தோன்றியது. இவர் என்னைத் தப்பாக நினைத்துக் கொண்டால் என்னவாம் என்று இப்போது தோன்றுவது போல் அப்போது தோணவில்லை.

"முதலில் போன உடன் ஆளுக்கு ரெண்டு கிளாஸ் கள்ளு குடிப்போம். அவளுக்கு வேணும்கற வரைக்கும் குடுப்போம். அப்பறம் தோசை கறி எல்லாம் திம்போம், நான் கொஞ்சம் நாழி காத்தாடக் காரிலேயே படுத்திருக்கேன். யூ டேக் ஹர்...... கொஞ்சம் தூரம் அந்த ஃபீல்டுக்குள்ளே போயிடுங்க ............ ஹாவ் யுவர் ஃபன்! என்ன! அந்தப் பக்கத்திலே தண்ணி இருக்கு..... இல்லாட்டிதான் என்ன? இட்இஸ் ஆல் ரைட்! அவ அங்கேயே இருக்கட்டும். அப்பறம் நீங்க கார்லே வந்து கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் குங்க...தன் ஐ'ல் ஃபினிஷ்!" என்று பிளான் போட்டுக் கொண்டே வந்தார் நண்பர்.

நான் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாக வந்தேன்.

நாங்கள் காரருகே வந்ததும் மரத்தடியில் நான் நினைத்த மாதிரி ஒரே சோலங்களாய்க் கிறுக்கி வைத்திருந்த அவள் எழுந்து நின்றாள். என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"இதான் சீக்கிரம் வர்ரதா? எவ்வளவு நாழி?" என்று செல்லச் சிரிப்புடன் அவள் கேட்டபோது, திடீரென்று இடத்தை, தூரத்தை, எல்லாவற்றையும் அழித்துக் கொண்டு, வீட்டிலிருந்து புறப்படும் போது "சீக்கிரம் வந்துடுங்க" என்று சொன்னாளே அந்த நினைவும் அவள் உருவமும் என் எதிரே தோன்ற நான் சிரித்துக் கொண்டேன்.

★

# கூடிய மட்டும்

அரிய செய்தி ஒன்று
தெரிய வந்ததென்ற
பெரிய சாமி, செய்தி
தெரிய வைக்க, சப்பான்
நாட்டு மக்கள் அன்று
குட்டை என்றால் இன்னும்
குட்டை இல்லை ; இன்று
நெட்டை என்றார். அதுசரி,
அப்படி அப்போ திருந்தவர்
இப்படி இப்போ துயர்ந்தது
எப்படி என்றேன். புரதமே
இப்படிச் செய்ததென்றார்.

ரொட்டி விளம்பரம் கண்ணில்
பட்டதென்றேன், இருக்கும்,
பட்டிருக்கும். சரி, நம்
ந ட்டு மக்கள் இன்று
நெட்டை இல்லை, கொஞ்சம்
குட்டை என்றார். என்ன,
குட்டையா ஆ? எப்படிக்
குட்டையானார் என்றேன்.

எப்போது பார்த்தாலும் பார் பார் பார்
சப்பானைப் பாரென்று காட்டியதால்
தப்பாமல் நம்மக்கள் தம்வழியில்
சப்பானைப் பின்பற்றினரென்றார்.

வே. மாலி




எனக்கு நண்பர் ஒருவர் இருக்கிருர். வயசு முப்பதுக்குள் தான். மனசுக்கு நூறு நூற்றிச் சொச்சம் ஆய்விட்டது அதற்குள். இந்த இருபதாம் நூற்ருண்டு இப்படியெல்லாம் தலை விரிகோலமாக சீரழியப் போகிறதே என்று தக்க சமயத்தில் எச்சரித்திருந்தால் அவர் பிறவி என்ற உபத்திரவத்தை எடுத்திருக்க மாட்டாரோ என்னமோ யாரும் அந்த விஷயத்தை எவ்வளவு ஸீரியஸாகக் கவனிக்கக் காணேம்.

ஹைக்கோர்ட் கட்டிடத்தைப் பார்த்தாரானல் ஒரு மாதிரி உதட்டை இகழ்ச்சியாகக் கோணிக்கொண்டு 'பாருங்கள் சார்' இது கட்டிடம். கம்ப்ளீட் கருங்கல்லிலேயே கட்டியிருக்கிருன். என்ன கன்ஸ்ட்ரக்ஷன் ... என்ன ஆர்கிடெக்சர். இப்பவும் கட்டிடம் கட்டருங்களே. நெருப்புப் பெட்டி மேலே நெருப்புப் பெட்டியா அடுக்கிண்டே......போச்சு சார்...... அதெல்லாம் போச்சு ..அந்தத் தலை முறையே போயிடுச்சு... மெல்ல மெல்ல அந்தத் தலை முறையே மறைஞ்சு போ[illegible]......"

அவரோடு இலக்கியத்[illegible] பற்றிப் பேசினல் ஆப[illegible] சங்கீதத்தைப் பற்[illegible]னல் ஆபத்து. கலைக[illegible]றிப் பேசினல் ஆபத்து.

"ப்ச...இப்பல்லாம் என்ன சார் இருக்கு! எல்லாம் முடிஞ்சு போயிடுத்து. அந்த தலைமுறையேகுளோஸ். வீணை தனம்மாளோடே போச்சு. சங்கீதம் கிட்டப்பாவோடே போச்சு. ஓவியம் ரவிவர்மாவோடே போச்சு. இலக்கியம் புதுமைப் பித்தனேடே போச்சு"

நமக்கு எந்தெந்த கலைகளில் எந்தெந்த அதாரிட்டிகள் இருந்திருக்கிருர்கள் என்று பூர்விகம் தெரிந்து கொள்ள வேண்டுமானல் ஸ்ரீமான் நண்பரை அணுகி தற்காலச் சீ

றிவு என்ற ஸ்விட்சை அழுத்தினுல் போதும்.

அவரது அபாயச் சங்கு ஒலிக்க ஆரம்பித்து விடும். கேட்கக் கேட்க ரத்தம் துடிக்கும். இந்த இருபதாவது நூற்ருண்டையே ஒரேயடியாகத் தீர்த்துக்கட்டி விட்டு அவர் விரும்புகிற மாதிரி ரீ-பில்ட் செய்துவிடலாமா என்று தோன்றும்.

முப்பது வயசுக்குள் இப்படி பழுத்துப் போய்விடுவது ஓர் அபூர்வமில்லையா? மேலும் இப்படியெல்லாம் தவறுகளையும் குற்றங்களையும் இந்த இருபதாம் நூற்ருண்டின் சோனித் தனத்தையும் எடுத்துச் சொல்வதற்கு யார் இருக்கிறார்கள்? 'நீங்களெல்லாம் அந்த ஸ்தானத்தை எனக்கு தந்தாலும் சரி...தராவிட்டாலும் சரி என் கடன் எச்சரிக்கை செய்வதே' என்று எவ்வளவு 'இந்த நூற்ருண்டின் பால் அவருக்குக் கருணையிருந்தால் இப்படி 'பிராஃபட்டி'ன் (தீர்க்க தரிசி) ஸ்தானத்தை அவர் ஏற்றிருப்பார்?

ரொம்ப சமீப நாட்கள் வரை நான் அவர் சொல்கிற வார்த்தைகளில் அப்பழுக்கு எதுவும் இருக்க முடியாது என்று நம்பி வந்தேன். போன வாரம் நம் வீட்டில் பச்சைக்கடலை தீர்ந்து விட்டது.

கடைக்குப் போனேன். அதை ஒரு பழைய பத்திரிக்கையில் பொட்டலம் கட்டிக் கொடுத்தான் கடைக்காரன்.

"இந்தக் காலத்து இளைஞர்கள் சீர்கெட்டு விட்டார்கள். ஒழுக்கக் கேடு எங்கும் தலை விரித்தாடுகிறது. லஞ்சப்பேய் நர்த்தன மிடுகிறது. அக்கறையின்றியும் மஹா அலட்சியத்தோடும் எல்லாரும் நடந்து கொள்ளுகிருர்கள். ஒழுக்கமும் வீரமும் மிக்க பழைய தலைமுறைக்குச் சிறிது கூட மதிப்பில்லை"

இப்படி வெகு நீளமாக எழுதப்பட்டிருந்தது. என்னடா இது நம் நண்பரின் தொனி அச்சு அசலாக அப்படியே இருக்கிறதே என்று பார்த்தேன். கீழே ஒரு பக்கத்தைப் புரட்டினுல் இதைச் சொன்னது யார் என்று தெரியும் என்று குறிப்பு போட்டிருந்தார்கள். ஒரு வார காலம் வேட்டையாடி அந்தப் பத்திரிக்கையின் பிரதியைக் கண்டு பிடித்தேன்.

ஸெனிக்காவோ ... டோபோக்ளீலோ ஒரு கிரேக்கப் பெயர். இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தி எழுதப்பட்ட குறிப்பு.

எனக்கு ரொம்ப ரொம்ப வருத்தமாகப் போய் விட்டது. இரண்டாயிர வருஷ காலமாக இப்படி ஒவ்வொரு தலை முறையும் தறி கெட்டுத் தறி கெட்டு சீரழிந்து கொண்டிருக்கிறதே! என்ன இந்த மனித குலத்தின் தலைவிதி! என்று அதை உய்விப்பான் பொருட்டு ஸீரியஸாக சிந்தித்தேன்.

போன நூற்ருண்டில் கூட அதற்கு முந்திய நூற்ருண்டுக்காரர்களால் காலம் போகிற

போக்கைக் குறித்து ஏகமான அளவு கண்ணீர் சிந்தப்பட்டிருக்குமோ என்று சந்தேகம் தோன்றியது.

நடுவில் நண்பரை நான் சந்திக்க நேரம் கிடைக்கவில்லை. என் சந்தேகத்தை அவரிடம் தெரிவித்துக் கொள்ள வாய்ப்புக் கிட்டவில்லை. நான் குருஜியைத் தேடிக் கிளம்பினேன்.

நான் போனபோது குருஜி ரொம்ப 'ஹாட்டாக' இருந்தார்.

ஒரு பெருச்சாளியைப் பார்ப்பதுபோல் என்னை ஏற இறங்கப் பார்த்தார்.

"பையா, மூளையை அதிகம் செலவழிக்காதே" என்று கடூராகத் தெரிவித்தார்.

"இப்படி இந்தத் தலைமுறை ஒழுக்கக்கேட்டில் சீரழிவது, எல்லாரும் சோனியாகப் போயிருப்பது, கலைகள் க்ஷீணித்துப் போயிருப்பது ........" என்று அடுக்கிக்கொண்டே போவதற்குள் கையை உயர்த்தி கண்களை மூடிக்கொண்டே "உஸ்ஸஸ்" என்று ஆபாசமாக என்னை நிறுத்தச் சொன்னார்.

சட்டென்று "இதெல்லாம் உங்களுக்குச் சம்மதமா?" என அவசர அவசரமாக முடித்துக் கொண்டேன்.

பையா ... உனக்கு என்ன வயது?"

"இருபத்தி ஐந்து"

"இதற்குள் ஏன் கிழவன் மாதிரி தொணதொணக்கிறாய்?"

நான் வாயை மூடிக்கொண்டேன்.

"இருபதாவது நூற்றாண்டைப் பற்றி பின் பெருமை பாடப்படும். அச்சமயம் நீ கிழவனாகி பார்க் பெஞ்சுகளிலும் திண்ணைகளிலும் உட்கார்ந்து நீ அதை அலப்பிக் கொண்டிருக்கலாம்."

"இது சரியான பதில் மாதிரி — தெரியவில்லையே" என்று இழுத்தேன்.

"பையா அழவேண்டாம்" என்று புத்திமதி கூறினார்.

"இல்லை" என்றேன்.

"பழசு மட்டும்தான் ஒஸ்தி என்று மூர்க்கப் பிடிவாதம் பிடிக்காதே" என்றார்.

அதற்கும் நான் என் சம்[illegible]தத்தை அறிவித்தேன்.

"பழசை மட்டுமே நீ ஒ[illegible] என்று நினைக்கிற பட்ச[illegible] நீ மியூஸியத்திற்குள் ஜ[illegible] வைத்துக் கொள்ள[illegible] கே உன்னைப் பாதுகா[illegible]ற தொந்தரவு எதுவுமிராது."

"புதுசை வாங்கி ஜீரணித்துக்கொள்ள திராணி வேண்டும். சும்மா சும்மா பழம் பெருமை பேசுகிறவர்கள் தேங்கிப்போனவர்கள். ம[illegible]ஷனை அடுத்த அடி எடுத்து வைக்க வொட்டாமல் ஐயையோ இப்படியாகி விட்டாயே ... ஐயையோ இப்படியா விட்டாயே என்று அரியோ அரியென்று ,-அடிப்பார்கள்— நீ உன் ஜோலியைப்பார்" என்றார்.

நான் விடை பெற்றுக் கொண்டேன்.